
# தாய் மடி தேடி...



கார்த்திகாயினி சுபேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவநதி ஆசிரியர் பரணீதரனுக்கு.

K.Bharaneetharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P.)

# தாய் மடி தேடி...

## கார்த்திகாயினி சுபேஸ்

மீரா பதிப்பகம்
(91 ஆவது வெளியீடு)
கொழும்பு – 06

அன்புடன்
கார்த்திகாயினி சுபேஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் தலைப்பு : தாய் மடி தேடி...

வகை : சிறுகதைகள்

ஆசிரியர் : திருமதி. கார்த்திகாயினி சுபேஸ்

பதிப்பு விபரம் : முதற் பதிப்பு – டிசம்பர் 2010.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : மீரா பதிப்பகம்,
(91 ஆவது பிரசுரம்),
291/6 -5/3 A, எட்வேர்ட் அவெனியூ,
கொழும்பு 06.
தொ.பே: 2582539 / 0775342128

அச்சிட்டோர் : RST Enterprises (Pvt) Ltd.
Colombo 6

அட்டைப்படம் : ஆர்.சி.பிரதீப்குமார்

**விலை : ரூபா 300/=**

**ISBN : 978-955-53158-0-7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. Bhuvanesharan
EDITOR
'JEEVANATHY'
KALAIAHAM
ALVAI (N.P.)

# சமர்ப்பணம்

நான்
பிறந்த
மண்ணுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

முன்னுரை v

அணிந்துரை xii

என்னுரை xvi

நான் சீதையல்ல 01

துள்ள முடியாத புள்ளிமான் 10
(முதற் பரிசு - புதிய அலை கலை வட்டம் - 2002)

தனிமரம் 17
(சிறப்புப் பரிசு - விபவி - 2005)

ஊனம் 28
(சிறப்புப் பரிசு - விபவி - 2005)

அறுவடையாகாத விதைப்புகள் 37

கருமுகில் தாண்டும் நிலவு 51
(முதற் பரிசு - க. சதாசிவம் சிறுகதைப் போட்டி)

உதயம் 66

இப்படியும்! 78

தாய் மடி தேடி... 89
(முதற் பரிசு - செம்பியன் செல்வன் சிறுகதைப் போட்டி)

எச்சில்.. 101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.Bharaneetharan
EDITOR
'JEEVANATHY'
KALALAHAM
ALVAI (N.P.)

# முன்னுரை

இலக்கியத்திற்கு இலக்கு இருக்க வேண்டும். இலக்கு இல்லாத எழுத்தை இலக்கியமாகக் கொள்ள முடியாது.

இலக்கு மக்கள் மேம்பாட்டைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி, மக்கள்; மக்களே வரலாற்றின் உந்துசக்தி. இலக்கியப் படைப்புக்கள் அந்த மக்களின் வாழ்வை அவர்களது இன்ப துன்பங்களை, போராட்டங்களை அவர்களது உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டும்.

மக்களை மறந்து வானத்தையும், முகில்களையும், மலைகளையும், தென்றலையும், காதலையும் பற்றி மாத்திரம் எழுதினால் அது இலக்கியமாகிவிடாது. இயற்கையுடன் மக்களையும் அவர்களது வாழ்வியலையும் இணைக்காமல் படைப்புகள் புனைவதில் பிரயோசனமில்லை. அப்படைப்புகளால் மக்களுக்கு பலனேதுமில்லை.

“சகல கலை வடிவங்களின் தாயாக மக்கள் போராட்டம் இருக்க வேண்டும். மக்களிடமும், ஒடுக்குமுறைக்கு எதிரான அவர்களது போராட்டங்களிலும் ஒரு கலைஞன் அக்கறை செலுத்தாவிட்டால், அவன் வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் தூக்கி எறியப்படுவான்” என்று தெலுங்குக் கவிஞன் கும்மாட்டி விட்டலு இடித்துக் கூறியுள்ளான்.

ஒரு படைப்புக்கு உள்ளடக்கமும் உருவமும் அவசியம். உள்ளடக்கம் இல்லாத ஆக்கம் வெறும் சடம். அதில் உயிர்த் துடிப்பில்லை. உருவம் இல்லாத படைப்பு அது வெறும் கருத்து மாத்திரம் தான். உருவத்தினதும் உள்ளடக்கத்தினதும் சங்கமத்தில் தான் உண்மையான, உயிர்த்துடிப்புள்ள படைப்பு ஜனனிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பு மக்களால் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். இல்லையேல் அது வெறும் காகிதப் பூ, பயனற்ற பூ. மக்களால் புரிந்துகொள்ள முடியாத வார்த்தை ஜாலங்களைக் கொண்டு சிலர் சொற்சிலம்பமாடி ஆக்கங்களைப் புனைகின்றனர். இந்த ஆக்கங்கள் ஒரு சிலரால் தான் புரிந்துகொள்ள முடியும். இந்த ஆக்கங்கள் ஒரு குறுகிய வட்டத்தினருக்கு, குழுவினருக் காக மட்டும்தான் எழுதப்படுகின்றன. இந்த ஆக்கங்களை ஒரு குறுகிய குழுவினரே படித்துத் திருப்தி கொள்கின்றனர். இந்த ஆக்கங்களால் பரந்துபட்ட மக்களுக்கு எதுவித பயனுமில்லை. படைப்புகள் இலகுவானதாக, இனிமையானவையாக இவற்றை மக்கள் படித்து புரிந்து ரசிக்கக்கூடியனவையாக இருத்தல் அவசியம். பாரதியினுடைய பாடல்களைப் பாமரனும், பட்டிக்காட்டா னும் இலகுவில் படித்து விளங்கி ரசிக்கக்கூடியதாக இருக்கின் றன. பக்தி இலக்கியத்திலுள்ள பெரும்பாலான படைப்புகள் சாதாரண மக்கள் படித்து இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியன வையாக உள்ளன. நாவுக்கரசர், மணிவாசகர், பட்டினத்தார் போன்றவர்களுடைய படைப்புகள் சாதாரண மக்களாலும் படித்து புரிந்து கொள்ள கூடியனவையாகவுள்ளன. அதனால் தான் இவை காலத்தை வென்ற படைப்புகளாகத் திகழ்கின்றன.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற நாவுக்கரசரின் படைப்பை எவரும் படித்து புரிந்துகொள்ள முடிகின் றது. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உரு கார்" என்றொரு கூற்றும் உண்டு. மாணிக்கவாசகருடைய திரு வாசகத்தை படித்து புரிந்து பரவசமடையாதார் எவரும் உளரோ? சித்தர் பாடல்களை எவரும் படித்து இலகுவில் புரிந்து கொள்ள முடியும். அதனால் தான் பக்தி இலக்கியப் படைப்புகள் காலத்தை வென்றவையாக திகழ்ந்து நிற்கின்றன.

உன்னத படைப்பாளி எவனும் சன்மானத்தையும் விருது களையும் பரிசில்களையும் இலக்காகக் கொண்டு ஆக்கங்களை புனைவதில்லை. அவன் ஒரு சம்பவத்தையோ அல்லது ஒரு நிகழ்வையோ அல்லது ஒரு அனர்த்தத்தையோ பார்த்து அனுப வித்து, நெகிழ்ந்து அல்லது மன எழுச்சி பெற்று அந்த மன எழுச்சி யின் உந்துதலால் ஒரு படைப்பைப் புனைகின்றான். இப்படிப்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான, உன்னதமான படைப்பாக அது ஜனனிக்கிறது. இப் படைப்பை பரிசுப் போட்டிக்கு அனுப்புவதில் பாதகம் இல்லை. ஆனால், பரிசுப் போட்டிக்காக மட்டும் எழுதுவதை சிறந்த படைப்பாக கொள்ள முடியாது. இந்த எழுத்துக்கள் விரைவில் எழுத்துலகில் இருந்து மறைந்து விடும்.

பாரதியாருடைய படைப்புகளுக்கு யார் பரிசு கொடுத்தது? தமிழ் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் எவரிடம் இருந்து பரிசு பெற்றான்? முற்போக்கு இலக்கிய முன்னோடி மார்க்சிம் கார்க்கி எவரிடம் இருந்து பரிசு பெற்றான்? இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிதா முன்ஷி பிரம்சந்தர் எவரிடமிருந்து பரிசு பெற்றார்? எவரிடமிருந்து அங்கீகாரம் பெற்றனர் இந்த உன்னதபடைப்பாளி கள்? மக்களிடமிருந்துதான் அங்கீகாரம் பெற்றனர். இவர்கள் எல்லாம் எந்த அரசிடமிருந்தோ இலக்கிய அமைப்புகளிடமிருந்தோ எதுவித பரிசையோ அங்கீகாரத்தையோ பெறவில்லை. இவர்கள் மக்களுக்காக எழுதினார்கள். மக்களிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றனர். இந்த உன்னத இலக்கிய கர்த்தாக்கள் இலக்கியத்தை மக்கள் மயப்படுத்தினார்கள். மக்களை இலக்கிய மயப்படுத் தினார்கள்.

சிறந்த படைப்பாளிகளை இனம் கண்டு அவர்களுக்கு விருதுகளையும் பரிசில்களையும் வழங்கி அவர்களை ஊக்கு வித்து வழிகாட்டி நெறிப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சிறந்த படைப்பாளிகள் தோன்றுவர். இதை இலக்காகக் கொண்டு தான் விபவி மாற்றுக் கலாசார மையம் வளர்ச்சியடைந்த படைப் பாளிகளுக்கும் இளம் எழுத்தாளர்களுக்கும் 10 வருட காலமாக வருடா வருடம் இலக்கியப் போட்டிகளை நடத்தி படைப்பாளி களை ஊக்குவித்தது. அத்துடன் இரண்டரை வருட காலமாக மாதா மாதம் சிறுகதை மேம்பாட்டு அரங்கை நடத்தி எழுத்தாளர் களை நெறிப்படுத்தியது. குறிப்பாக விபவி நடத்திய இளம் எழுத்தாளர்களுக்கான போட்டிகளில் (சிறுகதை, கவிதை) நூற்றுக் கணக்கான இளம் எழுத்தாளர்கள் பங்குபற்றினர். இவர்களுள் சிறந்த படைப்பாளிகளாக தாட்சாயணி, சாரங்கா, பிரமிளா செல்வராஜா, கார்த்திகாயினி சுபேஸ் போன்ற பல சிறுகதை எழுத்தாளர்கள் இனங்காணப்பட்டு இவர்களுக்கு பரிசில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டனர். இன்று இவர்கள் சிறந்த படைப்பாளிகளாகத் திகழ்கின்றனர். இப்படைப்பாளிகளில் கார்த்தி காயினி சுபேஸ் தனித்தன்மை வாய்ந்தவர்.

கார்த்திகாயினியினுடைய கதைகள் சமூகம் சார்ந்தவையாக வுள்ளன. மக்கள் நலனில் நாட்டம் உள்ளவையாக இருக்கின்றன. அது மாத்திரமல்ல இக்கதைகள் யதார்த்த பூர்வமானவையாக வுள்ளன. இப்படைப்புகளில் இனவாதத்தையோ அல்லது இன வெறியையோ எள்ளளவும் காணமுடியாது. தனிமனித புலம்பலை இப்படைப்புகளில் காணமுடியாது. பொங்கல் கதைகள், தீபாவளி கதைகள், கிறிஸ்மஸ் கதைகள், காதலர் தினக் கதைகள், கேளிக்கைக் கதைகள் போன்ற "சீசன்" கதைகளை இத்தொகுதி யில் காணமுடியாது. இத்தொகுப்பில் உள்ள சில கதைகள் பரிசுகளை பெற்றிருந்தாலும் பரிசுக்காக எழுதப்பட்ட கதைகளாகத் தோன்றவில்லை. போர்க்காலத்தில் மக்கள் பட்ட அவலங்கள், இழப்புகள், பேரழிவுகள், மக்களின் துன்ப துயரங்கள் அனைத்தை யும் ஆசிரியர் யதார்த்தமாக, உணர்ச்சி பூர்வமாக கலைத்துவத் துடன் தனது சிறுகதைகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

பாத்திரப் படைப்பு, கதை நகர்த்தல், மொழிவளம், கதை சொல்லும் உத்திகள், கற்பனை வளம், பிரதேச மண்வாசனை, சித்திரிப்பு, உள்ளடக்கமும் உருவகமும் சங்கமிப்பு, கலைத்துவம் போன்ற அம்சங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. மேலும் உவமான, உவமேயங்கள், குறியீடுகள் பொருத்தமான முறையில் கையாளப் பட்டுள்ளன.

கார்த்திகாயினியின் இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளை போர்க் காலக் கதைகள், சமூகக்கதைகள், மன உணர்வுகளை வெளிக்கொணரும் கதைகள் என மூன்று பிரிவு களாக வகைப்படுத்தலாம்.

போரினால் ஏற்பட்ட அவலங்கள், அழிவுகள், இழப்புகள், துன்ப துயரங்கள் ஆகியவற்றை கருப்பொருளாகக் கொண்டு நான்கு கதைகள் புனையப்பட்டுள்ளன. "நான் சீதையல்ல...", "துள்ளமுடியாத புள்ளி மான்", "அறுவடையாகாத விதைப்புகள்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“தாய் மடி தேடி” ஆகியவை போர்க்கால கதைகளாகும். “துள்ள முடியாத புள்ளிமான்” கதையில் ஆக்கிரமிப்பு இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சாந்தா என்ற பாத் திரத்தை உள்ளம் நெகிழத்தக்க வகையில் உணர்ச்சி பூர்வமாக கலைத்துவமாக புனைந்துள்ளார் ஆசிரியர். “நான் சீதையல்ல” என்ற படைப்பில் பெண்மையின் சீற்றத்தையும் தர்மாவேசத்தையும் திறம்பட வெளிக்கொணர்ந்துள்ளார். “தாய் மடி தேடி” என்ற ஆக்கத்தில் தாய், தந்தை, சகோதரர்கள் எல்லோரையும் செல் தாக்குதலில் இழக்கும் சிறுவனின், வலது கையின் ஒரு பகுதியும் ஒருகாலும் துண்டிக்கப்படுகின்றது. இச்சிறுவன் தாய்ப் பாசத் திற்காக ஏங்கித் துடிப்பதையும் “நேஸம்மா” அச்சிறுவனுக்கு காட்டும் பாசத்தையும் அற்புதமாக வெளிக் கொணர்ந்துள்ளார் ஆசிரியர்.

போரில் இருதரப்பினர் ஈடுபட்டிருந்தனர். ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அத்துமீறல்களால் மக்களுக்கு ஏற்பட்ட பேரழி வுகள், துன்பதுயரங்கள், உயிரிழப்புகள் ஆகியவற்றை தனது படைப்புக்களில் யதார்த்தமாக, வெற்றிகரமாக வெளிக்கொணர்ந் துள்ளார். ஆனால், மறுதரப்பால் மக்களுக்கு இழைக்கப்பட்ட இழப்புக்களையும் இன்னல்களையும் அழிவுகளையும் ஒரு கதை யிலாவது வெளிக்கொணரத் தவறிவிட்டார்.

“நான் சீதையல்ல” என்ற கார்த்திகாயினியின் முதல் கதைப் படைப்பே அவர் எதிர்காலத்தில் ஒரு சிறந்த சிறுகதைப் படைப் பாளியாக வருவார் என்பதைக் கட்டியம் கூறி நிற்கின்றது. இக்கதையின் கதாநாயகி சீதா ஒருவலுவான முன்னுதாரணமான பாத்திரமாகப் புனையப்பட்டுள்ளது. கதையின் தலைப்பும் முடி வும் வாசகரை சிந்திக்க வைக்கக்கூடியதாக புனையப்பட்டுள்ளது.

“கருமுகில் தாண்டும் நிலவு” கதை எமது சமூகச் சீரழிவைக் காட்டுகின்றது. பாலா என்ற குடிகார ஆசிரியரதும் மனைவியை இழந்த அவரது நண்பன் ஆறுமுகத்தாரின் அடாவடித் தனங்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டும் சிறந்த சிறுகதை. அதே வேளை பாலா மாஸ்டரின் மனைவி சீதாவின் பூகம்பச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீற்றத்தையும் துணிகரமான தீர்மானத்தையும் சிறப்பாக எடுத்துக் காட்டும் கதை.

"காக்கா குருவி எங்கள் சாதி" என்ற பாரதியின் பாடலுக் கொப்ப சந்திரசேகரர் என்பவரைப் பிரதான பாத்திரமாகக் கொண்ட "இப்படியும்" என்ற கதையில் அவர் இரு தெரு நாய்களில் வைத்த பாசத்தையும் அவர் மீது அந்த இரு பிராணிகள் காட்டும் பாசத்தையும் இதனால் ஏற்பட்ட சோகமயமான முடிவையும் வாசகர்களது நெஞ்சங்களை நெகிழவைக்கும் வகையில் புனைந் துள்ளார்.

"உதயம்" என்ற படைப்பில் திருமணமாகி நீண்டகாலமாக பிள்ளையில்லாமல் தவிக்கும் இளம் தம்பதியரின் உணர்வுகளை யும் மனிதாபிமானமற்ற சில பிரகிரிதிகளால் வீசப்படும் சொல் அம்புகளால் அந்த இளம் சோடிகள் படும் மன அவஸ்த்தையை யும் உணர்ச்சி பூர்வமாகச் சித்திரித்துள்ளார் ஆசிரியர். அத்துடன் அத் தம்பதியரின் வீட்டிலுள்ள ஒரு பூனை நான்கு குட்டிகளை போட்டுள்ளதும் அதே வேளை அவர்களது கிணற்றடியில் உள்ள ஒரு சோடைத் தென்னை என்று கருதப்பட்ட மரத்தில் தோன்றிய பாளையையும் பூவையும் எடுத்து இவற்றைக் குறியீடுகளாகக் காட்டி இந்த தம்பதியரின் எதிர்கால வாழ்வை ஒளியுள்ளதாக வெளிப்படுத்தும் வகையில் "உதயம்" கதையை புனைந்துள்ளார் ஆசிரியர்.

சுனாமி பேரலையில் தனது அன்பு மனைவியையும் பாச முள்ள பிள்ளைகளையும் இழந்து தவிக்கும் ஒரு தந்தையின் துன்பியல் கதை "தனிமரம்". இப்படைப்பில் பிள்ளைகளின் ஆசா பாசங்களையும் பெற்றோரின் பாசப்பிணைப்பையும் ஆசிரியர் உணர்வுபூர்வமாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

வாலிப மிடுக்காலும், பணத்திமிராலும் தனது இளமைக் காலத்தில் தான் ஆடிய ஆட்டங்களை, தனது மனைவிக்கு இழைத்த கொடுமைகளை, தனது சண்டித்தனங்களை தனது வாழ்வின் இறுதிக்கால கட்டத்தில் மகாலிங்கத்தார் அசைபோடும் கதை "ஊனம்". "உடலில் ஏற்படும் ஊனத்தை காலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றிவிடும். மனதில் ஏற்படும் ஊனம் மரணம் வரை வலிக்கும்'' என்று நயம் படக்கூறியுள்ளார். இப்படைப்பில் பின்நோக்கிக் கதை சொல்லும் உத்தியை வெற்றிகரமாக கையாண்டுள்ளார் கார்த்தி காயினி.

''எச்சில்'' கதை சாதித்திமிருக்கு வேட்டு வைக்கும் கதை. தாழ்ந்த சாதி பாலகன் ஒருவன் தனது தண்ணீர்ச் செம்பை தீண்டி விட்டான் என்பதற்காக அடித்து துன்புறுத்தியதுடன் அந்தச் செம்பை தடியினால் தூக்கி குப்பையில் வீசுகிற வேலாயுதத்தார் ''சிரட்டையிலை குடிக்கிற நாய்களுக்கு செம்பில தண்ணி கேக் குதோ?'' எனக் கொதிக்கின்றார். அந்தச் சிறுவன் வளர்ந்து பெரிய படிப்பு படித்து லண்டனில் உயர் பதவி வகிக்கின்றான். அந்த அதிகாரியின் கீழே தான் வேலாயுதத்தாரின் மகன் வேலை செய்கிறான். விருந்தில் அவனுடைய குழந்தையின் தட்டிலிருந்த இனிப்பை வேலாயுதத்தார் தான் சாப்பிட நேர்ந்ததை அறிந்து அனுபவிக்கும் மன அவஸ்தையை ஆசிரியர் திறம்பட வெளிப் படுத்தியுள்ளார்.

கார்த்திகாயினியின் சிறுகதைகளில் அவரது மனிதநேயம் மிளிர்கின்றது. அவர் தனது கதைகளில் சமூக அக்கறையை வெளிப்படுத்தியுள்ளதுடன், போரினால் மக்களுக்கு ஏற்பட்ட அவ மானங்கள், பாதிப்புகள், இழப்புகள், துன்பதுயரங்கள் போன்ற வற்றை துல்லியமாக இலாவகமாக வெளிக்கொணர்ந்துள்ளார். அதேவேளை குடும்ப உறவுகள் பந்தபாசங்கள் தனிமனித உணர்வுகள் சமூக அக்கறை ஆகியவற்றை கார்த்திகாயினி கலைத்துவத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்.

''தாய் மடி தேடி'' என்ற இச்சிறுகதைத் தொகுதி கார்த்தி காயினியின் முதல்தொகுதியாக இருப்பினும் காத்திரமான சிறந்த கதைகளைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் கார்த்திகாயினி ஈழத்து சிறுகதைத் துறையில் ஆழமான தடம் பதிப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

**- நீர்வை பொன்னையன்**

18-6/1, கொலிங்வூட் பிளேஸ்,
கொழும்பு 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கடந்த ஒரு தசாப்த காலத்தில் ஈழத்து இலக்கியப் பரப்பில் கவனிப்பைப் பெற்ற பெண் எழுத்தாளர்களில் கார்த்திகாயினி சுபேஸ் முக்கியமானவர். அவர் எழுதிய சிறுகதைகளின் எண் ணிக்கை அதிகமானதாக இல்லாவிட்டாலும் கூட, அவை ஒவ் வொன்றும் ஏதோ ஒரு வகையில் சிறப்பைப் பெற்றிருக்கின்றன. அந்த சிறப்புத்தான் அவரது சிறுகதைகள் இலக்கிய உலகில் பேசப்படுவதற்கும் காரணமாகியிருக்கின்றது. சிறுகதைப் போட்டி களில் பல பரிசில்களையும் அந்தச் சிறுகதைகள் அவருக்குப் பெற்றுக்கொடுத்திருக்கின்றன.

கார்த்திகாயினியின் சிறுகதைகள் ஈழத்து இலக்கிய உலகில் கவனிப்பைப் பெற்றுக்கொண்டமைக்கு பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக சமகாலப் பிரச்சினைகளை தன்னுடைய கதைகளின் கருவாக அவர் பயன்படுத்தியிருக்கின்றார். அந்தக் கருவை கதையாகச் சொல்லும் அவரது பாணியும் அவரது வெற்றிக்குப் பலமாக அமைந்துள்ளது. அதேவேளையில், தன்னுடைய கதைக் களமாகவும் சமகாலப் பிரச்சினைகளின் சூழலையே அவர் கையாண்டுள்ளார்.

தமிழ் இலக்கியத்துறையைப் பொறுத்தவரையில் சிறுகதை என்ற வடிவம் ஒரு பிந்திய வரவாக இருந்தாலும் கூட அது பெற்றுக் கொள்ளும் முக்கியத்துவம் மறுக்கமுடியாததாகும். ஈழத்துச் சிறுகதைகளின் வரலாறு குறுகியதாக இருக்கின்றது என்பது உண்மைதான். இருந்தாலும், அவை அனைத்துமே குறிப் பிட்ட காலத்தில் அரசியல் சமூக நிலைமைகளை வெளிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடிகளாக இருந்துள்ளன. வெறுமனே அதீத கற்பனையில் உருவான கனவுக் கதைகளாகவன்றி, சமூகம் முகங்கொடுக்கும் நெருக்கடிகளை வெளிப்படுத்தும் யதார்த்தக் கதைகளாகவே ஈழத்துச் சிறுகதைகள் இருந்துள்ளன.

இந்த வகையில் பார்க்கும் போது ஈழத்துச் சிறுகதைகளை ஈழத் தமிழர்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகவே கருத வேண்டியுள்ளது. இந்தச் சிறுகதைகளைப் படிப்பதன் மூலமாகவே எமது வரலாற்றையும், குறிப்பிட்ட காலத்தில் சமூகத்தில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களையும் நாம் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளின் சிறப்புக்கு இதுவும் ஒரு காரணம்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் முத்திரை பதித்த எழுத்தாளர் கள் அனைவரும் அந்தந்தக் காலத்தின் அரசியல், சமூகப் பிரச்சினைகளையே தமது கதைக்கான கருவாகவும், களமாகவும் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

கார்த்திகாயினியின் கதைகளும் இதற்கு விதிவிலக்காக இருந்திருக்கவில்லை. பாரிய போர்ச் சூழல் ஒன்றுக்குள் தமிழ்ச் சமூகம் உட்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில்தான் கார்த்திகாயினி யின் சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. போர்ச் சூழலுக்குள் அகப்பட்ட தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்களை கார்த்திகா தன்னுடைய பெரும்பாலான கதைகளுக்கான கருப்பொருளாகக் கொண்டுள்ளார். இதன் மூலமாக சமகாலத்தில் சமூகம் முகங் கொடுத்த நெருக்கடிகளை அவர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

கார்த்திகாயினி ஒரு எழுத்தாளராக மட்டும் இல்லாமல் ஒரு பத்திரிகையாளராகவும் இருப்பதால் சமூகத்தின் பிரச்சினைகளை உள்ளார்ந்தமாகப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அவரு க்கு அதிகமாகவே கிடைத்திருக்கலாம்.

தனது கதைக்கான பாத்திரங்களைத் தேடி அவர் வெகு தொலைவுக்குச் சென்றிருக்க வில்லை. அவரைச் சுற்றியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தான் அவரது கதைக்கான பாத்திரங்களாக அமைந்திருப் பது யதார்த்தமாகக் கதையைச் சொல்ல உதவியிருக்கின்றது. அத்துடன் "யாவும் கற்பனை" என்று கதையை முடித்துவிட முடியாத நிலையையும் இது ஏற்படுத்தியிருக்கின்றது.

கார்த்திகாவின் இந்தச் சிறுகதைகள் இலங்கையிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளிலும்; வாரப் பத்திரிகைகளிலும் வெளி வந்திருக்கின்றன. இவற்றில் சில சிறுகதைப் போட்டிகளில் முதற் பரிசைப் பெற்றுக்கொண்டவை என்பதும் அவரது திறமைக்குச் சான்றாக உள்ளது.

வாரப் பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் அவை தாங்கி வரும் இலக்கிய ஆக்கங்களில் சிறுகதைகள் பிரதான இடத்தைப் பெறுகின்றன. இது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

வாசிப்பு மட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், தரமான சிறுகதைகளைத் தேடிப் படிப்பவர்களின் தொகை கணிச மானளவுக்கு உயர்வடைந்திருப்பதை எம்மால் அவதானிக்க முடி கின்றது.

அந்தவகையில் தான் இளைய தலைமுறையைச் சேர்ந்த தரமான எழுத்தாளர்கள் பலர் அடையாளங் காணப்பட்டுள்ளார்கள். அவ்வாறு அடையாளங் காணப்பட்டு கவனிப்பைப் பெற்றுள்ள இளம் பெண் எழுத்தாளராக கார்த்திகாவும் இருக்கின்றார் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தம்.

கார்த்திகா எழுதியுள்ள 10 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை போர்க்காலத் தையும், அதன் விளைவுகளையும் கதைக்களமாகக் கொண்ட வையாகவுள்ளன.

போர்க் காலத்தில் மட்டுமன்றி போருக்குப் பிந்திய இன்றைய காலத்தில் கூட எமது சமூகம் சொல்லமுடியாத பல நெருக்கடி களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கின்றது. இந்த 'சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாத' சமூகப் பிரச்சினைகளைச் சொல்வதாகவும் கார்த்திகாவின் கதைகள் எதிர்காலத்தில் அமைய வேண்டும். இது வெறுமனே ஒரு இலக்கியப் பணியாக மட்டுமன்றி, சமூகப் பணியாகவும் உள்ளது என்பதே உண்மை.

இப்போது தன்னுடைய முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிடும் கார்த்திகாவைப் பாராட்டும் அதே வேளையில், எதிர்காலத்திலும் இது போன்ற அவரது பணி தொடர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

இதேவேளையில், இந்தச் சிறுகதைத் தொகுதியை மிகுந்த அக்கறையுடன் சிறப்பாக வெளியிட்டுள்ள மீரா பதிப்பகத்தினரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் பாராட்ட வேண்டும். ஈழத்து இலக்கியத்துறைக்கு இவ்வாறான வெளியீட்டு நிறுவனம் ஒன்றை அமைத்து புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் அவர்கள் செய்து வரும் சேவை மகத்தானது. ஒரு எழுத்தாளர் என்பதற்கும் அப்பால் எழுத்தாளர்களுக்கு உதவும் வகையில் அவர் ஆரம்பித்துள்ள இந்த வெளியீட்டுப் பணி காலத்தை உணர்ந்த ஒரு சிறப்பான பணியாகும். நண்பர் வேலோனின் இந்த இலக்கியப் பணி மேலும் தொடர்வதற்கும் வாழ்த்துக்கள்.

**- பாரதி இராஜநாயகம்,**
ஆசிரியர்,
**ஞாயிறு தினக்குரல்,**
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**தா**ய் மடி தேடி... சிறுகதைத் தொகுப்பு நிதர்சனங்களின் பதிவாகவே வெளிவருகின்றது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பின்னரான காலப்பகுதியே எனது எழுத்துப் பயணத்துக்கு கால்கோளிட்டது. உயர்தரத்தில் படித்த புதுமைப்பித்தனின் "ஒருநாள் கழிந்தது," இலங்கையர் கோனின் "வெள்ளிப்பாதசரம்", கு.ப.ராவின் "கனகாம்பரம்" சி.வைத்திலிங்கத்தின் "பாற்கஞ்சி", மற்றும் கு.அழகிரிசாமியின் "தவப்பயன்" போன்ற சிறுகதைகளைப் படித்ததன் தாக்கம் பரீட்சை முடிந்தும் தொடர்ந்தது.

முதற் குழந்தையின் பிறப்பைப் போல் முதல் சிறுகதையின் பிறப்பும் மறக்க முடியாதது தான். ஆரம்பத்தில் வானொலிக்கு "இசையும் கதையும்" எழுதிக் கொண்டும் கவிதைகள் எழுதிக் கொண்டும் இருந்த எனது முதல் சிறுகதையான "நான் சீதை யல்ல...." 1999 இல் உதயன் சஞ்சீவியில் வெளியானபோது நானடைந்த சந்தோசத்தைச் சொல்லிப் புரியவைக்க முடியாது. அதனைத் தொடர்ந்து கடந்த பதினொரு வருடங்களுக்குள் எழுதிய சிறுகதைகளைத் தான் "தாய் மடி தேடி..." தாங்கி வருகின்றது. ஏற்கனவே எழுதிய சில பிரதிகள் யுத்த காலத்தில் தொலைந்து விட்டன.

எனது தனிமுயற்சியால் மட்டும் இந்நூல் வெளிவரவில்லை. என்பின்னே நின்று என்னை ஊக்கப்படுத்தியவர்கள் பலர்.

என் படைப்புகளின் முதல் வாசகியாக இருந்து எப்படி எழுதினாலும் "நல்லா இருக்கு" என்று சொல்லும் அம்மா கு.கருணாவதி. "புத்தகம் வெளியிடப் பணமில்லை" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன போது "கடன்பட்டாலும் பரவாயில்லை முதலில் புத்தகத்தை வெளியிடு" என ஊக்கப்படுத்தியவரும் அவர் தான். யுத்த கால பொருளாதார நெருக்கடிக்குள் (அப்பா ஒரு தபால் ஊழியராக இருந்தும்) முத்திரை பெறுவது சிரமமாக இருந்த காலத்தில் நான் கேட்கும் அனைத்தையும் சிரமம் பாராது வாங்கித் தந்து என்படைப்புகள் ஊடகங்களில் வெளிவரக் காரணமாய் இருந்தவர் அப்பா க. குலநாயகம். "அவ எந்த நேரமும் எழுதிக் கொண்டிருப்பா நாங்கள் தான் எல்லா வேலையையும் செய்ய வேணும்" என்று என்னைத் திட்டித் திட்டி வீட்டு வேலை செய்யும் தங்கை தமிழினி. எதுவுமே பேசாமல் எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்யும் அக்கா ரோகினி என என் குடும்பத்தவர்களின் பங்களிப்பும் என் எழுத்துக்களின் பின்னே நிற்பதை நன்றியோடு நினைவு கூருகிறேன்.

திருமணத்தின் பின் என் அப்பா, அம்மா, சகோதரிகள் செய்த அத்தனை பங்களிப்புகளையும் தனியொருவராகச் செய்து என் எழுத்துக்கு உதவியாக இருந்தவர் எனது கணவர் சுபேஸ் (ஆர்த்திகன் - ஆசிரியர்). அவரையும் பெருமை கலந்த நன்றியுடன் இவ்விடத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

இலக்கிய ஆர்வத்தில் எழுதிக் கொண்டிருந்த எனக்குள் புத்தகம் வெளியிடும் ஆசையை முதன் முதலில் தூண்டி விட்ட வரும் அவர்தான். "ஈழத்து சிறுகதை எழுத்தாளர்களுள் நீரும் ஒருவராக இருக்க வேணும். உமது சிறுகதைகளைத் தொகுப்பாகப் போடவேணும்" என்று அவர் சொல்லும் போது எதுவிதமான உதவியுமின்றி இருவரின் உழைப்பை மட்டுமே நம்பி கொழும்பில் வாடகை வீட்டில் வாழும் நிலையில் அது சாத்தியமாகாத ஒன்று என்றே எனக்குத் தோன்றியது. ஆனால் இன்று இலக்கியத் துறை சார்ந்த நல்லவர்கள் சிலரின் நட்பால் அது சாத்தியமாகிப் போனமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

அடுத்ததாக முக்கியமாக எனது சிறிய தந்தையார் மு.க. சிவானந்தம் அவர்கள் பற்றி குறிப்பிட்டே ஆகவேண்டும். தற்போது யாழ்ப் பாணத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அவர் இலக்கிய படைப்பாளிக்குரிய அத்தனை தகுதிகள் இருந்தும் ஏனோ தன்னை அத்துறையில் அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. நான் பேச்சுப் போட்டிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைப் போட்டிகளுக்கும் போய் நிற்பது அவரிடம் தான். எனக்குள் கொஞ்சம் மொழி ஆளுமை இருப்பதாக நீங்கள் நினைத்தால் அதற்கு அவர்தான் காரணம். அவருக்கும் என் நன்றிகளை மனப் பூர்வமாக தெரிவிக்கின்றேன். பத்திரிகையில் வரும் சிறுகதைப் போட்டி விளம்பரப் பிரதிகளை எனக்கு அனுப்பி போட்டிகளில் பங்கு பெற ஊக்கம் அளித்து கதைகளை விமர்சனம் செய்யும் எனது பெரிய தாயார் திருமதி அமரசிங்கம் திலகவதி அவர்களையும் என் எழுத்துக்களைப் படித்து விமர்சனம் சொல்லும் படித்த மகளிர் திட்டம், மிருசுவில் வாழ் என் ஊரவர்கள், மற்றும் உறவினர்கள் யாவரையும் நன்றியோடு நினைத்துக் கொள்கின்றேன்.

கொழும்புக்கு வந்து 2004 இல் தினக்குரலில் பணிபுரியத் தொடங்கிய பின்னர் தான் எனக்கு இலக்கிய எழுத்தாளர் களுடனான தொடர்பு ஏற்பட்டது. 2005 இல் விபவி மாற்றுக் கலாசார மையத்தின் பரிசளிப்பு நிகழ்வில் மூத்தபடைப்பாளரும் முற்போக்கு இலக்கிய வாதியுமான எழுத்தாளர் நீர்வை பொன்னையன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியமை என் எழுத்துக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே நினைக்கின்றேன். அன்றுமுதல் இன்று வரை எனது படைப்புகளுக்கு ஊக்கம் கொடுத்து வருவதுடன் சிறந்த விமர்சனத்தையும் முன்வைத்து வருகின்றார்.

பின்னர் எமது அலுவலகத்தில் வணிக ஊக்குவிப்பு முகாமை யாளராகப் பணிபுரியும் புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் அவர்களும் என்னை அடையாளங்கண்டு நான் எழுதிய சிறுகதை களை கேட்டுவாங்கி வாசித்து பாராட்டி ஊக்கப்படுத்தினார். அதேபோல எமது ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் ஆர்.பாரதி அவர்களும் நூலை வெளியிடுவதற்கு ஊக்கப்படுத்தி வந்தார். இன்று எனது சிறுகதைகள் நூலுருப் பெற முக்கிய காரணகர்த்தாக் களாக இருக்கும் இம் மூவரும் என் வாழ்நாள் நன்றிக்குரியவர்கள்.

இத் தொகுப்பில் வெளியாகியுள்ள சிறுகதைகள் பற்றி நான் பேசவில்லை. அதுபற்றிப் பேச வேண்டியவர்கள் நீங்கள். யுத்த சூழலில் வாழ்ந்தவள் என்பதால் என் பெரும்பாலான சிறுகதைகள் அவற்றையே கருவாகக் கொண்டுள்ளமை இயல்பானது. நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்ட, அறிந்த, பார்த்த, என்னைப் பாதித்த சம்பவங்களே இங்கே கருக்கொண்டுள்ளன. பத்திரிகை சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகளே இவை. ஆனாலும் அவை செம்மைப்படுத்தப்பட்டு வெளிவருகின்றன.

நெருக்கடியான சூழ்நிலைக்குள்ளும் எனது சிறுகதைகளை வாசித்து செம்மைப்படுத்தியது மட்டுமல்லாமல் சிறந்த முறையில் முன்னுரையை வழங்கிய மூத்த முற்போக்கு எழுத்தாளர் நீர்வை பொன்னையன் அவர்களுக்கும் அக்கறையோடு நல்ல முறையில் இந்நூலைப் பதிப்பித்து உதவிய புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் அவர்களுக்கும், "பணத்தைப் பற்றி யோசிக்காதையுங்கோ அம்மா, முதலில் புத்தகத்தை வெளியிடுவோம்" என ஊக்கப்படுத்தி சிறந்ததொரு அணிந்துரை நல்கிய ஞாயிறு தினக்குரல் ஆசிரியர் பாரதி இராஜநாயகம் அவர்களுக்கும், பிரதம ஆசிரியர் வீ. தனபால சிங்கம் அவர்களுக்கும் மற்றும் தினக்குரல் நிறுவுனர் எஸ்.பி. சாமி அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது சிறுகதைகளைப் பிரசுரித்த தினக்குரல், உதயன் - சஞ்சீவி, இடி பத்திரிகைகள் மற்றும் ஞானம், ஜீவநதி, நதி சஞ்சி கைகளின் ஆசிரியர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் குறிப்பாக ஞானம் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றதைத் தொடர்ந்து என்னைத் தொடர்ச்சியாக ஊக்கப்படுத்திய ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அட்டைப்பட ஓவி யத்தை அழகாக வரைந்து தந்த பிரதீப்குமாருக்கும் எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளும் அதேநேரம் நான்படித்த பாடசாலை களான உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் மற்றும் யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்களையும் இத்தருணம் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

ஈழத் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை இளம் படைப்பாளர்களுக்குக் கிடைத்த ஒருவரம் மூத்த படைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் ஊக்குவிப்பும் ஒத்துழைப்பும் தான். அந்தவகையில் என் படைப்புகளை வரவேற்று என்னைத் தட்டிக் கொடுத்த மூத்த, சக எழுத்தாளர்கள், வெளிநாடுகளில் இருந்தும் தாய் மண்ணில் இருந்தும் தொலைபேசி, கடிதங்கள், மின்னஞ்சல் மூலமும் என் எழுத்துக்களைப் பாராட்டி உற்சாகப் படுத்திய படைப்பாளர்கள், எனது அலுவலக நண்பர்கள் அனைவரும் என் நன்றியறிதலுக்கு உட்பட்டவர்களே.

"தாய் மடி தேடி..." இப்போது உங்கள் மடிகளில் தவழ்கின்றது. எனது நீண்ட நாள் கனவு நனவாகி மனதில் மகிழ்ச்சி மிதக்கிறது. உங்களுக்கும் இந்தத் "தாய் மடி தேடி..." திருப்தியையும், சந்தோசத்தையும் தரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நன்றி.

- **திருமதி. கார்த்திகாயினி சுபேஸ்**

*இல. 111, படித்த மகளிர் திட்டம்,*
*மிருசுவில்.*
T.P.: 0772990538



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சீதையல்ல

**சு**வரில் இருந்த கடிகாரம் ஆறு முறை அடித்து ஓய்ந்தது. கைவேலையாய் இருந்த கமலம் திடுக்கிட்டாள்.

“கடவுளே பொழுதுபட்டுப் போச்சு இவள் சீதாவை இன்னும் காணேல, ச்சா. இதுகள் போனா போன அலுவலை முடிச்சுக் கொண்டு நேரத்துக்கு வீட்டுக்கு வருதுகளே, கதை கண்ட இடம் கைலாயம் எண்டு நிக்குதுகள். கொள்ளை, கொலை எண்டு காலமும் கெட்டுப் போய்க் கிடக்குது. போனவளையும் காணேல,” தனக்குள் நினைத்தவளாய் வாசலுக்கும் வீட்டுக்கு மாக மாறிமாறி நடந்தாள். மகளைக் காணாது கமலம் நெருப்பின் மேல் நிற்பது போல் தவித்தாள். அவள் உள்ளம் பல முறை பிள்ளையாரை வேண்டிக் கொண்டது.

பொறுமையையிழந்தவளாய், “இஞ்சருங்கோ எங்க நிக்கிறி யள்?” எனக் கணவனை அழைத்தாள் கமலம்.

“என்னப்பா நான் இஞ்ச கிணத்தடியில தானே நிக்கிறன் நீ ஏன் உந்தக் கத்துக் கத்திறாய்?” அவள் மேல் எரிந்து விழுந்தார் செல்லத்துரை.

அருகில் வந்த கமலம் “இஞ்சருங்கோ அப்பா. இவள் சீதா ஏதோ புத்தகம் வாங்கவெண்டு உவள் சாந்திவீட்ட போனவள் ஆறு மணிக்கு மேல ஆச்சு இன்னும் அவளைக் காணேல ஒருக்கால் போய்ப் பார்த்துக் கொண்டு வாறியளே?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன நான் போய்ப் பாத்துக் கொண்டு வாறதோ, அவள் தூர இடத்துக்கே போனவள்? உதில இருக்கிற சாந்தி வீட்டை தானே போனவள், போனவளுக்கு வரத் தெரியும். இதிலை நிண்டு சத்தம் போடாமல் நீ போய் உன்ரை அலுவலைப் பார்” என்றபடி கிணற்று நீரை வாளியில் கோலி அள்ளத் தொடங்கினார் செல்லத்துரை.

‘டொம் டட்டும்’ காதைச் செவிடாக்கும்படி கேட்ட வெடிச் சத்தத்தின் அதிர்ச்சியில் கிணற்றுக் கயிற்றைப் பிடித்திருந்த செல்லத்துரையின் கரம் நழுவியது. நீர் நிறைந்த வாளி கிணற்றுக்குள் “தொபீர்” என விழுந்தது. சில விநாடிகள் திகைத்து நின்றவரை “பட பட” என தொடர்ந்து கேட்ட துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் சுய நினைவுக்கு கொண்டு வந்தது. பயமும் அவரைப் பிடித்துக் கொண்டது.

“பிள்ளையையும் காணேல்ல. வெடிச்சத்தமும் கேக்கிது. என்ன நடக்குதோ? கடவுளே பிள்ளையாரப்பா என்ர பிள்ளைக்கு ஒண்டும் நடக்கக்கூடாது” கமலத்தின் தாயுள்ளம் தவித்தது.

போனவள் வருவாள் தானே என்று சொன்ன செல்லத்துரை வெடிச் சத்தத்தின் பின் கமலத்திடம் வெடியாய் வெடித்தார்.

“குமர்ப்பெட்டையை இந்த நேரத்தில எங்க விட்டனி? நாடு கிடக்கிற கிடையில நாளைக்கு கலியாணம் முடிச்சுப் போறவளை கண்டபடி றோட்டில திரிய விட்டனியே? அவளுக்கு ஏதும் ஒண்டெண்டால் சம்பந்தி வீட்டுக்காறருக்கு என்ன பதிலைச் சொல்லிறது? உனக்கு எத்தின தரம் சொல்லுறது.

டேய் தம்பி என்ன, என்னடா விழுந்தடிச்சு ஓடிவாறாய், என்ன நடந்தது?” கமலத்தை கண்டபடி திட்டிக் கொண்டிருந்த செல்லத்துரையின் குரல் மகன் ரமணன் வேர்க்க விறுவிறுக்க வருவதைப் பார்த்ததும் பதற்றத்துடன் மகனிடம் தாவியது.

“உந்த உந்த அரசடிச் சந்தியில ‘கிறனைற்’ எறிஞ்சு போட்டு ஓடிட்டாங்கள் ஆமி கண்மண் தெரியாமல் கண்டபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டான். நானும் அதாலை வந்து கொண்டிருந்தனான் ஏதோ ஒண்டும் இல்லாமல் தப்பியிட்டன்'' என்று தன்னைத் தானே ஒரு முறை பார்த்துக் கொண்ட ரமணன் ''அதுசரி தங்கச்சி எங்க? உங்க தான் நிக்கிறாளோ?'' என்று கேட்டது தான் தாமதம் கமலம் தலையில் கைவைத்து ஓ என அழுதேவிட்டாள்.

புரியாமல் தன் அருகே நின்ற ரமணனிடம் ''தம்பி பிள்ளை சாந்தி வீட்ட போட்டுவாறன் எண்டு போனாள். இன்னும் காணேல. எனக்குப் பயமாக் கிடக்கு. ஒருக்காப் போய்ப் பார்த்துக் கொண்டு வாடா தம்பி'' அழுகையினூடே கமலம் சொல்லி முடிக்க முன்;

''என்ன இந்தச் சண்டேக்க அவனையும் போய்த் துலையச் சொல்லுறியோ? அவளை அனுப்பினது காணாதெண்டு இவனை யும் கலைக்கிறாய் நீ போகாதேடா தம்பி. பிள்ளை வந்திடுவாள்'' என்றார் செல்லத்துரை, தன் மகனுக்கு ஏதாவது நடந்தாலும் என்ற பயத்துடன்.

என்னதான் ரமணன் சீதாவோடு சண்டை போட்டாலும் அவனுக்கு தன் தங்கையில் அளவு கடந்த அன்பு உண்டு, இப்போது அவளைக் காணவில்லை என்றதும் பெற்றவர்களின் சொல்லையும் மீறி தங்கையைப் பார்த்து வரப் புறப்பட்டு விட்டான்.

''எல்லாம் உன்னால் வந்த வினை'' என்று கமலத்தைத் திட்டினார் செல்லத்துரை.

அருகே இருந்த வானொலி ''கவலைப்படாதே சகோதரா... எங்கம்மா கருமாரி காத்து நிப்பா'' என்று அவருக்கு ஆறுதல் கூறும் வகையில் பாடிக் கொண்டிருந்தது.

''ச்சா இது ஒரு பக்கத்தால கழுத்தறுக்கிறது'' ஆத்திரத் துடன் அதை நிறுத்திவிட்டு யோசனையில் ஆழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலம் கைகளில் தலையைக் கொடுத்தபடி வாசல் படியிலேயே அமர்ந்துவிட்டாள்.

சீதாவுக்கு இருபத்து நான்கு வயது. அடக்கத்துடன் கூடிய அழகு நிறைந்தவள். அவளுடைய இந்த அழகைக் கண்டு தான் கனகத்தாரும் அவர் மனைவி செல்லம்மாளும் தம் ஒரே மகன் சங்கருக்குத் திருமணம் செய்ய எண்ணினார்கள். சீதாவின் குறிப்போடு சீர் வரிசையும் பொருந்தவே திருமணமும் நிச்சயம் ஆகிவிட்டது. கொழும்பில் வேலை பார்க்கும் சங்கர் இங்கு வந்து சீதாவைத் திருமணம் செய்து கொழும்புக்குக் கூட்டிச் செல்வ தென்றும், கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான போக்கு வரத்து சீரின்மையால் சங்கர் வந்ததும் ஒரு நல்ல நாளில் இருவருக்கும் திருமணம் என்றும் ஏற்பாடாகியது. இப்போது சீதாவுக்கு ஒண்டெண்டால் சம்பந்தி வீட்டார் என்ன சொல்லு வார்களோ?" என்ற பயம் இருவரையும் கலங்க வைத்துக் கொண்டிருந்தது.

வேர்த்து விறுவிறுக்க உள்ளே வந்த ரமணனைப் பார்க்கையிலேயே ஏதோ விபரீதம் என்பதைப் பெற்றவர்கள் இருவருமே உணர்ந்து விட்டார்கள். அவனது கண்கள் சிவந்து கலங்கியிருந்தன.

"தம்பி சீதா எங்கேடா?" என்று கேட்ட தாயிடம்;

"அம்மா, அம்மா நாம் ஏமாந்திட்டம்" என்றான் எங்கோ வெறித்துப் பார்த்தபடி.

"என்ன என்னடா சொல்லுறாய்?" என்று அழ ஆரம்பித்த தாயை;

"உஸ் சும்மா அழுது ஆர்ப்பாட்டம் செய்யாமல். நான் சொல்லுறதை பொறுமையாய்க் கேளுங்கோ" என்று கூறித் தொடர்ந்தான் ரமணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கச்சியின் உயிருக்கு ஒரு பாதிப்புமில்லை ஆனா அரசடியில் கடை வச்சிருக்கிற என்ர சினேகிதப் பொடியன் ரவி சொன்னான் தங்கச்சியை ஆமி பிடிச்சுக் கொண்டு போறாங்களாம். வீட்டில சொல்லி விடும்படி ரவியிடம் சீதா சொல்லி விட்டுப் போனாளாம். சண்டை நடக்கிற நேரத்தில அதால வந்து கொண்டிருந்தவளாம். சந்தேகத்திலை அவங்கள் பிடிச்சுக் கொண்டு போட்டாங்களாம். மொத்தமா ஆறு பேரப் பிடிச்சாங்களாம், அதிலை மூண்டு பெட்டையளாம்" என்று நடந்தவற்றை தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தான். பெற்றவர்களோ துடிதுடித்தார்கள். கூடப்பிறந்தவனோ செய்வதறியாது திகைத்தான். அவர்கள் மனதைப் போலவே அந்த வீடும் இருளில் மூழ்கி சோகத்தில் திளைத்திருந்தது.

நாட்கள் உருண்டோடின. சீதாவைப் பற்றி இராணுவ அதிகாரியிடம் விசாரித்தபோது அவளை அனுராதபுரத்துக்கு அனுப்பியாகிவிட்டது என்றார்கள். அவளை விடுதலை செய்வதற்காக இரண்டு மாதமாக படாதபாடுபட்டார்கள். ஒரு வழியாய் சீதாவுக்கு விடுதலை கிடைத்தது. இதோ அவள் நாளை வரப் போகிறாள். தாயுள்ளம் சந்தோஷத்தால் பூரித்தது. எனினும் ஒரு சிறு சந்தேகம் அவளது நெஞ்சை நெருடியது. அதைத் தன் கணவனிடமே தெரிவித்தாள் கமலம்.

"இஞ்சாருங்கோ அப்பா என்ன நான் கூப்பிடுகிறது கேக் கேல்லையே!" பத்திரிகையில் 'அனுராதபுரத்திலிருந்து விடுதலை செய்யப்படுவோர் விவரங்கள்' என்ற செய்தியில் தன் மகளோடு வேறு யார் யார் விடுதலையாகிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த செல்லத்துரையர் "ம்ம் கேக்கிது. என்னண்டு சொல்லன்?" என்றார்.

"இல்ல வந்து இவை, அது தான் எங்கட சம்பந்தி வீட்டாக்கள், பிள்ளையை ஆமி பிடிச்சுக் கொண்டு போனதை அறிஞ்சு என்ன ஏது எண்டு விசாரிக்க வந்திட்டுப்போனாப் பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேந்து வரவும் இல்லை, அதுக்குப்பிறகு அவ்வளவாகக் கதையு மில்லை என்னண்டு தெரியேல" என்று இழுத்தாள் கமலம்.

"இஞ்சபார் நீ தேவையில்லாமல் இல்லாததையும் பொல்லா ததையும் நினைச்சுக்கொண்டு ஒவ்வொரு கதையாய்ச் சொல் லாதை சரியோ? பிள்ள நல்லபடியா வாறாள் எண்டு சந்தோஷமா இருக்கிறதை விட்டுட்டு தேவையில்லாத கதை கதைச்சுக் கொண்டிருக்கிறாய். அதுகள் பிள்ளேன்ர கவலையில நாங்கள் இருக்க, தாங்களும் வந்து நிண்டு ஏன் இன்னும் கவலையைக் கூட்டுவான் எண்டுதான் வரேல்லையாக்கும். நீ சும்மா இரு பாப்பம்." அந்தக் கதைக்கு அப்போதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாலும், அவரின் மனதிற்குள்ளும் இதே சந்தேகம் எப்போதோ எழுந்து விட்டது.

'பிள்ள போனதில இருந்து ஊரின்ரை வாயும் சும்மா இல்ல. அதை இதை தேவையில்லாமல் அவளைப் பற்றி கண்ட படி கதைக்கிதுகள். பொம்பிளைப் பிள்ளை என்றால் என்னவும் கதைக்கலாம் என்ற நினைப்போ? ச்சா, என்ன உலகம்? நாளைக்குத் தங்களுக்கும் இப்பிடி ஒரு நிலை வராது எண்டதற்கு என்ன உத்தரவாதம்? ஆனால் சம்பந்த பகுதி நல்ல மனிசர். ம், நாங்கள் நினைக்கிற மாதிரி என்ன நடக்கிறது? பிள்ள நல்லபடியா வந்து சேருதே அதே பெரிய காரியம், எல்லாம் அவன்ர கையில தான்' தன்னைத் தானே தேற்றிக் கொண்டார் செல்லத்துரை.

நீண்ட நாட்களுக்குப் பின் தன் உறவுகளைக் காணும் போது சீதாவால் சந்தோஷத்தைத் தாங்க முடியவில்லை. தாயைக் கண்டதும் மகிழ்ச்சியும் துக்கமும் ஒன்று சேர்ந்து வெளிவர தாயைக் கட்டிக்கொண்டு அழுதே விட்டாள்.

என்னதான் அவள் சந்தோஷமாக இருந்தாலும் ஊராரின் உறுத்தும் பார்வைகளை சீதாவால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய் உதில போறாளே அவள் தான் சீதா, இரண்டு மாதமா ஆமிக்காறன் பிடிச்சு வைச்சிருந்தவன்" என்று அவள் காது கேட்கும்படியே பேசிய வார்த்தைகளை அவளால் தாங்க முடியவில்லை. அவள் வீட்டை விட்டு வெளியில் வரவே கூசி னாள். 'ஒரு பிழையும் செய்யாமலே எனக்கு ஏன் இத்தனை துன்பம்? பெண் என்றபடியால்தானே இவ்வளவும் கதைக்கிறார் கள்? சிறைக்குப்போய் வந்தால் கெட்டுப்போனவள் என்று அர்த்தமா? என்னோடு விடுதலையாகிய மற்றப் பெண்களுக்கும் இதே நிலைதானா? மொத்தத்தில் கைதாகும் பெண்களின் நிலை இதுதான் என்றால் அவர்களின் எதிர்கால வாழ்க்கையே கேள்விக்குறிதானா? ச்சா என்ன உலகம்? என்ன மடத்தனம்?" என்று தன்னை நினைத்தும் தன்னைப்போன்ற நிலையிலுள்ள தமிழ்ப் பெண்களை நினைத்தும் தனது நெஞ்சோடு வருந்தினாள் சீதா.

சீதா வந்து மூன்று நாட்கள் ஓடிவிட்டன. காலைப் பத்திரி கையோடு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த செல்லத்துரை வாசலில் ஏதோ அரவம் கேட்டு எட்டிப் பார்த்தார். அவரின் முகம் ஆச்சரியத்தாலும் சந்தோஷத்தாலும் மலர்ந்தது.

"கமலம் இஞ்சபார் ஆர் வருகினம் எண்டு" என்ற கண வனின் குரலைக் கேட்டு ஆச்சரியத்தோடு எட்டிப்பார்த்தாள் கமலம். அங்கே சம்பந்தி கனகத்தாரும் செல்லம்மாளும் அவர் கள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

"பாத்தியே! நான் சொன்னன் அதுகள் நல்ல மனிசர் எண்டு. நீதான் தேவையில்லாமல் அலட்டிக் கொண்டிருந்தனி. சரி சரி, அதுகள் வந்திட்டுதுகள். உள்ளுக்க கூட்டிக்கொண்டு வந்து நல்லபடியாகக் கவனி" கட்டளை இட்டுவிட்டு அவசரமாகக் கிணற்றடிக்குச் சென்றார்.

சம்பந்தியை உபசரித்து விட்டு கமலம் சீதாவை அழைத் தாள் "சீதா, அம்மா சீதா, இஞ்சபார் ஆர் வந்திருக்கினம் எண்டு" தாயின் குரலைக்கேட்டு அறையை விட்டு வெளியே வந்தாள் சீதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகத்தாரையும் செல்லம்மாளையும் கண்டதும் மகிழ்ச்சியில் "ஆ... மாமாவும் அத்தையும் வந்திருக்கினம் வாங்கோ எப்ப வந்தனிங்கள்?" வரவேற்றவளை கமலம், இடைமறித்து "சீதா! அத்தைக்கும் மாமாக்கும் ரீயும் பலகாரமும் எடுத்துக் கொண்டுவா" என்றாள். அதை ஏற்று சீதா உள்ளே செல்லத் திரும்பிய போது செல்லமாளின் குரல் தடுத்தது.

"வேண்டாம் பிள்ளை நில்லு. இஞ்ச பாருங்கோ அத்தை, மாமன் உறவு கொண்டாடவோ, இல்ல விருந்துண்ணவோ இப்ப நாங்கள் வரேல. ஒரு முக்கியமான விஷயம் சொல்லிப் போட்டுப் போவம் எண்டுதான் வந்தனாங்கள்" செல்லம்மாளின் இந்த வார்த்தைகளால் கனகத்தார் தவிர மற்ற அனைவருமே அதிர்ந்தனர். "நீ நீங்கள் என்ன சொல்லுறியள் செல்லம்மாக்கா" என்று இழுத்தாள் கமலம்.

செல்லம்மாள் தன் கணவனைப் பார்த்தாள், அந்த பார்வையைப் புரிந்துகொண்ட கனகத்தார் "இஞ்ச பாருங்கோ, உங்கட பிள்ளை இரண்டு மாதமா எங்கட பார்வையில இல்லாமலும், உங்கட பார்வையில இல்லாமலும் அன்னிய இடத்திலை இருந்திட்டு வந்திருக்கிறாள். இவளை நாங்கள் மருமகளாக்கிக் கொண்டால் நாளைக்கு ஊருலகம் எங்களைப் பற்றி என்ன நினைக்கும்? அதுகள் எங்கள மதிக்குங்களே? அதால நாங்கள் தம்பிக்கு வேற இடத்தில பொம்பிள பாத்திட்டம். அதைச் சொல்லிப் போட்டுப் போவம் எண்டு தான் வந்தனாங்கள். உங்களுக்கு இஷ்டம் என்றால் கலியாண வீட்டுக்கு வந்திட்டுப் போங்கோ" என்றார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த செல்லத்துரை கோபத்தில் வெடித்தார்.

"என்ன வேற இடத்தில பொம்பிள பாத்திட்டியளோ? இஞ்ச வந்து விருந்து கொண்டாடி கைநனைச்சுப் போட்டு இப்ப மாட்டம் எண்டால் என்ன உங்கட கதை? ம், உங்களுக்கு ஒரு பெட்டை இருந்தால் இப்படிச் சொல்லுவியளோ?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோபப்படாதையுங்கோ செல்லத்துரை அண்ணை. தாலி கட்டுற நேரத்தில கூட சில கலியாணம் நிண்டு போகுது. இப்ப இதெல்லாம் பெரிய விஷயம் இல்லப் பாருங்கோ. அந்தக் காலத்திலேயே இராவணனின்ர சிறையில இருந்து சீதையை மீட்டாப் பிறகு இராமர் கூட அவளை சனத்துக்கு முன்னால தீக்குளிக்க வச்சுத்தான் தன்னோட சேர்த்துக் கொண்டவர் எண்டது உலகத்துக்கே தெரியும் தானே" என்றாள் செல்லம் மாள்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சீதாவால் கோபத்தைப் பொறுக்க முடியவில்லை. "சீ நீங்களெல்லாம் ஒரு மனிசரே? அப்பா, அவை போகட்டும். நீங்கள் சும்மா இருங்கோ இப்போதாவது அவேன்ரை அற்பப் புத்தி தெரிஞ்சுதே எண்டு சந்தோஷப்படுங்கோ. அந்த புனிதமான இராமாயணத்தோட உங்கட புத்தி கெட்ட கதையை இழுக்க வேண்டாம். அண் டைக்கு அந்தச் சீதை தீக்குளிச்சு ராமனோட சேர்ந்தாள் எண்டு என்னையும் தீக்குளிக்கச் சொல்லுறியளோ? நான் சீதையில்ல. சீதா எண்டத தெரிஞ்சு கொள்ளுங்கோ. உலகத்தில எல்லாரும் உங்களைப் போல கெட்டவங்களில்லை. நல்லவங்களும் நாலு பேர் இருப்பாங்கள் எண்டதை மறந்து போகாதேங்கோ," என்று ஆத்திரத்தோடு பேசிவிட்டு தன் அறையை நோக்கி விரைவாக நடந்தாள். அவளது நிமிர்ந்த முதுகைப் பார்த்தபடி அனைவரும் திகைத்து நின்றனர்.

"சபாஷ்! சீதா உன்னை என்ர தங்கச்சி எண்டு சொல்ல எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா?" என மனதிற்குள் எண்ணியவனாய் கனகத்தார் தம்பதியினர் வெளியே செல்வதற் காக வழிவிட்டு விலகி நின்றான் ரமணன்.

'கொழும்பில் ஒரு வாரமாக சங்கரைக் காணவில்லை' என்ற துன்பச் செய்தி ஒன்று தம் வீட்டிலே காத்திருப்பதை அறியாத கனகத்தாரும் செல்லம்மாளும் தாம் ஏதோ சாதித்து விட்டோம் என்ற பெருமையோடு தம் வீடு நோக்கி நடந்தனர்.

**- சஞ்சீவி : 27.03.1999**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ள முடியாத புள்ளிமான்

**வா**சலுக்கும் வீட்டுக்கும் மாறிமாறி நடந்துகொண்டிருந் தாள் சாந்தாவின் தாய் கமலம். பிள்ளையார் கோவில் மணிச் சத்தம் கேட்டதும் திகைத்தவளாய் "கடவுளே, ஆறு மணி ஆகிப்போச்சு, சாந்தாவையும் காணேல, காலம்பிற எட்டு மணிக் குப் பள்ளிக்கூடம் போனவள் ஆறு மணி மட்டும் என்ன செய்யிறாளோ, ஊருலகம் கெட்டுக் கிடக்குற கேட்டுக்கு இவளும் யோசனை இல்லாமல் நிக்கிறாள்" என்று சலித்தபடி வீட்டு வாசற்படியில் அமர்ந்து கொண்டாள்.

படலையைத் திறந்து கொண்டு சாந்தா வருவதைக் கண்டதும் பெருமூச்சு விட்டபடி "ஏன் பிள்ளை இவ்வளவு நேரம் செண்டது. உன்னைக் காணாமல் என்ன நடந்ததோ ஏது நடந்ததோ எண்டு தவிச்சுக்கொண்டு இருக்கவேண்டியதாப் போச்சு" என்ற தாயை இடைமறித்த சாந்தா;

"எங்களைப் போன்ற தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் குடுக்கிறம் எண்டு சொல்லிப்போட்டுப் பள்ளிக்கூடம் போகாமால் வீட்டில நிண்டவைக்கெல்லாம் நியமனம் குடுத்திருக் கிறாங்கள். நேர்மையா உழைச்ச எங்களுக்கு நியமனம் இல்லை. தொண்டர் ஆசிரியர் எல்லாரும் சேர்ந்து கூட்டம் வைச்சனாங்கள். அதுதான் நேரம் போச்சு அம்மா" என்றவள் தொடர்ந்து;

"அம்மா ஒரு பெண்ணுக்கு உயிரைவிட எது முக்கியமோ அதுவே போனபிறகு, இனி எனக்கு என்ன நடந்தால் தான் என்ன? நீ என்னைப் பற்றிக் கவலைப்படாதே அம்மா" என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் இறுதி வாக்கியத்தைக் கேட்டதும் தாய் துடித்துப் போனாள். ''ஏனடி இப்படிச் சொல்லுறாய்? நான் பெத்த பிள்ளை யடி நீ, எப்படி உன்னைப்பற்றி நான் கவலைப் படாமல் இருக்க முடியும் சொல்லு'' என்று கண்கலங்கிய தாயைப் பார்க்க சாந்தாவுக்கு கவலையாக இருந்தது. ''ஏன் தான் இப்படிப் பேசினேன்'' என்று கவலைப்பட்டவள் தன்னை யறியாமல் பேசிய வார்த்தைகளால் தாய் கலங்குவதைப் பார்க்கச் சகிக்காதவளாய் ''அம்மா என்னை மன்னிச்சிடு, அம்மா நான் தெரியாமச் சொல்லிப்போட்டேன்'' என்றாள் தாயின் கரங்களைப் பிடித்தபடி.

''பரவாயில்லை இதைவிட இன்னும் எத்தனை பேச்சுக்கள் எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நீ வா குளிச்சிட்டு வந்து சாப்பிடு'' என்றபடி தாய் நடக்க அவளைப் பின் தொடர்ந்து சாந்தாவும் வீட்டினுள் சென்றாள்.

கைவிளக்கின் வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்த சாந்தா, தன் தாய் அருகில் வந்ததை உணர்ந்து, ''என்னம்மா? ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய். உடம்புக்கு ஏதும் முடியாமல் இருக்கிறதா?'' என்று பரிவோடு கேட்டாள்.

''உடம்புக்கு ஒண்டுமில்லை பிள்ளை. உன்னட்ட ஒரு விஷயம் பேசவேணும்'' என்றபடி அருகே இருந்த தூணில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். தாய் தன் திருமண விடயம் பற்றித்தான் பேசப் போகிறாள் என்பதை உணர்ந்து கொண்ட சாந்தா முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டாள், அவளது உணர்ச்சிகள் அற்ற முகம் எதிரே எரிந்து கொண்டிருந்த விளக்கையே வெறித்துப் பார்த்தபடி இருந்தது.

''காலம தரகர் மாணிக்கம் வந்தவர்'' என்று பேச்சை ஆரம்பித்த தாய் சாந்தாவின் செய்கைகளால் ஒரு நிமிடம் தாமதித்துத் தொடர்ந்து பேசினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மயில்வாகனத்தாற்றை இரண்டாவது பொடியனுக்கு உன்ர குறிப்புப் பாத்துப் பொருத்தமாம். அது தான் உன்ர முடிவு கேட்டால்தான் மிச்..." என்று அவள் முடிப்பதற்குள்;

விளக்கினையே வெறித்தபடி இருந்த சாந்தா "என்னைப் பற்றி எல்லா விடயத்தையும் அவர்களுக்குச் சொன்னியா அம்மா" என்றாள்.

"எப்படி அம்மா ஒரு தாயால் இதையெல்லாம் சொல்ல முடியும். சொல்லவேண்டும் என்றுதான் நினைச்சனான் அந்த அநியாயத்தை எல்லாம் என்னால் சொல்ல முடியாமல் போச்சுதம்மா" என்று தன் தலையில் அடித்தபடி அழுதாள் தாய்.

தாய் அழுவதையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த சாந்தா பெருமூச்சு விட்டவாறு, "அம்மா இதுக்கு நான் சம்மதிச்சாலும் இந்தக் கல்யாணத்தை அவர்களாகவே நிறுத்தி விடுவார்கள்." என்றவள், தாயின் அருகே சென்று அவளைத் தன் மடியில் சாய்த்து அவளது நரைத்த தலைமுடியை மெல்ல வருடியபடியே "அம்மா நடக்காத ஒன்றைப்பற்றி கவலைப்பட்டு உன் உடம்பை இன்னும் கெடுத்துக்கொள்ளாதே, எது விதியோ அதுதான் நடக்கும். உனக்கு நானும் எனக்கு நீயும் எண்டு இப்ப வாழ்ந்து கொண்டு இருக்கிறம். இதுவே போதுமம்மா" என்றாள்.

"இல்லைப் பிள்ளை உன்னோட நான் எவ்வளவு காலம் மட்டும் இருக்கிறது? இடையில எனக்கு ஏதும் ஒண்டெண்டால் நீ என்ன செய்வாய்? இருந்த சொந்தம் எல்லாம் இப்ப திக்கு,திக்கா இருக்குதுகள். உன்னையும் ஒருத்தனுக்குக் கட்டி வைச்சா உனக்கு ஒரு துணை கிடைச்சிட்டுது எண்ட நிம்மதியோட நானும் போய் சேர்ந்திடுவன். கடவுள் ஏன் எங்களை இப்படிச் சோதிக்கிறாரோ தெரியாது."

தொடர்ந்து பேசிய தாயை "அம்மா எனக்கு நித்திரை வருகுது. மிச்சத்தை நாளைக்குக் கதைக்கலாம். இப்ப நித்திரை கொள்ளுங்கோ" என்று தாயின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தவள், தாய் நித்திரையானதும் மெல்ல அறையைவிட்டு வாசலுக்கு வந்தாள்.

முற்றத்து வானில் பூரண நிலா காய்ந்து கொண்டிருந்தது. வாசலுக்கு வந்த சாந்தா அப்படியே வாசற்படியில் அமர்ந்தாள். எதிர்வீட்டில் உள்ள இரண்டு பனைகள் அவள் கண்களில் பட்டது. ஒன்று நெடிது வளர்ந்து இரண்டு மூன்று ஓலைகளுடன் நிலத்தில் சரிந்து வீழ்ந்து விடுமாப்போல் இருந்தது. அதன் அருகே அதன் வாரிசுபோலும், அதன் பாதி உயரத்திற்கு வளர்ந்து நிறைந்த ஓலைகளுடன் அழகாய்க் காட்சி தந்தது. ஓலைகள் காற்றில் அசையும்போது அருகே உள்ள தாய்ப் பனையை அன்போடு வருடுவதைப் போல் இருந்தது. அந்த வருடலின் சுகத்தால் தாய்ப்பனை தன் உடலை அடிக்கடி சிலிர்த்துக் கொண்டது. அந்த இரண்டு பனைகளுக்கிடையில் இவைகளின் பாசத்தை எட்டிப்பார்த்து ரசிப்பதைப் போல் நிலா ஒளிவீசிக் கொண்டிருந்தது.

நிலவைப் பார்த்த சாந்தாவின் கண்களுக்கு அதன்மேல் உள்ள கறுப்புத் தடங்கள் கண்ணை உறுத்தியது. உலகத்தில் நடக்கும் கொடுமைகளைக் கண்டு பொறுக்க முடியாமல் அழுதழுது ஏற்பட்ட கண்ணீர்த் தடம் தான் அதுவோ என எண்ணத்தோன்றியது. இன்னொன்றும் அவள் மனதில் தோன்றி யது. தன்னைப்போல் அதற்கும் கறைபடிந்துள்ளதோ! அந்த எண்ணம் தோன்றியதும் அவளது மனம் பகீர் என்று திடுக் குற்றது. அந்த நாளை நினைக்கும்போது வயிற்றில் இருந்து தொண்டைக்குழிவரை ஏதோ செய்வதை உணர்ந்தாள்.

அந்தச் சம்பவத்தை மறக்க வேண்டும் என மனதில் எத்தனையோ தடவைகள் உறுதி எடுத்துக்கொண்டாலும் அந்தக் கொடுமையான நிகழ்வு மீண்டும் மீண்டும் மனதில் சுயரூபம் எடுத்துக்கொண்டிருந்தது.

எவ்வளவு சந்தோஷமான குடும்பம். இப்படிச் சிதைந்து சின்னாபின்னமாகும் என்று அவள் கனவில் கூட நினைக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. எப்படிப்பட்ட கொடுமை எந்தப் பெண்ணுக்கும் இப்படி ஒரு கொடுமை நிகழக்கூடாது. ஆனால் நிகழ்ந்து விட்டதே அவளுக்கு மட்டுமா? இல்லை. இன்னும் எத்தனையோ எத்தனையோ பெண்களுக்கு நடந்திருக்கிறது. நடந்து கொண்டி ருக்கிறது. அவர்களுள் இவளும் ஒருத்தி. எல்லாவற்றிற்கும் இந்தக் கொடிய யுத்தமே காரணம். சாந்தாவின் மனம் ஆறு வருடங்கள் பின்னோக்கிச் சென்றது.

அப்போது யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருந்த சமயம். சாந்தாவின் அப்பா, அம்மா ஆசைக்கொரு அண்ணா என்று இருந்தது அவளின் குடும்பம்.

ஒரு நாள் வீட்டில் அவளும் அண்ணனும் தான் இருந்தார் கள். அப்போது திடீரென வீட்டினுள் நுழைந்த சீருடையினர் வீட்டை சோதனை இட்டார்கள். அண்ணனின் முதுகுக்குப் பின் பயத்துடன் நின்று கொண்டிருந்த சாந்தாவை தம்மோடு வரும்படி அழைத்தார்கள். அவள் மறுத்துவிட்டு பயத்துடன் அண்ணனைக் கட்டிக்கொண்டாள். அவளைக் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றார்கள். தடுக்க வந்த அண்ணனை ஒரு துப்பாக்கிச் சூட்டினால் தடுத்து நிறுத்தினர். தன் கண் முன்னேயே அருமை அண்ணன் துடிதுடித்து இறப்பதைப் பொறுக்கமுடியாதவளாய் கதறினாள் சாந்தா. அவனின் முகத்தைக்கூடப் பார்க்கவிடாமல் அவளை இழுத்துச் சென்றனர் சீருடையினர். இரண்டு நாட்களின் பின் உயிரோடு வீடு வந்தாள் சாந்தா.அவளோடு திரும்பி வந்தது உயிர் மட்டும் தான்.

தன் இரண்டு பிள்ளைகளின் வாழ்க்கையும் இப்படி ஆகிவிட்டதே என்ற அதிர்ச்சியைத் தாங்காது அப்பாவும் மாரடைப்பால் இறந்தபோது; வாழ்க்கையில் எல்லாமே பறி போனது போல் உணர்ந்து கொண்டாள் சாந்தாவின் தாய். சாந்தாவோ உணர்ச்சிகள் அற்ற நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போதெல்லாம் சாந்தாவின் எதிர்காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக் குறியாய் இருக்கும். அதனால் அவளுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாள் தாய்.

அவர்களுக்கு நடந்த கொடுமைகளுக்குக் காரணமானவர் களைத் தண்டிக்க வேண்டும். அவர்களை நீதிக்கு முன்நிறுத்த வேண்டும் என நினைத்தாலும் இதனால் எங்கே தன் மகளின் எதிர்கால வாழ்க்கை பாழ்பட்டு விடுமோ என்ற எண்ணம் அவ ளிடத்தில் இருந்ததால் அந்த முயற்சியைக் கைவிட்டாள்.

என்னதான் தாய் பாடுபட்டாலும் சாந்தாவின் திருமணம் எட்டாக் கனியாகவே இருந்தது. துள்ளித் திரியும் மானாய் இருந்தவளின் வாழ்க்கையில் யுத்தத்தின் வடுக்களாய் பதிந்த கறைப் புள்ளிகளால் துள்ள முடியாத புள்ளி மானாய் துன்பப்பட வேண்டியதாயிற்று.

கடந்த கால சிந்தனைகளோடு இருந்த சாந்தாவுக்கு ஏனோ, ''மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்யவேண்டும்'' என்ற பாடல் நினைவில் வந்தது. பெண்ணாய்ப் பிறந்து தன்னைப் போல் துன்பப்பட்டிருந்தால் நிச்சயமாக இப்படிப் பாடி இருக்கமாட் டான் அந்தக் கவிஞன் எனத் தோன்றியது.

சுவரில் இருந்த கடிகாரத்தின் மணிச்சத்தம் கேட்டு தன் சிந்தனைகளில் இருந்து திடுக்குற்றவள் உள்ளே சென்று தாயின் அருகே படுத்துக்கொண்டாள்.

மறுநாள் காலை அவசரமாக பாடசாலைக்குப் புறப்பட்ட சாந்தா வாசலுக்கு வந்தாள். வாசலில் தரகர் அம்மாவிடம் "வந்து உங்கட மகளின்ர குறிப்பில் தாலிப்பொருத்தம் குறை வாம். அதால மாப்பிள்ளை வீட்டுக்காரர் சம்மதிக்கேலை. அதுதான் சொல்லிப்போட்டுப் போவம் எண்டு வந்தனான்'' எனச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஏதோ அர்த்தத்துடன் தாயைப்பார்த்து சாந்தா விரக்தி யோடு சிரித்துவிட்டுச் சென்றாள். நேற்று நல்லா பொருந்தின


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு இன்றைக்குப் பொருந்தாததன் காரணம், அவளுக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. மகளின் பார்வையின் அர்த்தத் தைப் புரிந்து கொண்ட தாய் கண் கலங்கியபடி நின்றாள்.

ஒரு நாள் திடீரென அம்மாவுக்கு மிகவும் கடுமை என்றும் உடனே வீட்டுக்கு வரும்படியும் பாடசாலைக்கு அழைப்பு வந்ததும் என்னவோ, ஏதோ என பதறி அடித்துக் கொண்டு போன சாந்தாவால், அங்கே அம்மாவின் உயிரற்ற உடலைத் தான் பார்க்க முடிந்தது. அதிர்ச்சியில் மயக்கம் போட்டு விழுந்தவள் இரண்டு நாட்களின் பின்னர்தான் கண்விழித்தாள். அயலவர்கள் எவ்வளவோ ஆறுதல் கூறினாலும், அவள் உணர்ச் சிகள் எதுவுமின்றி இருந்தாள்.

தாயின் இறுதிக் கிரியைகளின் போது கூட கலந்து கொள்ள முடியாத நிலையை இட்டு வருந்தினாள்.

வீட்டின் வாசற்படி அருகே வந்து அமர்ந்த சாந்தாவினால் அந்த எதிர் வீட்டிலுள்ள பனைகளில் நெடிய வளர்ந்திருந்த தாய்ப்பனையைக் காணமுடியவில்லை. மற்றைய இளம் பனை மட்டும் தன்னந் தனியே நின்று கொண்டிருந்தது, அந்த இருட்டில் கூட அவள் கண்களுக்குத் தெரிந்தது.

வாழ்க்கையில் ஒரே ஒரு ஆதாரமாய் இருந்த தாயும் போய்விட்டாள். வாழ்க்கையே சூனியமான பின்னர் "நான் ஏன் வாழவேண்டும்? யாருக்காக வாழ வேண்டும்? என் எதிர்காலம் தான் என்ன?" என்ற பல கேள்விகள் அவள் மனத்திரையில் எழுந்து நின்றன. இந்தக் கேள்விகளுக்கான விடையை காலம் தான் சொல்லவேண்டும்.

**- 'ஈடி': 09.03.2002**

☆ ☆ ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமரம்

"அம்மா, அம்மா." கெதியாய் தேத்தண்ணியைத் தாங்கோ மேரிச் சித்தி கெதியாய்ப் போக வேணுமாம்." அடுப்படியில் புகையின் நடுவில் தேத்தண்ணி போட்டுக் கொண்டிருந்த தாயை அவசரப்படுத்தினான் கடைக்குட்டி ஜெனி. "இல்லை இல்லை இனி நான் தான் தேத்தண்ணி குடுக்கிற முறை. நீர் தானே பரிமளா அன்ரிக்கும், அவவோட வந்த ஆக்களுக்கெல்லாம் குடுத்தனீர். இனி நான் தான் குடுப்பன்." கூறிக்கொண்டு அடுப் படிக்கு ஓடிவந்தாள் மூத்தவள் விஜி.

"விஜி அம்மா, ஜெனிக்குட்டி சின்னப்பிள்ளை தானே. நீங்கள் அவருக்கு அக்காவெல்லோ. ரெண்டு பேரும் சண்டை பிடிக்கக்கூடாது என்ன? தம்பியே தேத்தண்ணியக் கொண்டேக் குடுக்கட்டும் என்னம்மா?" தாயின் அன்பான தீர்ப்பினைக் கேட்ட விஜி "சரியம்மா தம்பியே கொண்டேக் குடுக்கட்டும்" சிரித்தபடி பதில் சொன்னாள்.

வீட்டுக்கு யாரும் விருந்தினர் வந்தால் சாப்பாடு குடுத்தாலும் சரி, தேத்தண்ணி குடுத்தாலும் சரி தாங்கள் தான் குடுக்கவேண்டுமெண்டு ரெண்டு பேருக்கும் சண்டையே வந்து விடும். இதைத் தீர்ப்பதற்குள் தாய் செல்விக்கு போதும் போது மென்றாகிவிடும். பிச்சைக்காரர்களைக் கண்டால் "அம்மா காசு தாங்கோ குடுக்கிறதுக்கு" என்று ஓடிவந்து நிற்பான் ஜெனி "அம்மா உவையளுக்கு உதவி செய்தால் தான் ஆண்டவர் எங்களுக்கும் உதவி செய்வார் எண்டு ஃபாதர் சொன்னவர்" என்று கூறும் அந்த மழலையின் உள்ளத்தின் எண்ணத்திற் காகவே தாயும் இல்லையென்று சொல்லாது கொடுத்துவிடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்கள் தங்கள் இரு கண்களைப் போலவே இரு பிள்ளைகளையும் வளர்த்து வந்தனர். ஜெனி பாலர் பாடசாலை யிலும் விஜி தரம் இரண்டிலும் படிக்கிறார்கள். தன் தம்பிக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் அக்கா. அக்காவை விட்டு எந் நேரமும் பிரியாமல் இருக்கும் தம்பி, இவர்களுக்காகவே வாழ்ந்து கொண்டு இந்த கொடுமையான யுத்த இடப்பெயர்வு களின் போதும் அவர்களைப் பத்திரமாக கட்டிக் காத்து வளர்த்த அன்புத்தாய், தந்தை. வறுமையிலும் செம்மையாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் இனிய குடும்பம் இது.

இன்று நத்தார் தினம். காலையிலேயே குளித்து முழுகி, புத்தாடை அணிந்து, சேச்சுக்குப் போய் வந்து சமைத்துச் சாப் பிட்டுவிட்டு, பலகாரங்களெல்லாம் அயலவர்களுக்கும் உறவினர் களுக்கும் பிள்ளைகளிடம் கொடுத்தனுப்பி விட்டு வீட்டுக்கு வரும் விருந்தினரை உபசரித்து, இப்படியே அன்றைய பொழுதும் சந்தோஷமாகவும், விரைவாகவும் கடந்து சென்று கொண்டி ருந்தது.

விஜியும், ஜெனியும், சித்தி மகனோடு முற்றத்திற்குச் சென்று பட்டாசு கொழுத்தி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்களின் மகிழ்ச்சியில் பெற்றோர்களும் திளைத்திருந்தார்கள். “மேரி எங்கட பிள்ளையளுக்கு நத்தார் தினம் எண்டால் எப்படியிருக்கும் எண்டே தெரியாது. அதுகள் பிறந்ததுக்கு இந்த முறைதான் கொஞ்சம் நிம்மதியா நத்தார் பண்டிகையைக் கொண்டாடியிருக்கிறம். இதெல்லாம் அதுகளுக்குப் புதுசா இருக்கு. பிள்ளையளிண்ட சந்தோஷத்தப் பாக்க எங்களுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்குத் தெரியுமே? இவ்வளவு காலமும் பட்ட பாடெல்லாம் இதோடையே போட்டுது மாதிரி இருக்குது. ஆண்டவர் இப்பத்தான் எங்களுக்கு ஒரு வழியக் காட்டியிருக்கிறார். இனி ஒரு கஷ்டமும் வராமல் அவர் காப் பார்.”

“சரியாகச் சொன்னியள் அக்கா. நெடுக சண்டையால அடிபட்டு அடிபட்டு நிறைய கஷ்ரப்பட்டுப் போனம். இதுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே இனியும் கஷ்ரத்த ஆண்டவர் நிச்சயம் தரமாட்டார். உவன் துஷிக்கு 'செல்' சத்தத்தையும், துவக்குச் சூட்டுச் சத்தத்தையும் நெடுகக் கேட்டுக்கேட்டு பட்டாசு வெடிச்சாலும் பயப்படுறான். இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சம் பயம் தெளிஞ் சிருக்கிறான். எல்லாம் சரியக்கா, இண்டைக்குப் பின்னேரம் சேச்சுக்கு வருவியளே?"

"ஓ வருவன் வருவன். அவர் மாமி வீட்ட போட்டார். வரேக்க மாமியையும், மச்சாளவையையும் கூட்டிக்கொண்டு வருவார். எங்கட அண்ணாவும் தங்கச்சியும், அம்மாவும் பின் னேரம் வாறம் எண்டவை. எல்லாரும் வந்ததும் ஒண்டா சேச்சுக் குப் போவம் எண்டிருக்கிறன்."

"ஓமக்கா நானும் எங்கட சொந்தக் காற ஆக்களும் சேச்சுக்கு வாறம். அங்க எல்லாரும் ஒண்டாச் சந்திக்கலாம். அதோட இண்டைக்கு இரவைக்கு நிகழ்ச்சியெல்லாம் இருக்காம். சந்தோஷமாய் நாங்கள் எல்லாரும் போய்ப் பாத்திட்டு வருவம் என்னக்கா?"

"ஓம் மேரி எவ்வளவு காலத்துக்குப்பிறகு இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு விடுவானேன் கட்டாயம் போவம்."

"அப்ப சரியக்கா நேரம் போகுது நான் போட்டு வாறன்."

"ஓம் சரி, சரி."

அந்த முல்லைக் கடலை அண்டிய மணற்பரப்பில் சுற்றம் சூழ அமர்ந்திருந்து மேடை நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டி ருந்த மக்களின் மனதில் என்றுமில்லாத மகிழ்ச்சி. கடலின் இதமான காற்று மேனிகளைத் தடவிச் செல்ல தம்மையே மறந்திருந்தனர் மக்கள். மின் விளக்கொளியில் தேவாலயம் மினுமினுத்துக் கொண்டிருந்தது. காற்றடைத்த பலூன்களை விளையாடி மகிழும் குழந்தைகளும், பட்டாசுகளை வாங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுத்தி மகிழும் சிறுவர்களும், ஊதுகுழல்களினதும், விசில் களினதும் சத்தங்களுமாக, அந்த இடமே சந்தோஷத்தில் திளைத்திருந்தது.

இடையிடையே மேடை நிகழ்ச்சிகளிலும் தங்கள் பார் வையை செலுத்திக்கொண்டு சுற்றங்கள் சூழ கூடியிருந்து கதைபேசி மகிழ்ந்தபடி இருந்தது மக்கள் கூட்டம். நாளை என்ன நடைபெறப் போகிறது என்பதை அறியாத மக்கள். இது நாள் வரை இழந்திருந்த மகிழ்ச்சியை இன்று அந்த இனிய சூழலிலே பெற்று மகிழ்ந்தபடி இருந்தனர்.

விளையாடிக்கொண்டிருக்கும் தன் இரு பிள்ளைகளையும் பார்த்தபடி தனது சுற்றத்தோடு கதை பேசி மகிழ்ந்து கொண்டி ருந்த செல்வியை நோக்கி அவள் கணவன் தாஸ் வந்தான்.

“செல்வி நேரம் போகுது வீட்ட போவமே.”

“ஏனப்பா அவசரம் கொஞ்சம் இருந்திட்டுப் போவமன்.”

“இல்லை செல்வி நாளைக்கு விடிய நான் கிளிநொச் சிக்குப் போக வேணும். ஒரு முக்கியமான அலுவல் ஒண்டு நேரத்துக்குப் போய் படுத்தால் தான் விடிய எழும்பலாம். அதுதான் வாரும் போவம்.”

“சரியப்பா பிள்ளைகளைக் கூப்பிடுங்கோ நான் இவை யளுக்குச் சொல்லிப் போட்டு வாறன். மாமி நாங்கள் போறம் நீங்கள் இருந்து பாத்திட்டு வாங்கோவன்.”

“ஓம் பிள்ளை நாங்கள் இதுமுடிய பக்கத்தில தானே பிள்ள வீடு. அங்க போட்டு நாளைக்குப் பின்னேரம் உங்கட வீட்ட வாறம் என்ன?”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ அப்பசரி நான் போறன்."

"போறன் எண்டு சொல்லாத பிள்ளை போட்டுவாறன் எண்டு சொல்லு. கவனமாய் பாத்துப் போட்டு வாங்கோ?"

தாஸ் ஜெனியை தூக்கி கொண்டு நடக்க விஜியின் கைகளைப் பிடித்தபடி செல்வி நடந்து கொண்டிருந்தாள். திடீரென நாய் ஒன்று பெரிதாக குரைக்கின்றது. பயந்துபோய் செல்வி தாஸின் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.

"என்னப்பா இதுக்குப்போய் பயப்பிடிறீரே" தாஸ் கிண்ட லாகச் சொன்னான்.

"இல்லையப்பா நாங்கள் எவ்வளவு சந்தோஷமாக இருந் தாலும் என்ர மனதில் ஏதோ ஒரு பயம் இருக்கிற மாதிரி கிடக்கு. அடிக்கடி நான் கூடாத கனவெல்லாம் காணுறன். எங்களுக்கு ஏதும் நடக்குமோ" என்று, அவள் கூறி முடிக்கும் முன் "செல்வி, என்ன இது" என்றபடி அவளின் கரங்களை இறுகப் பற்றி, "ஏன் நீர் தேவையில்லாமல் பயப்படுறீர்? இப்ப ஒரு பிரச்சனையும் இல்லைத்தானே! இவ்வளவு பிரச்சனைகளுக்கும் தப்பியிட்டம். இனி என்ன நடக்கப் போகுது எங்களுக்கு ஒண்டும் நடக்காது. நீர் யோசிக்காமல் இரும்." என்றான், கனிவுடன்.

அவனுடைய ஆறுதல் வார்த்தைகளால் தெளிந்த அவள் மனம் "எனக்குப் பக்கத்தில நீங்கள் எப்பவும் இருந்தால் அந்த வானம் இடிஞ்சு விழுந்தால் கூட எனக்கு பயமில்லையப்பா" என்றபடி அவனை மேலும் நெருங்கி நடந்தாள்.

"என்னப்பா உமக்கு பழைய ஞாபகம் எல்லாம் வந்திட்டுது போல. ம், சோக்காத் தான் இருக்கு" செல்லமாக அவன் சீண்ட அவள் வெட்கத்தால் தலை குனிந்து நடந்தாள்.

☆ ☆ ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமை போல அதிகாலையில் கண் விழித்துவிட்டாள் செல்வி. கணவனை எழுப்பி விட்டு முற்றத்திற்கு வந்தாள். நேற்றுக் கொழுத்திய பட்டாசுகளின் கடுதாசித் துண்டுகளும் மட்டைகளும் முற்றம் முழுவதும் நிறைந்திருந்தன. 'கடவுளே இந்தபுழுதி மண்ணுக்குள்ள இதையெல்லாம் கூட்டி எடுக்க எத்தினை நாளாகுமோ.?'

மனதில் எண்ணியபடி கிணற்றடிக்குச் சென்றாள். இன்னும் நன்றாக விடியவில்லை.

இப்பதான் ஊருக்கு வந்து கொஞ்சம் கொஞ்சமா சேர்த்து ஓரளவுக்கு வீடும் கட்டியாச்சு. மேல இன்னும் ஓடு போடவில்லை. கிடுகால தான் மேஞ்சிருக்கு. வாற வருஷம் அதையும் போட்டு விட்டால் நிம்மதி.

ஒரே ஒரு பெட்டச்சி. இருக்கிற இந்த வீடு அவளுக்குத் தானே? ரெண்டு பிள்ளையளையும் நல்லாப் படிப்பிச்சு வளர்த்து விட்டால் ஒரு கவலையும், குறையும் இல்லாமல் சந்தோஷமா இருக்கலாம். புது வருஷத்தோட எங்களுக்கு நல்ல காலம் தான் போல கிடக்கு 'ஆண்டவரே எல்லாத்துக்கும் நீதான் துணை நின்று வழி நடத்த வேணும்' தன் மனதுள் வேண்டிக் கொண்ட வளாய் தன் வேலைகளில் ஈடுபட்டாள் செல்வி.

"செல்வி நான் போட்டுவாறன்" வாசலுக்கு வந்த தாஸிடம் "பிள்ளையளுக்கு சொல்லிப் போட்டுப் போங்கோ நித்திரையால எழும்பினால் அப்பா எங்களுக்குச் சொல்லாமல் போட்டார் எண்டு அழுது கொண்டிருப்பினம்."

"வேண்டாம் பாவம் நித்திரை கொள்கிற பிள்ளையளை ஏனெழுப்புவான்? எனக்கு நேரம் போகுது நான் போட்டு வாறன்."

சைக்கிளை எடுத்தான் தாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா அப்பா" என்று சிணுங்கியபடி வந்த ஜெனியின் குரல் கேட்டு இருவரும் திரும்பினர்.

"ஜெனி போகும் போது பின்னால கூப்பிடக்கூடாது என்று எத்தினதரம் சொல்லுறது" கண்டித்தாள் தாய்.

"சரி சரி விடும் சின்னப் பிள்ளைதானே."

தந்தையின் கால்களை வந்து கட்டிக்கொண்டது குழந்தை.

சைக்கிளை அருகில் இருந்த மரத்தோடு சாய்த்து விட்டு குழந்தையை அன்போடு அள்ளி தன் தோள்களிலே சாய்த்தான். குழந்தையின் கன்னங்களிலும் நெற்றியிலும் முத்தமிட்ட தாஸ்;

"அப்பா வரேக்க பிள்ளைக்கு என்ன வாங்கிக்கொண்டு வாறது?" அன்போடு கேட்டான்.

"அப்பா பட்டாசு வாங்கிக் கொண்டு வாங்கப்பா. வருஷத் துக்கும் கொளுத்தலாம்" என்றாள் பின்னால் வந்து கொண்டி ருந்த விஜி. அக்காவின் விருப்பத்தை ஆமோதிப்பது போல ஜெனியும் தலையை ஆட்டினான். அவனைத் தாயிடம் கொடுத்துவிட்டு மகளையும் தூக்கி அவள் கன்னங்களிலும் முத்தமிட்டான் அவன். குழந்தைகளின் பாச மழையில் நனைந்து கொண்டிருந்த தந்தையை அன்போடு மெய் மறந்து பார்த்துக் கொண்டிருந்த செல்வியை அழைத்தான் தாஸ்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தவளை ஏதோ அர்த்த புஷ்டியுடன் பார்த்துப் புன்னகைத்தபடி "சரி நான் போட்டு வாறனம்மா" என்று விடை பெற்றுச் சென்றான். வாசல் வரை சென்று அவனுக்கு கையசைத்து விடை கொடுத்து வழியனுப்பி வைத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுமில்லாதவாறு கணவனின் பார்வையிலும், புன்னகையிலும் இன்று ஏதோ ஒரு ஒளியும் சந்தோஷமும் தெரிவதாக உணர்ந்தாள் செல்வி. அந்த மகிழ்ச்சியிலேயே வீட்டு வேலைகளை விரைவாக முடித்தாள்.

* * *

**வே**லைகளை முடித்துவிட்டு குழந்தைகளுக்கு காலைச் சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்தாள் செல்வி. "ஐயோ? அலைவருது ஓடுங்கோ, ஓடுங்கோ" என்று பலர் குளறிக் கொண்டு ஓடுவதைக் கேட்டு 'என்ன இது ஆமி வருகுது ஓடுங்கொ ஓடுங்கோ எண்டு தான் இவ்வளவு காலமும் ஓடியிருக்கிறம். இது என்ன புதுசா அலை வருகுது என்கிறார்களே' என்ற கேள்விக் குறியோடு வெளியே வந்து பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

பெரிய கடலலைகள் பேரிரைச்சலுடன் மரங்கள் வீடுகள் என்பவற்றை அடித்து நொறுக்கிக் கொண்டு ஆவேசத்துடன் வந்து கொண்டிருந்தன.

உயிரைக் கையில் பிடித்தபடி குழந்தைகள் பெரியவர்கள் என்றெல்லோரும் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

என்ன ஏது என்று ஒன்றும் புரியாதவளாய் ஓடிப்போய் ஜெனியைத் தூக்கித் தோளிலே போட்டுக்கொண்டு விஜியை கையில் பிடித்தபடி வெளியே வந்தாள். அலை நெருங்கி வருவதை உணர்ந்து விரைவாக ஓடினாள்.

ஓடிய வேகத்தில் கையிலிருந்து தடக்கி விழுந்த விஜியை தூக்குவதற்குத் திரும்பியவள் விஜி "அம்மா!" என்று கத்துவதற்குள் அலையின் வாய்க்குள் அகப்பட்டு அடித்துச் செல்லப்படுவதைப் பார்த்து எதுவும் செய்வதறியாது "விஜி! விஜி!" என்று கத்தியபடி கையிலிருந்த குழந்தையை இறுக்கி அணைத்துக் கொண்டு அருகிலிருந்த மரத்தைப் பற்றி தம்மைக் காப்பாற்ற முயன்றாள் செல்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரையும் விடுவதாக இல்லை அந்த இராட்சத அலை. சீறி வந்த அலையின் வேகத்தில் பிடி நழுவ அலையினுள் அமிழ்ந்து, அருகில் இருந்த சுவரொடு அடிபட்டு, மரண ஓலங்களைக் கேட்டவாறே இருவரது ஆவியும் அடங்கிவிட்டது.

ஒரு சில நிமிடங்களில் பல உயிர்களைத் தின்று தனது பசியை தீர்த்துக்கொண்ட அந்தப் பேரலை வந்த வழியே திரும்பிச் சென்று விட்டது. அது பதித்துவிட்டுச் சென்ற அகோரமான தடங்களைப் பார்க்கும்போது அந்த இறைவனுக்கு கூட ஈரமில்லையோ? என எண்ணத் தோன்றியது.

அடித்து நொறுக்கப்பட்ட வீடுகளும், முறிந்து விழுந்த மரங்களும், ஆங்காங்கே தொங்கியும், சிதறியும் உயிரற்ற உடல்கள் பரவிக் கிடக்க மயானம் போல் அவ்விடமே அமைதி யாகக் கிடந்தது.

தன் ஊரிலே நடந்த அனர்த்தம் பற்றிக் கேள்விப்பட்டதும் பதைபதைத்து ஓடிவந்தான் தாஸ். "ஆண்டவரே என்ர மனுசி பிள்ளையளுக்கு எதுவும் ஆயிருக்கக் கூடாது" என்று வேண்டிய படி தன்னூருக்கு வந்து சேர்ந்தான்.

அங்கே ஊரே இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயிருந்ததைப் பார்த்து அவன் மனது திடுக்குற்றது. சிலர் மரங்களிலும். இடிபாடுகளுள்ளும் சிக்கி இருந்த உடல்களை மீட்டுக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உறவுகளைத் தேடி வெறும் உடல்களாகவே மீட்டு வந்தனர்.

தாஸிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிலை யாக நின்றவன் பின் தன் நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு ஒவ்வொரு உடல்களாகப் புரட்டிப் புரட்டி பார்க்கிறான். இல்லை!

சேர்ச்சடியில் பல உடல்கள் இருப்பதாகச் சொல்ல அங்கும் ஓடிப் போனான். அங்கேயும் இல்லை!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனதில் ஒரு சிறு நம்பிக்கை வந்தது. நம்பிக்கை யோடு திரும்பியவன் காலில் குற்றி ஒன்று தடக்க அதனைத் தூக்கிவிட்டவன் அதிர்ந்து நின்றான்.

அக்குற்றியின் அடியில் குழந்தையை அணைத்தபடி செல்வியின் உடல்!

"செல்வி!" என்று கத்தியபடி அருகில் அமர்ந்து அழுது புரண்டான். அவர்களை அப்படியே தூக்கி தனது மடியில் வைத்தான். குழந்தையின் நெற்றியில் பெரிய காயம் இருந்தது.

"ஐயோ! நான் போகும் போது அப்பா பட்டாசு வாங்கிக் கொண்டு வாங்கோ எண்டு ஆசையா கொஞ்சி விட்டியேயெடா. அதுக்குள்ள என்னை தனியா விட்டுட்டு போட்டீங்களே. நானும் இஞ்ச நிண்டிருந்தால் உங்களோடயே வந்திருப்பனே. நான் இனி யாருக்காக வாழ வேணும்." தன் நெஞ்சிலே அடித்தடித்து அழுதான்.

நேற்று விளையாடி கதைபேசி இருந்த மணற்பரப்பு எங்கும் இன்று பிணங்களாகவும் ஒப்பாரி ஓலங்களாகவும் காட்சி அளித்தது.

திடீரென விஜியின் நினைவு வர அவளைத் தேடத் தொடங்கினான்.

அவள் எங்கும் கிடைக்கவில்லை.

மருத்துவமனையில் சில உடல்கள் இருப்பதாக அறிந்து அங்கு ஓடினான். அங்கு உடல்களெல்லாம் அறை முழுவதிலும் அடுக்கி வைக்கப்பட்டு துணிகளால் போர்த்தப்பட்டிருந்தன.

ஒவ்வொரு உடல்களாகப் பார்த்துக் கொண்டு சென்றான். ஒவ்வொரு முறையும் 'கடவுளே! இது விஜியாக இருக்கக் கூடாது' என மனம் சொல்லிக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் மட்டும் துணியால் மூடப்பட்ட ஒரு சிறு பிள்ளையின் உடலைக் கண்ட தாஸ் அந்த பச்சை நிறச் சட்டையைக் கண்டதும் அது விஜி காலையில் அணிந்திருந்த ஆடையை நினைவுபடுத்த, ஒடிச்சென்று திறந்து பார்த்தான்.

விஜியே தான் 'ஆ! அம்மா!' என தலையிலும் நெஞ்சிலும் அடித்தபடி தரையில் புரண்டு, புரண்டு அழுதான். அங்கிருந்த வர்கள் அவனைப் பிடித்து ஆறுதல் படுத்தினர்.

மனைவி பிள்ளைகளை தன் மடியில் வைத்தபடி என்ன செய்வதென்று தெரியாமல் அழுது கொண்டிருந்தான் தாஸ். அருகில் சைக்கிளில் பட்டாசுப்பை தொங்கிக் கொண்டிருந்தது.

நாங்கள் சந்தோஷமாக இருப்பது அந்த ஆண்டவனுக்கும் பிடிக்கவில்லையா? எத்தனை குடும்பங்கள் இந்த கொடூரத்தை அனுபவிக்கின்றன. இதைப் பார்த்து அந்த இறைவனே மௌனமாக இருக்கிறானே. ஆயிரக்கணக்கான உயிர்களை விழுங்கிவிட்டு எதுவுமே நடக்காதது போல் அமைதியாக இருக்கும் கடலைப் பார்க்கப் பார்க்க தாஸின் மனதில் இராட்சத அலையாய் கோபம் பொங்கி எழுந்தது. ஆனாலும் என்ன? அதற்கு எப்படித்தான் தண்டனை கொடுப்பது?

ஆறுதல் சொல்வதற்குக் கூட ஒரு உறவினரும் உயிருடன் இல்லாத நிலை. மூவரின் முகங்களையும் தடவித் தடவி அவன் அழுத கண்ணீர் அவர்களின் உடல்களை நனைத்துச் சென்றனவே தவிர தெய்வங்களின் மனதை நனைக்கவில்லை.

***

இன்றும் தன் கையில் பட்டாசுப் பையுடன் கடற்கரையிலே நின்று ஒவ்வொரு அலை வரும் போதும் "என்ர பிள்ளைகளைக் கொண்டுவா. என்ர செல்வியைக் கொண்டு வா" எனக் கத்திய படி மனநலம் பாதித்தவனாய் கடற்கரை மணலிலேயே உலாவிக் கொண்டிருக்கிறான் தாஸ்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனம்

**சு**ட்டெரிக்கும் நெருப்பின் மேல் நடப்பது போலிருந்தது மகாலிங்கத்தாருக்கு.

அது மணல் நிறைந்த ஒரு சிறு ஒழுங்கை. வெயில் நேரங்களில் அவ்வொழுங்கையைக் கடப்பதென்பதே ஒருவித அவஸ்தை. அதைக் கடக்கும் போதெல்லாம் ஒலிம்பிக் போட்டி யில் ஓடுவதைப் போல் மகாலிங்கத்திற்கு தோன்றும். கோயில் களிலே தீக்குளிப்பென்றாலே பயந்துபோய் ஒதுங்கி நிற்கும் இவர், இப்படி இங்கே அடிக்கடி தீக்குளிப்புச் செய்யவேண்டி யிருப்பது கடவுளின் தண்டனையோ என்னவோ!

பத்தரை மணி வெயில் பன்னிரண்டு மணி வெயிலைப் போல எறித்துக்கொண்டிருந்தது. ஒழுங்கையின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் எல்லாம் தென்மராட்சியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது அழிப்புக்குள்ளாகி, இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. சூரியக்கதிர்கள் நேரடி யாகப் பட்ட மண்ணோ தணலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. இதில் இளசுகளே நடக்கத் தயங்கும்போது எழுபது வயதைத் தாண்டிய மகாலிங்கத்தார் படும்பாடு அப்பப்பா! அதைச் சொல்லிப் புரியவைப்பதென்பது இயலாத காரியம்.

வெறுங்காலை மணற்சூடு பதம் பார்க்க அதைத் தாங்காது விரைவாகத் தளதளத்து ஓடியவரின் வேட்டி இடுப்பைவிட்டு நழுவ, தலையில் சுற்றிய துண்டு அவிழ்ந்து தோளில் விழுகின்றது. துண்டைப் பிடிப்பதா, வேட்டியைப் பிடிப்பதா எனத் தடுமாறினார். இறுதியில் வேட்டியின் அவசியத்தை உணர்ந்து, அது அவிழ்ந்துவிடாதபடி இடுப்போடு சேர்த்துப் பிடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். ஒரே ஓட்டமாக ஓடி ஒழுங்கையை ஒருவாறு கடந்துவிட்டார். கடந்து வந்த பாதையை ஒரு முறை திரும்பிப் பார்த்துப் பெருமூச்சொன்றை விட்டபடி அந்தக் கல் ரோட்டில் இரண்டாவதாக இருக்கும் தனது வீட்டை நோக்கி விரைவாக நடந்தார்.

வாழ்வில் இதைவிடக் கடினமான எத்தனையோ ஓட்டங் களை எல்லாம் ஓடி முடித்தவர் என்றாலும் இது சற்று வித்தியா சமான அனுபவமாகவே அவருக்கிருந்தது.

ஓடியதால் ஏற்பட்ட களைப்பு. மணற்சூடு காலைப் பதம் பார்த்ததால் ஏற்பட்ட எரிவு உடம்பைக் களைப்புற வைத்ததால், வீட்டிற்கு வந்தவுடனே வீட்டின் விறாந்தையைக் கையிலிருந்த துண்டால் தட்டிவிட்டார். முகத்தில் அரும்பிய வியர்வைத் துளிகளைத் துடைத்தபடி "அப்பாடா" என சுவரோடு சாய்ந்து இரு கால்களையும் நீட்டி அமர்ந்துகொண்டார். உடம்பு மெல்ல மெல்ல ஆசுவாசப்படுவதாகத் தெரிந்தது. சிறிது நடுக்கத்துடன் இருந்த காலை வலது கையினால் பிடித்துவிட்டார். பாதம் கல்லைப் போல் விறைத்திருந்தது.

கடந்த ஐந்து வருடங்களாக செருப்பையே அணியாத கால்களல்லவா அவை. ஏனோ தெரியவில்லை. வயது போனதும் உறவுகளைப் போல் அதுவும் காலோடு சேராமல் இடைவழியி லேயே விடுபடத் தொடங்கியது. அடிக்கடி காலை விட்டுப்பிரிந்து வீதியிலே இருப்பதற்கு அடம் பிடித்ததால் அதற்கும் பிரியாவிடை கொடுத்து ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன.

தாகம் நாக்கை வறட்டியது. எழும்பிச் சென்று தண்ணீர் எடுத்துக்குடிப்பதற்கு உடம்பும் மனதும் இடம் கொடுக்கவில்லை. களைப்பு மிகுதியால் அவ்விடத்திலிருந்தபடியே சரிந்து படுத்துக் கொண்டார். படுத்தவரின் கண்ணில் அந்த வாசல் குந்து பட்டதும் விசாலத்தின் நினைவு நெஞ்சைச் சுட்டது. அவரது தர்மபத்தினி தான் விசாலம். உள்ளத்தில் ஏற்பட்ட சூட்டைவிட உடற்சூடு ஒன்றும் அவருக்குப் பெரிதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வெயில் நேரம் வெளியில் போய்வந்தால் அவருக் காகக் காத்திருந்தவள்போல் மோர்ச் சட்டியுடன் எதிரில் வந்து நிற்பாள் விசாலம். வெங்காயமும் பச்சை மிளகாயும், உப்பும் போட்டுக் கெட்டியாகக் கரைத்த மோரில் சிறிது குத்தரிசிச் சோற்றையும் போட்டுக்கலக்கி ஊறுகாயுடன் தொட்டுத் தொட்டுக் குடிக்கும்போது அப்பப்பா அதன் ருசியே தனிதான். நினைக்கும் போதே நாவில் எச்சிலூறியது அவருக்கு!

என்றைக்கு விசாலம் இந்த உலகை விட்டுப்போனாளோ, அன்றிலிருந்து அவருக்கு அந்த மோரும் இல்லாமல் போனது. மோர் மட்டுமா? அவரிடம் உள்ள எல்லாமே அவளுடனேயே போய்விட்டதாக அவர் உணர்ந்தார். அவள் இப்போது பக்கத்தில் இருந்திருந்தால், தாகமாக இருந்தும் தண்ணீரை எடுத்துக்குடிக்க முடியாத நிலையில் இருக்கும் தன்னைப் பார்த்து பதறித் துடித்திருப்பாளல்லவா?

விசாலம் இவ்வுலகில் இருக்கும்போது அவளது அருமையை உணராது இருந்தவர்தான் மகாலிங்கம். இடப் பெயர்வின்போது நோயினால் படுக்கையில் படுத்தவள்தான். எழுந்திருக்கவேயில்லை. அவள் இறந்து இரண்டு வருடங் களுக்கு மேலாகிவிட்டது. அவள் இல்லாமல் அவருக்கு வாழ்வே சூனியமாகிவிட்டிருந்தது.

மகாலிங்கத்தார் இளம் இரத்தமும் சதையுமாய், துடிப்பாய் இருக்கும் காலத்தில், தான் ஒரு ஆண்மகன் என்ற அகங்காரம், யாருக்கும் எதற்கும் பயப்படாத ஒரு துடிப்பு அவரிடம் இருந்தது. இதையெல்லாம் ஒரு போலியான, வரட்டுக் கௌரவத்தனமான போக்கு என்பதனை வாழ்வின் கடைசி அத்தியாயத்தில் தனிமர மாய் நிற்கும்போதுதான் அவர் உணர்ந்துகொண்டார்.

வாசல் படியில் இருக்கும் அந்தக் குந்துதான் விசாலத்தின் சிம்மாசனம். அவரது சிம்மாசனமான சாய்வு நாற்காலி அதனரு கிலேயே போடப்பட்டிருக்கும். இருவரும் நல்லது கெட்டது, ஊர் நடப்பு என்பன பற்றிக் கதைப்பதும், இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளுவதும் அந்த இடத்தில் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அருகிலேயே முற்றத்தின் பாதி இடத்தை பிடித்தபடி வளர்ந்து நிற்கும் வேம்பு, வாசலோடு சேர்ந்திருந்து மணம் பரப்பும் மல்லிகை, மின்சாரம் இல்லாத காலங்களிலும் மின்விளக்காய் ஒளிதரும் நிலவு. சுத்தமான காற்று, இனிய நறுமணம், அந்த நிலவின் ஒளியில் அவற்றை அனுபவிப்பதே ஒரு தனி சுகம் தான். சில வேளைகளில் அதுவே அவர்களது ராஜ வாழ்க்கையின் அந்தப்புரமாகவும் அமைந்து விடுவதுண்டு.

எமது வாழ்வின் வசந்தங்களையும் எம் இருவருக்கும் ஏற்பட்ட மனக்கசப்புக்களையும் சச்சரவுகளையும் நேர இருந்து பார்த்த சாட்சி அந்த முற்றத்து வேம்பும் நிலவும் தான். அந்த குந்திலிருந்தபடியே விசாலம் என்னிடம் எத்தனை அடிகளையும், ஏச்சுக்களையும் வாங்கியிருப்பாள். பாவம் அவள். என்னை நம்பி வந்தவளுக்கு நான் எத்தனை தண்டனைகளைக் கொடுத்து விட்டேன். அத்தனையையும் மறுபேச்சின்றிப் பொறுமையோடு தாங்கிக்கொண்டாளே! இத்தனைக்கும் என்மேல் எத்தனை அன்பும் கரிசனையும் வைத்திருந்தாள். புருஷன் என்னதான் கொடுமை செய்தாலும் அதை யாரிடமும் சொல்லவும் முடியாமல், தன் வேதனைகளை எல்லாம் மனதோடு விழுங்கிக் கொண்டு, அவனை மற்றவர்களிடத்தில் விட்டுக் கொடுக்காமல் கணவனுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெண்களுள் விசாலமும் ஒருத்தியாக இருந்தாளே! எப்படித்தான் பெண்களால் இப்படி நடந்துகொள்ள முடிகிறதோ? என்று அவரும் பலமுறை நினைத்து வியந்தது உண்டு.

மகாலிங்கத்தின் தந்தை பணவசதியும், ஊரிலே தனக் கென ஒரு கௌரவமும் கொண்டவர். பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர். பல தோட்டந் துரவுகளுக்குச் சொந்தக்காரர். அங்கு கூலித்தொழில் புரிந்த சிவத்தின் மகள்தான் விசாலம். வசதி யிலும் சாதியிலும் அவர்களைவிடச் சற்றுக்குறைந்தவள். காதலுக்குத்தான் கண்ணில்லை என்று சொல்கிறார்களே! மகா லிங்கத்திற்கு அந்தநேரம் அதெல்லாம் பெரிதாகக் தெரிய வில்லை. வீட்டினர் எதிர்த்தபோது, வீட்டைவிட்டே விசாலத்தோடு வெளிக்கிட்டுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணமிருந்தபடியால் படிப்பு அவ்வளவாக ஏறவில்லை. அதனால் குடும்பத்தைக் காப்பாற்ற என்று விவசாயத்திலேயே இறங்கிவிட்டார்.

“இப்படி ஒரு கேவலமான காரியத்தைச் செய்து குடும்ப மானத்தையே கெடுத்துவிட்டானே” என மகாலிங்கத்தின் குடும் பத்தினர் அவரை நெருங்குவதே இல்லை.

தனது எசமானின் அவமானத்திற்குத் தனது மகள் காரணமாகி விட்டாளே என்று சிவத்தாரின் குடும்பத்தினரும் அவர்களைக் கைவிட்டுவிட்டார்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாததனால் ஆசைக்கு ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்த்தார்கள். அவனும் இருபது வயதில் போனவன் தான். இன்றுவரை அவனைப்பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை.

உற்றார் உறவினர் உதவிகளின்றி தனித்து விடப்பட்ட நிலை. ஆரம்பத்தில் குடும்பத்தை நடத்துவதே பெரும் சிரமமாக இருந்தது. அந்தக் காலத்தில் மகாலிங்கத்தார் பெரிய சண்டித் தனக்காரர். யாரையும் மதிப்பதும் இல்லை. ஊரிலே எல்லோரும் தனக்குப் பயப்படவேண்டும். தான் ஒரு பெரிய மனிதன் என்ற செருக்குத்தனமான நினைப்பு அவருக்கு. இப்படி இருப்பது தவறு என்று தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முயன்ற மனைவிக்கும் இவருக்கும் ஒரே சண்டைதான். விசாலம் சாகும் வரை அது எம் நாட்டுப் பிரச்சனை போலவே தொடர்ந்து கொண்டிருந்தது.

எதற்கெடுத்தாலும் “உன்ர ஆக்கள் அப்பிடி, உன்ர ஆக்கள் இப்பிடி” என்று அவளது குடும்பத்தினரைப்பற்றி இல்லா தது பொல்லாதது எல்லாம் கற்பனை பண்ணியும் யாரும் சொல்லும் கதைகளைக் கேட்டும் வீட்டிலே சண்டைபோடுவார்.

“உன்னைக் கட்டினதால எனக்கு ஊரிலே மதிப்பே இல்லாமல் போச்சு. இப்படி ஆகுமெண்டு தெரிஞ்சிருந்தால் உன்னைக் கட்டியிருக்கவே மாட்டன். எங்கட ஆக்களுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளேயே கட்டியிருந்தால் இப்ப ராசா மாதிரி நான் இருந்திருப்பன். என்ன மருந்து மாயம் போட்டு என்னை இழுத்தியோ தெரியேல்லை".

வாய் கூசாமல் பேசுவார் மகாலிங்கம்.

இவரின் வார்த்தைகள் அம்பைப் போல் வந்து விசாலத்தின் நெஞ்சைத் தைத்தன. அவற்றின் வேதனைகளை அவள் மௌனமாகவே விழுங்கிக்கொள்வாள்.

மகாலிங்கத்தாரின் குணத்திற்கு முற்றிலும் மாறுபட்ட குணமுள்ளவள் விசாலம். ஏழ்மைப்பட்ட குடும்பம் என்றாலும் கட்டுப்பாடோடும் பண்போடும் வளர்க்கப்பட்டவள். அமைதி, பொறுமை, கண்ணியம் என்பன நிறைந்தவள். பெண்கள் என்றாலே கதையளப்பவர்கள் என்ற பொதுவான கருத்தை முற்றிலும் பொய் என்று உணரவைத்தவள். அயல் வீடுகளுக்குப் போய்த் தேவையற்ற கதைகளோ, அடுத்தவரைப்பற்றிய வம்பளப்போ செய்யாதவள். அகங்காரம் பிடித்த மகாலிங்கத்திற்கு எப்படித்தான் இப்படி ஒரு நல்ல மனைவி கிடைத்தாளோ என்று ஊரே ஆச்சரியப்படும். ஆரம்பத்தில் இவரின் பேச்சுக்களால் மனமுடைந்தாலும், பின்னர் அதுவே அவளுக்கு பழக்கமாகி விட்டிருந்தது.

அவளின் அருமை அவருக்கு அப்போது புரியவில்லை. எப்போது அவள் அவரை விட்டுப்போய் தனிமைப்பட்டு தனிமரமாய் நின்றாரோ, அப்போதுதான் அவர் தனக்குக் கிடைத்த மனைவியைப் போல் இலகுவில் யாருக்கும் கிடைத்து விடாது என்பதை உணர்ந்துகொண்டார். அது மட்டுமல்ல, தனது முன்னைய காலத் தவறுகளையும் அர்த்தமில்லாத பிடிவாதங்கள், கொள்கைகள், போக்குகள், கர்வம் எல்லாவற்றையும் நினைத்து வெட்கப்பட்டுக்கொண்டார்.

சீ எவ்வளவு கீழ்த்தரமாக நடந்துகொண்டிருக்கின்றேன். நல்ல வேளை. இந்த வேப்ப மரத்திற்கும் நிலவுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில்லை. இருந்திருந்தால் என் இழி செயல்களையெல்லாம் ஊர்முழுக்கச் சொல்லிச் சிரித்திருக்குமே.

இவையெல்லாம் வாழும்போது புரியவில்லையே. வாழ்க்கை முடியும் போதுதானே புரிகிறது. எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்துவிட்டேனே. இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்திருக்கலாமே என்று இப்போதுதான் எண்ணத் தோன்றுகிறது. இதுதான் சுடலை ஞானமோ? இப்போது அடிக்கடி விசாலத்தின் நினைவு வருவதும், இடையிடையே வந்துபோகும் ஞானோதயங்களும் தனக்கு மரணம் நெருங்கிவிட்டதையே உணர்த்துவதாக உணர்ந்தார் மகாலிங்கம்.

யாருமற்ற தனிமையில் வாடுவதைவிட மரணம் நிம்மதிதான். ஆனால் அதை நினைக்கும்போது ஏதோ ஒருவித பயம் அடிவயிற்றில் இருந்து தொண்டைக்குழிவரை வந்து சென்றது. விசாலம் இறப்பதற்கு ஆறு வருடங்களுக்கு முன்புதான் அவளின் குடும்பத்தினர் இங்கு வந்துபோகத் தொடங்கினர். அவளின் இறுதிக் கிரியைகளோடு அவர்களும் விலகிக்கொண்டார்கள்.

மகாலிங்கத்தின் குடும்பத்தினர் எவரும் இதுவரை தொடர்பே கொண்டதில்லை. அவருக்கு அதுபற்றி வருத்தம் எதுவுமில்லை. தொடர்ந்து வந்த இடப்பெயர்வுகள், துன்பங்கள் எல்லாம் அவர் மனதைப் பண்படுத்திவிட்டிருந்தன. உயிர் இருக்கும்போதே இவ்வளவு துன்பங்களையும் அனுபவித்தாகி விட்டது. இனி உயிர் போனபின் எது நடந்தால்தான் என்ன? மரணத்தின் பின் எது நடக்குமோ என்பதைப் பற்றியெல்லாம் ஒரு கவலையும் அவருக்கு வருவதில்லை.

இப்பொழுது பணத்திற்குத்தான் கொஞ்சம் கஷ்டமாக உள்ளது. வீட்டில் இருந்த பயன்தரும் மரங்களெல்லாம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி அழிந்துவிட்டன. மீண்டும் உழைப்பதற்கு உடல் வலு இல்லை. நூறு, நூற்றைம்பது ரூபா பிச்சைச் சம்பளத்திற்காக கந்தோருக்கும், விதானையாரிடமுமாக அலைவதே பெரும்பாடாகிவிட்டது. அதன் ஒரு அங்கம் தான் சற்று முன் நடந்து முடிந்த தீக்குளிப்புப் போராட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமூச்சொன்றை விட்டபடி எழுந்து சுவரோடு சாய்ந்து அமர்ந்துகொண்டார் மகாலிங்கம். சுற்றுமுற்றும் பார்த்தார். காணிக்கு வேலிகள் இல்லாததனால், ஆடு, மாடுகள் எல்லாம் சுதந்திரமாக மேய்ந்து கொண்டிருந்தன. அவரது பார்வை தெருவை நோக்கியபோது யாரோ போவது தெரிந்தது. யார் என்று சற்று உற்றுப்பார்த்தார். அது சுந்தரம்.

கண்ணிவெடியில் ஒரு காலை முழங்காலோடு இழந்திருந் தான். அவன் ஊன்றுகோலின்றி நொண்டி, நொண்டிக் கஷ்டப் பட்டு நடப்பதையே கண்வெட்டாது பார்த்துக் கொண்டிருந்த அவருக்கு, அவனது நிலையிலேயே தானும் இருப்பதாக எண்ணத்தோன்றியது.

எனது வாழ்க்கைப் பயணத்தில் எனது ஒரு காலாக இருந்தவள் விசாலம். அந்தக் கால் இருந்தபோது பயணத்தில் ஏற்பட்ட துன்பங்கள் எல்லாவற்றையும் இலகுவாகக் கடந்து சென்றேன். அந்தக் கால் இன்று இல்லை என்பதால் ஊனமாகிக் போய் மூலையில் கிடக்கின்றேன். கால் இழந்தவன் ஊன்று கோலின் உதவியுடன் நடக்கலாம். ஆனால் ஒரு காலாய் இருந்த கட்டியவளையே இழந்து ஊனமாக இருக்கும் எனக்கு ஊன்றுகோலாய் எதுதான் இருக்கமுடியும்?

உடலில் ஏற்படும் ஊனத்தைக் காலங்கள் ஆற்றிவிடும். மனதில் ஏற்படும் ஊனம் மரணம் மட்டும் ஆறாமல் வலிக்குமே!

வாழ்வில் எப்போதுமே கலங்காத மனம், இப்போது கலங் கித் தவித்தது. இதுவரை எதற்குமே கலங்காத கண்களென்னும் குளமும் உவர் நீரால் நிரம்பி கன்னங்களின் வழியே வழிந் தோடுவதைக் கூட உணர முடியாதவராய் சிலையாய் அமர்ந் திருந்தார் மகாலிங்கம்.

அந்தக் கண்ணீர் துளிகள்

தன் மனைவியை நினைத்தா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஊனமாகிக்போன வாழ்வை நினைத்தா?

இல்லை...

அப்படியானால்?

வாழும்போது எப்படியெல்லாமோ வாழ்ந்துவிட்டோமே என்ற சூழ்நிலையில் வாழ்வைப் புரிந்துகொண்டபோது வாழ்வின் கடைசி விளிம்பில் நிற்பதை உணர்ந்துகொண்டு எதுவுமே இயலாத நிலையில் இறுதியாய் அவர் சிந்திய உணர்ச்சிகளின் உயிர்துளிகள் அவை.

- 'நதி' சஞ்சிகை

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடையாகாத விதைப்புகள்

**கு**திப்போமா அல்லது விடுவோமா, கோகிலாவின் மனமும் அவளது உடலைப் போலவே தள்ளாடியபடி இருந்தது.

எதிர்காலத்தை நினைத்தாள். அது கோரமாய் அவளைக் குத்தி கிழிக்கக் காத்திருந்தது. அந்த வேதனைகளை விட இந்த மரண வேதனை பரவாயில்லைப் போல் இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தாள். கண்ணுக்குக் கெட்டிய தூரம்வரை யாருமில்லை. கண்களை இறுக மூடினாள். மூடிய கண்களுக்குள் அப்பாவும் ஆச்சியும் தெரிந்தனர். நினைவுகளை மறக்க முயன்றாள், முடியவில்லை.

"ச்சா தற்கொலை செய்யிறது கோழைத்தனம் எண்டு ஆர் சொன்னது. அதுக்குத் துணிவு வேணும்." அவளது இதழ்கள் மெல்ல முணுமுணுத்தன.

"இதுதான் கடைசி" என நினைத்தவாறு மீண்டும் கண்களை இறுக மூடினாள். சுற்றிவந்த சுற்றத்து நினைவுகளை கட்டாயப் படுத்தி விலக்கினாள். நடந்து முடிந்துவிட்ட பயங்கர சம்பவத்தை நினைத்தாள். தானாகவே துணிவு வர அந்த மேட்டிலிருந்து எம்பி குளத்தினுள் பாய்ந்தாள். "தொபீர்" என்ற சத்தத்துடன் நீர் சிறிது நேரம் சலசலத்தது. அடைந்திருந்த பாசிகள் மேலெழுந்தன. கோகிலாவோ சலனமின்றி?

***

**கோ**கிலாவுக்குள் ஓர் இனம்புரியாத உணர்வு. தன்னை அசைத்துப் பார்க்கிறாள், அசைய முடியவில்லை. தன்னைச்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுற்றிப் பலர் நிற்பதை உணர்கிறாள். ஆனால் கண்களைத் திறக்கவோ; பார்க்கவோ முடியவில்லை. முயற்சிக்கிறாள் முடியவில்லை. ம்ஹூம் முடியவில்லை. ஓ நான் செத்திட்டே னெல்லோ, என்ர ஆவி சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ வந்திட்டுது போல. அதால தான் உணர்வு இருந்தும் என்ர உடம்பை அசைக்க முடியேல்ல, என்ர ஆன்மா உடம்பைப் பிரிஞ்சு தனித்தல்லவா நிக்கிறது. இப்ப என்ர பிணம் அநாதரவா குளத்தில மிதந்து கொண்டிருக்கும். அந்தக் காட்டுக்குள்ளே யார் வரப்போகினம். மிருகங்கள் தான் என்ர உடம்பை பங்குபோடப் போகுது. எலும்புகளும் குடலுமாய் என்ரை உடம்பு உருக்குலைஞ்சு கிடக்கும்! நினைக்கும்போதே அவளுக்குக் கவலையாக இருந்தது. ச்சா! உயிரோடை இருக்கேக்கையே எத்தினை மிருகம் என்னை பங்கு போட்டிட்டுது? இப்ப உயிரில்லாத உடம்பை நினைச்சு கவலைப்படுகிறனே. போகட்டும் எப்படியாவது போகட்டும்.

"ஐயோ என்ர அம்மா!" ஒரு பெண்ணின் அவலக்குரல் அவள் அருகில் கேட்கிறது. அதைத் தொடர்ந்து "சத்தம் போட வேண்டாம். அங்கால போங்கோ" அதட்டுகிறது ஒரு ஆண்குரல்.

என்னயிது நான் நரகத்துக்குத்தான் வந்திட்டன் போல. பூமியில பட்ட கஷ்டம் காணாதெண்டு இங்கேயுமா? பாவம் ஒரு பெண்ணை துன்புறுத்துகிறார்கள் போல. அவள் கதறும் போது அவளை அதட்டுகிறான் நரகத்தில் பணிபுரியும் கொடுமைக் காரன். இப்படித்தான் எனக்கும் நடக்கப்போகுதோ! கொதிக்கும் எண்ணெய், எரியும் நெருப்பு. இப்படி ஆச்சி கதையில சொன்னது போல எல்லாம் நடக்குமோ? அவள் மனம் எதையெதையோ நினைக்கிறது.

மெல்லக் கண் திறக்க முயற்சிக்கிறாள். நடப்பவற்றைக் காண்பதற்காய். ஏதோ மங்கலான ஒளியாய்த் தெரிகிறது. "ஓ! என் கண்ணுக்கு நரகம் தெரியத் தொடங்குகிறதோ" இப்பொழுது நேரே பார்க்கிறாள். ஓலையால் வேயப்பட்ட கூரை தெரிகிறது. "ஓ இங்கும் எங்கள் வீட்டுக்கூரை மாதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறதே! இங்கும் இப்படி ஓலையால் தான் கூரை போட்டு வைத்திருக்கிறார்களோ! அதிசயமாகத்தான் இருக்கிறது.இன்னும் எத்தனை எத்தனை அதிசயங்களைக் காணப்போகிறேனோ. அத்தனைக்கும் என் மனதைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும்.'' கோகிலாவின் மனதில் பலவித புரியாத எண்ண ஓட்டங்கள்.

பார்வையைச் சுற்றிலும் சுழற்றுகிறாள். மனித உருவங்கள் மங்கலாய்த் தெரிகின்றன. எப்படி? இங்கு ஆன்மாக்களுக்கு மட்டும்தானே இடம், உடலோடு இவர்கள் எப்படி வந்தார்கள்? நானும் என்ர உடம்போடதான் வந்திருக்கிறேனோ?

எழும்ப முற்படுகிறாள். ஒரு கை அவளைத் தடுக்கிறது. "எழும்ப வேண்டாம் கொஞ்சநேரம் படுத்திரு" என்கிறது ஒரு குரல். அவளது பார்வை தெளிவடைகிறது. சுற்றிலும் பார்க் கிறாள். அவளைச்சுற்றி அப்பாவும் ஆச்சியும் அழுதபடி நிற்கிறார் கள். பாக்கியம் அக்காவும் அருகில் நிற்கிறார்.

"கடவுளே நானின்னும் சாகவில்லையா? என்ன கொடுமை. சாவதிலும் கொடுமை இனி வாழ்வதல்லவா, கடவுளே. என்னை யேன் காப்பாத்தினாய்? நான் எப்படி உயிர் தப்பினன்." அவளை மேலும் சிந்திக்கவிடாது தடுத்தது ஆச்சியின் குரல். "ஏன் மோனை உனக்கு உப்பிடியொரு நினைப்பு வந்தது. தாயில்லாப் பிள்ளையெண்டு பொத்திப் பொத்தி வளர்த்தேனே. எந்தப் பாடையில போவாரின் கண் பட்டதோ. என்ர ராசாத்தி இப்பிடிக் கிடக்கிறாளே.'' ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருந்தாள் ஆச்சி.

"சும்மா சத்தம் போடதையெணை. உயிர் பிழைச்சாளே எண்டு சந்தோஷப்படாமல் குளறிக் கொண்டிருக்கிறாய்." என்று தடுத்தாள் பாக்கியம். அப்பா தோளில் இருந்த துண்டால் வாயைப் பொத்தியபடி தாரை தாரையாய் கண்ணீர் விட்டழுது கொண்டிருந்தார்.

'நான் செத்திருந்தால் அதோடையே போயிருக்கும் அவை யின்ர கவலை. இப்ப நான் தப்பினதால எத்தின பேரிட்ட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எத்தினை கதை கேக்க வேண்டிவருகிறதோ தெரியாது. பாவம் அப்பா. ஆச்சி எண்டாலும் கதைக்கிறவைக்கு நேரநேர வெட்டொண்டு துண்டுரெண்டு எண்ட கணக்கா கதை சொல்லி விட்டிடும். அப்பா மனதுக்குள்ள நினைச்சு நினைச்சு அழுவார். ம், இனி என்ன நடக்குதோ? கோகிலாவின் மனம் பலதையும் நினைத்துக் கலங்கியது.

இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. வீட்டின் திண்ணையிலே அமர்ந்திருந்தாள் கோகிலா. தந்தை ராசன் ஆட்டுக்கு குழை வெட்டுவதற்காகப் போயிருந்தார். ஆச்சி மாட்டடி கூட்டிக் கொண்டிருந்தார். ஆச்சியைப் பார்த்து கோகிலா அடிக்கடி ஆச்சரியப்பட்டிருக்கிறாள்.

'ஆச்சிக்கு எண்பது வயதாகிறது. ஆனாலும் எத்தனை சுறுசுறுப்பு. அப்பாவும் இப்படித்தான் கொஞ்சநேரம் சும்மா இருக்கமாட்டார். ஆனாலும் அடிக்கடி வரும் நெஞ்சுவலி அப்பாவை நிலைகுலையச் செய்து விடும். இப்ப அம்மா இருந்திருந்தால்?' என்று நினைத்தவளின் கண்கள் குளமாகின. நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன.

பச்சைப் பசேல் என காட்சி அளிக்கும் மருதங்குளப் பிரதேசம். வயல் விதைப்புக்கும் தோட்டத்துக்கும் குறைவில்லை. கிராமத்திற்கு காவலாய் இருப்பவர் மருதங்குளப் பிள்ளையார். மருத மரங்கள் சூழந்த பிரதேசத்தில் குளத்தின் அருகில் குடியிருந்து கிராமத்துக்கு அருள் பாலிக்கிறார். இப்படிப்பட்ட வளமிக்க அழகிய கிராமத்தில் காலம் காலமாய் வாழ்ந்து வந்த வர்கள் தான் நாங்களும். ஆனால், இராணுவம் யாழ்ப்பாணத்தை பிடிச்சு அப்படியே முகமாலை வரை வந்தது. மிருசுவில் சந்திக்கும் எழுதுமட்டுவாளுக்கும் இடையில் இருப்பது ஆசைப் பிள்ளை ஏத்தம் (ஏற்றம்). இந்தப் பாதையில் இருந்து வடக்கு நோக்கிய பாதையில் கிட்டத்தட்ட ஒன்றரை மைல் தூரத்தில் இருப்பது தான் மருதங்குளம். ஆசைப்பிள்ளை ஏத்தத்தில் ஆமிக்காரனின் பெரிய முகாம் இருக்கிறது. அதோட கண்டி வீதியில் இருந்து ஐம்பது மீற்றர் தூரத்தில் உயரமான "பண்ட்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துள்ளது இராணுவம். இதனால் அதைச் சுற்றியிருந்த சனத்தின்ட காணி, வேலி எல்லாம் நாசம். பண்டுக்கு வெளியில் நாங்கள் இருக்கிறதால நாங்கள் சுதந்திரமா அதால போய்வர ஏலாது. இதை விட நாகர் கோவிலிலும் பெரிய படைமுகாம் ஒண்டு இருக்கிறது. அதன் இராணுவ போக்கு வரத்துக்கள் எங்கட பிரதேசத்துக்காலதான் நடைபெறும். எமக் கொல்லாம் இராணுவம் "பாஸ்" தந்திருக்குது. எமது அடிப் படைத் தேவைகளுக்குக் கூட நாம் "பண்ட்" தாண்டித்தான் போக வேணும். அப்பவெல்லாம் அவையளின்ட "பாஸை" கட்டாயம் கொண்டு போனால் தான் அனுமதி. இல்லையேல் பட்டினிதான்.

வெளியில இருந்து சொந்தக்காரர் ஆரும் உள்ளுக்குள்ள வர ஏலாது. "பாஸை" மாதத்திற்கு ஒரு தடவை புதுப்பிக்க வேற வேணும். அதுக்காக இரண்டு, மூண்டு நாளா அவையளிட்ட அலைய வேணும். காலமையில இருந்து பின்னேரம் வரைக்கும் கியூவில நிண்டு வெய்யில்ல காய வேணும். எங்கிருந்தோ வந்தவன் எங்கட இடத்தில எங்களுக்கு கட்டுப்பாடு போட்டுட்டு தான் மட்டும் சுதந்திரமா திரிவதை பார்க்கேக்க வயிறு பத்தியெரியும். என்ன செய்யிறது? காலம ஆறு மணியிலிருந்து பின்னேரம் ஆறுமணி வரைதான் அந்த பாதையால பயணம் செய்யமுடியும். அதன் பிறகு உயிர்போனாலும் அதைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை. விடவேமாட்டார்கள்.

இப்படித்தான் ஒருநாள் இரவு எட்டுமணி இருக்கும். அம்மா மாட்டுக்கு வைக்கல் எடுத்துப் போட்டுவிட்டு வந்த கொஞ்ச நேரத்தில காலில ஏதோ வலியெண்டு சொன்னா. அம்மா வலி வந்த இடத்தைக் காட்ட ஆச்சி லாம்பைத் தூக்கிப்பிடித்தபடி "இஞ்சை ஒருக்கா வாடி மோனை, கொம்மாண்ட காலில ஏதோ குத்தியிருக்காம். என்னெண் டொருக்கா பார். எனக்கு கண்ணும் தெரியேல்லை...!" என கோகிலாவை கூப்பிட்டாள்.

அம்மாவின் காலைப் பார்த்த கோகிலாவுக்கு ஒரே பதற்றம். 'ஐயோ! பாம்பு கடிச்ச மாதிரியல்லோ கிடக்கு!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சொல்லுகிறாய் விடு பாப்பம்" ராசனும் பார்த்தார். அவரின் முகம் இருண்டு கறுத்தது. அதற்குள் தாய் வலிதாளா மல் மயங்கிச் சரிந்தாள்? உடனே ஆச்சி பக்கத்து வண்டில் ரத்தினத்திடம் ஓடிப்போய் வண்டிலப் பிடிச்சுக் கொண்டு வந்தாள். மயங்கிய ரங்கநாயகியை வண்டிலில் ஏத்தி ராசன், ஆச்சி இரண்டு பேருமா வெளிக்கிட்டு விட்டார்கள். "எடி மோனை நீ இஞ்ச தனியா நிக்காமல் பாக்கியம் வீட்டில் போய் நில்லு. நாங்கள் கெதியில வந்திடுவம்." என்றாள், ஆச்சி கோகிலாவைப் பார்த்து.

"எங்கேயணை இப்ப கொண்டு போறது. மிருசுவில் ஆஸ்பத்திரியில் ஆமிதான் இருக்கிறான். இப்ப அங்கால சாவகச்சேரிக்குப் போகவும் சரி வருமோ தெரியாது.'' என்று இழுத்த வண்டில் ரத்தினத்திடம் "நாவலடியில பாம்புக்கடி பரியாரியார் சின்னையர் இருக்கிறாரெல்லோ. அங்க சுறுக்கா விடுபாப்பம். மோனை உந்த அரிக்கன் லாம்பை ஒருக்கா தா. இருட்டுக்க போக உந்தத் தறுதலையார் சுட்டும் போடுவாங்கள். பாடையில போவாரோட நாங்கள் படுறபாடு." திட்டியபடியே ஆச்சி லாம்புடன் வண்டியில் ஏறிவிட்டாள்.

வண்டி கண்களில் இருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள் கோகிலா. அம்மாவுக்குச் சுகமாகி காலையில் வந்துவிடுவார்களென எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். இவள் எதிர்பார்த்தது மாதிரி காலையிலே வந்தார்கள். ஆனால் தாய் ரங்கநாயகி இவ்வுலகை விட்டே போயிருந்தாள். "என்ன நடந்தது?" அழுகையுடன் கேட்ட கோகிலாவிடம்;

"பண்ட்டடியில் போய் நிண்டம். காவலுக்கு நிண்ட ஆமி வந்து ஆர் என்ன எண்டு விசாரிச்சுப் போட்டு போகேலாது எண்டுட்டாங்கள். பாம்பு கடிச்சுப் போட்டுது. உடனே போகாட்டி என்ர மருமகளை நான் உயிரோட பார்க்க முடியாது எங்கள விடுங்கோ. எண்டு கெஞ்சிக்கேட்டன், ஆனா, அந்தப் படுபாவி யள் விடிஞ்சாப்பிறகு தான் விடுவம் எண்டுட்டாங்கள். என்னால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னடி செய்யமுடியும்? மண்ணள்ளித் திட்டிப் போட்டுத்தான் வாறன். உருப்படமாட்டாங்கள் உவங்கள், நாங்கள் படுற வேதனையைப் பார்த்துச் சிரிச்சுக்கொண்டு நிக்கிறாங்கள். குறுக்கால போவாருக்கு எங்கட நிலை சிரிப்பாக்கிடக்கு. சில நேரம் மனம் மாறி விடமாட்டாங்களோ எண்டு நிண்டம்.... அதுக்குள்ளே எங்கள விட்டிட்டுப்போட்டாளே இந்த மகராசி, ஐயோ போட்டாளே. இந்த குமர் பெட்டைய இந்த கிழடி என்னெண்டு தன்னந்தனியா காப்பாத்தப் போறேனோ." என்று ஆச்சி நெஞ்சிலடிச்சு அழுத அழுகை இப்பவும் கண்ணுக்குள் நிழலாடுகிறது.

யாரோ தோளில் தட்டுவது போலிருக்கவும் திடுக்குற்று திரும்பிப் பார்த்தாள். கைவிளக்குடன் ஆச்சி நிண்டு கொண்டிருந் தாள்.

"என்னடி மோனை யோசிச்சுக்கொண்டிருக்கிறாய்?" கேட்ட படி கைவிளக்கை அருகில் வைத்துவிட்டு கோகிலாவுக்கு அருகில் அமர்ந்து கொண்டாள். தந்தையும் ஆட்டுக்கு குழை கட்டிவிட்டு வாசல்படியில் வந்து அமர்ந்து கொண்டார். நிலவு பால்போல் எறித்துக்கொண்டிருந்தது.

ஆச்சியும் தந்தையும் தன்னிடம் ஏதோ ஒரு கேள்விக்கு விடையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவ ளுக்குப் புரிந்தது. அவளுக்கு அந்தக் கேள்வியும் தெரியும். பதிலும் தெரியும். ஆனாலும் அதைச் சொல்லும் துணிவு அவ ளுக்குள் இருக்கிறதா? சந்தேகம் தான்.

விறகு பொறுக்குவதற்காக சற்றுத் தள்ளியுள்ள ஒரு காட்டுக்கு ஆச்சியும் அவளும் போவது வழக்கம். அன்றும் அப்படித்தான் பக்கத்துவீட்டுப் பாக்கியம் அக்காவும் ஆச்சியும் கோகிலாவும் விறகு பொறுக்கச் சென்றிருந்தார்கள். சிறிது நேரத்தில் ஆச்சி "மோனை கோகிலா. கொப்பர் எங்க போனாரோ தெரியாது பொழுது படுறதுக்கு முதல் மாட்டை சாய்க்கவேணும். நான் அந்த விறகுகளை கொண்டு போறன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் பாக்கியமும் பிறகு வாங்கோ. ஆக நேரஞ் செல்லும் மட்டும் நிக்காமல் கெதியில வந்திடுங்கோ.'' சொல்லி விட்டு தலையில விறகுக்கட்டைத் தூக்கி வைத்துக் கொண்டு விறுவிறு என்று நடக்கத் தொடங்கிவிட்டாள்.

இருவரும் விறகு பொறுக்கிக் கொண்டு நிற்கும்போது கெலி ஒன்று தாழ்வாகப் பறந்துவர "கோகிலா கெலிவருகுது. எங்கயாவது ஒளிஞ்சுகொள் கண்டாங்கள் எண்டால் சுட வெளிக்கிட்டுடுவாங்கள். ஓடு. ஓடு." எனக் கத்தினாள் பாக்கியம். என்ன செய்வது என்று புரியாத கோகிலா சிறிது தூரம் ஓடி மூச்சு வாங்க ஒரு பற்றைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள். கெலியின் சத்தம் மறைந்ததும் மெதுவாக வெளியே வந்து பார்த்தாள். எங்க பாக்கியமக்கா? "அக்கா, அக்கா" என்று பல தடவை கூப்பிட்டுப்பார்த்தாள். ம்ஹூம் அவளைக் காணவில்லை. ஓடி வந்ததில் திக்குத்திசை தெரியாத இடத்துக்கு வந்துவிட்டதை அப்போது தான் உணர்ந்தாள் கோகிலா.

"கடவுளே இன்னும் கொஞ்சநேரத்தில இருட்டி விடுமே. எப்படி நான் தட்டத்தனிய இந்தக் காட்டுக்குள் நிக்கப் போறனோ. ஆச்சியும் அப்பாவும் தேடப் போகினமே" அவளது நெஞ்சு திக் திக்கென அடித்துக் கொண்டது.

தனியே தவித்துக்கொண்டிருந்தவள் "ஏய் கொட்டியா, கொட்டியா." என கத்தியதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள் அதிர்ச்சியில் உறைந்தே போனாள். ஐந்தாறு சீருடையினர் இவளை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தார்கள். தன் உயிரே போனாலும் பறவாயில்லை இந்தக் காடையர்களிடம் பிடிபடக்கூடாதேயென்று எண்ணியவள் ஓடத்தொடங்கினாள். வந்த காடையர்களிடம் இவளது மரண ஓட்டம் வெற்றி பெற வில்லை. அவளைச் சூழ்ந்து கொண்டு நின்றவர்களில் இருவர் அவளைத் தள்ளி கீழே விழுத்தினார்கள். அலறியவளின் வாய்க்குள் துணியைத் திணித்துவிட்டு அவளது கைகள் இரண்டையும் கட்டிக்கொண்டான் ஒருவன். மற்றவன் இரு கால்களையும் பிடித்தபடி அவளைக் தறதற என இழுத்துக் கொண்டு பற்றைகள் நிறைந்த இடத்திற்குச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் சென்று கொண்டிருந்தனர். தன் கூட்டத்தை விட்டு தனியே பிரிந்த அப்பாவி முயல்குட்டி ஒன்றை சில வல்லூறுக் கூட்டங்கள் கொத்திக்குதறி சின்னாபின்னமாக்கின. அந்தக் கொடிய வல்லூறுகள் தம் பசி தீர்ந்ததும் வந்த வழியே திரும்பிவிட்டன.

தனக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமையை எண்ணி வேதனைப் பட்டாள் கோகிலா. பாவிகள் உயிரை மட்டும் ஏன் மிச்சம் வைச்சுட்டு போறாங்கள். அதையும் எடுத்திருக்கலாமே. இனி நான் என்ன செய்வேன். சிறிது நேரம் அழுது கொண்டிருந்தவள் எழுந்தாள். கால்கள் போனபோக்கில் நடந்தாள். எதிரே ஒரு குளம். தனது எண்ணத்தை நிறை வேற்ற சரியான இடம் இதுதான் எனக்கருதினாள். தன்னை மாய்த்துக்கொள்ள அக் குளத்தினுள் பாய்ந்தாள். ஆனால், இவள்தான் மரணத்தை தீர்ப்பாக நாடினாளே தவிர, விதி இன்னும் அவளுக்குத் தீர்ப்பு வழங்கவில்லைப் போலும்.

பாக்கியம் அக்கா போய், "கோகிலாவைக் காணேல்லை" என்று சொன்னதும் பதறியடித்து அவளைத் தேடி வந்த தந்தை அப்போது தான் குளத்தினுள் பாய்ந்துவிட்ட அவளைக் கண்டு உடனே காப்பாற்றி வீட்டுக்கு கொண்டுவந்து சேர்த்துவிட்டார். இனி என்ன செய்வது வாழ்ந்தாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. 'கடனே' என்று வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

நடந்த சம்பவங்கள் நெஞ்சைப் பாறாங் கல்லாய் அழுத்த, கண்களை நீர் மறைக்க அப்படியே ஆச்சியின் மடியில் முகம் புதைத்தாள் கோகிலா. "என்னடி மோனை. நீ. இப்படியிருக் கிறதை பார்க்க என்னால தாங்க முடியாமக் கிடக்கு, ராசாத்தி. ஏன், ஏன் உனக்குத் தற்கொலை எண்ணம் வந்தது. உனக்கு என்ன நடந்தது." என அவளின் தலையைக் கோதியபடி, இத்தனை நாளாய் நெஞ்சில் அடக்கி வைத்த கோகிலா எதிர்பார்த்த கேள்வியை மெதுவாக ஆச்சி கேட்டேவிட்டாள். ஆச்சியின் கேள்வி கோகிலாவை மேலும் மேலும் அழத்தான் தூண்டியது. அழுது கொண்டிருந்தவளின் பதிலை எதிர்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சியும் ராசனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர். அழுகையை மெல்ல மெல்ல குறைத்துக் கொண்டே கோகிலா, ஆச்சியின் மடியினுள் முகத்தைப் புதைத்தபடியே நடந்த சம்பவத்தை விக்கி விக்கிச் சொல்ல, ஆச்சியும் ராசனும் அதிர்ச்சியில் உறைந்துபோய் விட்டார்கள்.

“ஐயோ உன்னை ஊட்டி ஊட்டி வளர்த்தேனே. உந்த குறுக்கால போவாங்களிண்ட கையில குடுக்கத்தானா? உனக்கு கல்யாணம் கட்டிவைச்சு கையில குழந்தையளோட பாக்க வேணும் எண்டு ஆசைப்பட்டேனே. எல்லாத்தையும் நாசமாக்கிப் போட்டாங்களே. உருப்படமாட்டங்கள் பாவியள்” என ஒப்பாரி வைத்தழுத தாயைப் பார்த்து “ஏனணை ஊரெல்லாம் பறதட்டிற மாதிரி ஒப்பாரி வைக்கிறாய். என்ர பிள்ளை?” அதற்கு மேல் பேச முடியாமல் நாத்தளுதளுக்க, தோளிலிருந்த துண்டை வாயில் பொத்தியபடி அழுதார் ராசன். திடீரென வீசிய காற்றில் கைவிளக்கு அணைந்து, வீடே இருட்டானது.

இரவு முழுவதும் சரியாகத் தூங்காததால் காலையில் எழும்புவதற்கு கோகிலாவுக்கு நேரமாகி விட்டது. எழும்பி வாசலுக்கு வந்து பார்த்தாள். விறாந்தையில் அப்பா படுத்திருந் தார். ‘என்ன அப்பா இப்படி படுத்ததை நான் பாத்த தில்லையே,’ என எண்ணி அருகில் சென்று பார்த்தாள். “அப்பா” என மெதுவாகக் கூப்பிட்டாள். விழிகளைத் திறந்தவர் மெல்ல எழுந்தார். “என்னப்பா ஏலாமல் இருக்குதா?” என்றவளிடம் “இல்லை மோனை சாடையா நெஞ்சு வலிக்கிற மாதிரி இருக் குது. அந்தக் குளிசையை ஒருக்கா எடுத்துத் தா?” மருந்தை யும் தண்ணீரையும் கொடுத்தவள் “ஆச்சி எங்க காணேலை.” எனத் தேட ஆரம்பித்தாள்.

“அவ எங்க போறது. இஞ்சனேக்க தான் நிப்பா.” என்றபடி அவர் மருந்தைக் குடித்தார்.

வளவெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு முற்றத்திற்கு வந்தாள் கோகிலா. தெருவில் கையில் ஏதோ குழையோடு நழுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுகிற முந்தானையைச் செருகியபடி ஆச்சி விறுவிறு என நடந்து வந்துகொண்டிருப்பது தெரிந்தது.

'விடியக் காத்தாலை மனுசி, உங்க எங்கே போட்டு வருகுது.' என்று எண்ணியவளாய் ஆச்சியையே பார்த்தபடி நின்றாள். ஆச்சி சாறி பிளவுஸ் போட்டு சீலையை பாவாடைக்கு மேல் சுற்றிக் கட்டுவா. அதை முந்தானையாகப் போடமாட்டா. ஆனால் எப்ப ஆமி இஞ்ச வந்து சேர்ந்துதோ, அன்றிலிருந்து படலையைத் தாண்டினாவெண்டால் சுத்தி யிருக்கிற சீலையின் ஒரு பக்கத்தை அவிட்டு முந்தானை போட்டுடுவா. இப்பவும் அப்படித்தான் இருந்தா. பாட்டியின் இந்த மாற்றத்தை கோகிலா அறிந்தாலும் அது பற்றி அவள் ஆச்சியிடம் எதுவும் கேட்ட தில்லை.

"எங்கயணை விடிய வெள்ளன வெளிக்கிட்டனி" என்று கேட்ட கோகிலாவை, "இஞ்ச சத்தம் போடாமல் உள்ளுக்க ஒருக்கா வா." என கையைப் பிடிச்சு குசினிக்குள் கூட்டிப் போனாள். அடுப்படியில் அவளை இருக்க வைச்சிட்டு, கொண்டு வந்த இலைகளில் சிலதை நெருப்பில் வாட்டினாள்.

பின் பச்சை இலைகளையும் போட்டு சாறெடுத்து ஏதேதோ எல்லாம் கலந்தாள். கோகிலா எல்லாவற்றையும் உற்றுப்பார்த்த படி புரியாது இருந்தாள். "ம் இந்தா குடி!" பேணியை நீட்டினாள். "என்னது." புரியாது கேட்டாள் கோகிலா. "கேள்வி கேக்காமல் குடி பாப்பம்." அதட்டினாள் ஆச்சி. பேணியை வாயில் வைத்து மெல்ல உறிஞ்சினாள். "சீ. பச்சைக் கச்சல் கைக்குது. வேண்டாம்" ஆச்சி அருகில் வந்து கோகிலாவின் முதுகை மெல்லத் தடவியபடி "மோனை உனக்கு நடந்த சம்பவத்தால வயித்தில ஏதும் வந்திடக்கூடாது. அதுக்குத் தான் இது. நீ உடனேயே சொல்லியிருந்தால் பரவாயில்லை. இப்ப இரண்டு, மூண்டு நாளாச்சு. இருந்தாலும் குடி பாப்பம்." ஆச்சி சொன்ன போது தான் தனக்கு இப்படியொரு துரதிர்ஷ்டமான பின் விளைவொன்று இருக்கிறது என்பதை உணர்ந்தாள் கோகிலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடவுளே. எனக்கு அப்படி ஏதும் நடந்திடக்கூடாது." கையிலிருந்த மருந்தை மளமளவென குடித்தாள். ஆரம்பத்தில் இருந்த கசப்பு இப்பொழுது அவளுக்குத் தெரியவில்லை.

என்னதான் ஆச்சி கைமருந்து செய்தாலும் அது பலிக்கவில்லை. கோகிலாவின் வயிற்றில் உயிர் ஜனனித்து மூன்று மாதங்களை நெருங்கி விட்டது. இதற்கு மேல் ஏதும் மருந்து செய்தால் அது கோகிலாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற நிலையில் ஆச்சி தன் முயற்சிகளை எல்லாம் கைவிட்டாள். கோகிலாவுக்கோ அந்த உயிரைத் தன் வயிற்றில் சுமப்பதே அருவருப்பாக இருந்தது. தாய்மை என்பது எவ்வளவு சுகமானது. ஆனால், இவளுக்கு சுமையாகவல்லவா இருக்கிறது.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. வயிறும் பெருத்து வரத் தொடங்கிற்று. குழந்தை உள்ளிருந்து உதையும் பொழுதெல்லாம் அன்று அவள் பட்ட அவலம் கண்முன் விரிந்தது. எதை மறக்க நினைத்தாளோ அதை அடிக்கடி ஞாபகப்படுத்துவதாய் இருந்தது வயிற்றில் வளர்ந்த, அந்த உயிரின் மூலமே தெரியாத கரு.

அன்று மாலை மாடு சாய்த்துக்கொண்டு வந்து கட்டைகளில் கட்டிவிட்டு வீட்டிற்குள் வந்த ஆச்சி, கோகிலா வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். ஏற்கனவே அவள் கைமருந்துகளுக்குத் தேவையான மூலிகைகளை சேகரித்து வைத்திருந்தாள். எனவே, உடனே செயலில் இறங்கினாள். கோகிலாவோ வேதனையில் துடித்தாள். ஆச்சி ஒரு மருத்துவிச்சியாகவே மாறியிருந்தாள். இப்படி எத்தனை பேருக்கு வீட்டிலேயே பிள்ளைப் பேறு பார்த்திருப்பாள் அவள்.

குழந்தை பிறந்ததும் கோகிலா மயக்கமுற்றாள். குழந்தையைப் பார்த்த ஆச்சி அதிர்ச்சியடைந்தாள். குழந்தை ஊனமாகப் பிறந்திருந்தது. "பிள்ளையாரப்பா. ஏன் இப்படி துன்பத்தின் மேல் துன்பமாய் தாறாய்." நின்று புலம்புவதற்கு நேரமின்றி குழந்தையை சுத்தப்படுத்தி விட்டு கோகிலாவுக்கு அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவள் அவள் கைநாடியைப் பிடித்துப் பார்த்தாள். அதிர்ச்சி அடைந்தவள், சந்தேகத்தில் மீண்டும் மீண்டும் அவள் கைநாடியைப் பிடித்துப்பார்த்தாள். தன் சந்தேகம் தீர்ந்தவளாய் “ஐயோ! எங்களை விட்டுட்டுப் போட்டியே. என்ர ராசாத்தியின்ர வாழ்க்கையையே பாழடிச்சுப் போட்டாங்களே, படுபாவியள். அந்தக் கொடுமைக்காரர்களின் பிள்ளைய பார்க்க விரும்பாமல் எங்களை விட்டிட்டுப் போட்டியோ. ஐயோ ராசா. இஞ்ச வந்து பாரடா உன்ர மகள் கிடக்கிற கோலத்தை!'' ஆச்சியின் ஒப்பாரிச் சத்தம் கேட்டும் ராசன், வாசல்படி மண் சுவரில் சாய்ந்தபடி எந்தவித சலனமும் இன்றி இருந்தார். பல தடவை கூப்பிட்டும் மகன் வராததால் வெளியே வந்து ராசனின் கையைப் பிடித்து “நீ பெத்த மகளை வந்து பாரடா” என குளறியபடி இழுத்தாள். அவர் அப்படியே நிலத்தில் சரிந்தார். மகளின் இறந்த செய்தி அவரின் செவியை அடைந்ததுமே அவரின் உயிரும் அமைதியாய் மகளின் உயிரின் பின்னே சென்று விட்டது. சில நிமிடங்களில் எல்லாமே மாறிவிட்டன.

மகனையும் பேத்தியையும் பறிகொடுக்கக் காரணமாய் இருந்த அந்த குழந்தையைப் பார்த்தாள். அது அமைதியாய் தூங்கிக்கொண்டிருந்தது. இது யார் செய்த பாவம்? நாம் செய்த பாவமா? இல்லை இந்த குழந்தை செய்த பாவமா? ஏதும் அறியா இந்தப் பிஞ்சுக் குழந்தை என்ன பாவம் செய்தது? பாவக் காரர்களால் விதைக்கப்பட்ட பாவமறியா பாலகன் அல்லவா இது! அந்தக் குழந்தைக்காகவே ஆச்சி வாழ முடிவு செய்தார்.

வருடங்கள் உருண்டோடின. குழந்தைக்குத் தன்னால் இயன்ற மட்டும் வைத்தியம் செய்து பார்த்துவிட்டாள் ஆச்சி. ஆனால் எந்தவித முன்னேற்றமும் இல்லை. இரண்டு கைகளும் கால்களும் உட்பக்கம் வளைந்திருந்ததுடன் எதுவித செயற் திறனும் அற்று இருந்தது. ஆறு வருடங்கள் சென்ற நிலையில் கூட அந்தக் குழந்தை இன்னும் ஒரு வார்த்தை பேசவில்லை. அழுவதும். “ஆ, ஊ” எனக் கத்துவதும் கைகால்களை நிலத்தில் போட்டு அடிப்பதும் தான் அந்தக் குழந்தைக்கு தெரிந்ததே தவிர, வேறெதுவும் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குப் பிறகு இவனை ஆர் பாக்கிறது.... இந்தப் பாவத்தை ஏன் கடவுள் இப்பிடி பரிதவிக்க விட்டு வேடிக்கை பார்க்கிறாரோ தெரியாது? ஆச்சிக்கு எப்பவும் இதே நினைப் புத்தான்.

குழந்தை கையைக் காலை அடித்து வீரிட்டு அழுதது. "பசி போல. பால் குடுக்கவேணும்." எண்டு சொல்லியபடி குசினிக்குள் போய் அப்போதுதான் கறந்த பாலை அடுப்பில் வைத்துவிட்டு நிமிர்ந்தவள், தலையைச் சுற்றுவது போல இருக்கவே அருகில் இருந்த சுவரைப் பற்றினாள். அப்படியே சாய்ந்து நிலத்தில் வீழ்ந்தாள். அவளது உடல் கூட்டை விட்டு உயிர் பிரியவும் சட்டிக்குள் இருந்த பால் பொங்கி அடுப்பினுள் விழுந்து அடுப்பணையவும் சரியாக இருந்தது.

ஏதும் அறியாத அந்தக் குழந்தை கால் கையை தரையில் அடித்தபடி பசியால் அழுதுகொண்டிருந்தது. எல்லாம் விதி என்றே சொல்லிக் கொண்டிருந்தால் இந்தச் சதிகாரரை எப்போது அறுவடை செய்யத் துணிவது? அறுவடை செய்யப்படாத இந்த விதைப்புக்கள் எப்போது அறுவடையாகுமோ?

**- தினக்குரல் : 19.11.2006.**

☆ ☆ ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமுகில் தாண்டும் நிலவு

"டமார்!"

பயங்கரச் சத்தம்.

திடுக்கிட்டு நான் எழுகின்றேன். "டமார்.... டட்... டங்.... டங்.... டங்...." இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பாத்திரங்கள் வீசி எறியும் சத்தம் வருகின்றது.

"தரித்திரம் பிடிச்ச நாயே...! சனியனே...! உன்னைக் கொண்டாலும் என்ரை ஆத்திரம் தீராதடி."

பாலா மாஸ்ரரின் ஆக்ரோஷக் குரலொலி.

"டமார்..டட்..டங்..டங்.."

பாத்திரங்கள் வீசி எறியும் ஒலி மீண்டும்.

"பிள்ளையை மட்டும் பெத்துப் போடத்தெரியுது. புருசனுக் குச் சாப்பாடு போடத் தெரியாது. சமைக்கிறதை யெல்லாம் எவனுக்கடி குடுக்கிறனீ?"

"டங்.... டமார்.... டங்.... டங்."

குழந்தையின் வீரிட்ட அலறல்.

திடுக்கிட்டு எழும்பிட்டன் நான்.பக்கத்து வீட்டிலிருந்து வந்த அமளிதுமளிச் சத்தங்களைக் கேட்டுக் கொண்டிருந்த நான், சுஜிக்குட்டி அலறும் சத்தம் கேட்டதும் பொறுக்க மாட்டாமல், படுக்கையை விட்டு எழும்பிட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனியன் பிடிப்பான் வந்திட்டான். குடிச்சுப்போட்டு வந்து சீதாக்காவுக்கு அடிக்கிறவன். இப்ப சுஜிக்குட்டிக்கும் அடிக்கி றானோ தெரியாது. பாவி, படுபாவி, துலைஞ்சு போவான்.

மேசையில் மெல்லிசாய் எரிஞ்சு கொண்டிருந்த அரிக்கன் லாம்பை தூண்டி விட்டு சுற்றிவரப் பார்க்கின்றேன்.

அண்ணா அப்பாவுக்கு மேல காலைப்போட்டபடி வாயை 'ஆ' வெண்டு திறந்து கொண்டு நித்திரை கொண்டு கொண்டி ருக்கின்றார். 'ஆ' எண்டு கிடந்த அவற்றை வாயைப் பாக்கேக்க எனக்கு அவர் கிட்டிப்புள் விளையாடேக்க கிண்டிற சின்னக்குழி தான் ஞாபகம் வருகுது. 'இவன் செல்லடிச்சாலும் எழும்பமாட் டான் போல!'

அப்பா முழிப்போ, நித்திரையோ தெரியேல்லை. இடைக் கிட ஆடுற அவற்ற காலப் பாக்கேக்க, கண்ண மூடிக்கொண்டு பக்கத்து வீட்டில நடக்கிற சண்டைய காது குடுத்துக் கேட்டுக் கொண்டிருக்குமாப் போலதான் கிடக்கு.

அம்மா.

அவ கண்ணைத் திறந்தபடி என்னையே பாத்துக் கொண் டிருக்கின்றா.

"என்னடி சாமத்தில எழும்பி நிண்டு கொண்டு 'டான்ஸ்' ஆடிக் கொண்டு நிக்கிறாய்.?"

"ஒண்டும் இல்லையம்மா. சீதாக்காவ மாஸ்டர் போட்டு அடிக்கிறார் போல, சுஜிக் குட்டிக்கும் அடிக்கிறாரோ தெரியாது. பாவம், அழுது கேக்குது."

"அதுக்கிப்ப என்ன செய்யிறது?"

"ஒருக்கா பொட்டுக்கால போய் அடிக்க வேண்டாம் எண்டு செல்லிப் பேட்டு வருவமே."

"போ, போய்ச் சொல்லு. உனக்கும் சேத்து அடிப்பான், நல்லா வாங்கிக்கொண்டு வா."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா பதில் சொல்ல முதல் அப்பா பதில் சொல்லிப் போட்டார். எப்ப படுக்கையில இருந்து எழும்பினாரோ தெரியாது. நான் பேசாமல் அம்மாவைப் பார்க்கிறன்.

"சீதா பாவமப்பா. எந்தநாளும் அவன் போட்டு அடிச்சு வதைக்கிறான். பச்ச உடம்புக்காறி. அவள் அடிய வாங்கிக் கொண்டு சத்தம் போடாமல் இருக்கிறாள் பாவம். ஒருக்கா போய்..."

"என்ன விசர்க்கதை கதைக்கிறாய்? இப்ப போய் என்னத்தை கதைக்கப் போறாய். அவன் வெறியிலை வேற நிப்பான். எல்லாத்தையும் காலம பாத்துக் கொள்ளலாம். இப்ப பேசாமல் படுங்கோ பாப்பம்." அப்பா பேசிப்போட்டு போத்து மூடிக் கொண்டு படுக்கின்றார். சிக், எனக்கு அங்கபோய் பாக்குமட்டும் இனி நித்திரையே வராது. எல்லாரும் மூசி மூசி நித்திரை கொள்ளுறதப் பாக்க எனக்கு எரிச்சலெரிச்சலா வருகுது. மேசைக்குப் பக்கத்தில இருந்த கதிரையில இருந்து கொண்டு லாம்பின்ர வெளிச்சத்தை கூட்டிக் குறைச்சுக் கொண்டிருக்கிறன்.

'ச்சீ, பாவம் சுஜிக் குட்டியும் சீதாக்காவும், எனக்கு ஒரே அவையின்ர நினைப்பாத்தான் கிடக்கு. நித்திரையும் வருகு தில்லை.'

பாலா மாஸ்டர் இருக்கிறாரெல்லோ. அதுதான் சீதாக்கா வின்ர மனிசன். அவர் எங்கட பள்ளிக் கூடத்தில தான் உடற் கல்வி மாஸ்டரா இருக்கிறார். மாஸ்டர் என்றபடியால தான் எல்லாருக்கும் அடிச்சுக் கொண்டிருக்கிறாரோ தெரியாது. எப்ப பாத்தாலும் ஆரோடையேனும் சண்டை பிடிச்சுக் கொண்டு தானிருப்பார்.

விமலன் உவரக் கண்டால் 'இடியமின்' எண்டு தான் சொல்லுறவன்.

எனக்கு இடியமின் ஆரெண்டு உண்மைக்கும் தெரியாது. ஆனா இப்ப பாலா மாஸ்ரறப் போலத்தான் அவனும் இருப்பான் எண்டு நெக்கிறனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாக்காவும் பாலா மாஸ்டரும் இப்ப இருக்கிற வீட்டுக்கு ஒரு வருஷத்துக்கு முதல்தான் வந்தவை. அவையள் வந்த அண்டைக்குத்தான் என்ர பிறந்தநாள். என்ர பிறந்த நாளுக்குச் செய்த வடையையும் முறுக்கையும் கொண்டு நானும் அம்மாவும் அவையின்ர வீட்ட போட்டு வந்தனாங்கள். அண்டைக்கு இரவில தொடங்கின சண்டை தான் ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டு தானிருக்கு.

சீதாக்காவின்ர அம்மா ஒருக்கா வந்து நிண்டவா. பாலா மாஸ்டர் ஏதோ சண்டை பிடிச்சார்.

“இனி இஞ்ச வரக்கூடாது. வந்தியெண்டால் உன்ர மகளக் கொல்லுவன்” எண்டு சொல்லிப் போட்டாராம். இப்ப அவவும் வாறதில்லை. அவையின்ர வீட்ட ஒருத்தருமே வாறதில்லை. சீதாக்காவும் ஒரு இடமும் போக மாட்டா. எங்கட வீட்ட கூட வாறதில்ல எண்டாப் பாருங்கோவன். பாலா மாஸ்டர் அவவுக்கு அடிக்கிற நேரத்தில அவ சத்தமா அழவும் மாட்டா. அதால அந்த இடியமீன் அவவப் போட்டு அடிச்சாலும் எங்களுக்குத் தெரியாது.

அவவுக்கு சுஜிக் குட்டி பிறக்கேக்க அம்மா தான் ஆஸ்பத் திரிக்குக் கூட்டிக் கொண்டு போனவா. மாஸ்டர் அண்டைக் கெண்டு கூட வீட்டுக்கு நேரத்துக்கு வரையில்லயாம்.

எனக்கு சுஜிக்குட்டியெண்டால் நல்ல விருப்பம். சீதாக்கா ஆஸ்பத்திரியில இருந்து வந்தாப்பிறகு, நான் போய் பாக்கேக்க சுஜிக் குட்டி குட்டிக் கையை இறுக்கி மூடிக் கொண்டு கண்ணையும் மூடிக் கொண்டிருந்தான். நான் அவனை மெல்லமா தொட்டுப் பார்த்தன். பஞ்சுபோல இருந்தான். எனக்கு நல்ல ஆசையாய் இருந்தது. அப்பத்தான் சீதாக்கா, தம்பிக்கு ஒரு பேர் வைக்கச் சொல்லிக் கேட்டா. நான் தான் அவனுக்கு ‘சுஜீவன்’ எண்டு பேர் வைச்சனான். நான் நெடுகிலும் அவனை தூக்கி வைச்சு விளையாட்டுக் காட்டுறனான். அவனுக்கும் என்னில நல்ல விருப்பம்.

மாஸ்டர் நிண்டால் எனக்கு அங்க போகப் பயம். அம்மாவும் மாஸ்டர் நிக்கேக்க அங்க போகக்கூடாது எண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னவா. ஏனெண்டு கேக்க, 'அப்பிடித்தான், போக்கூடாது எண்டால் போக்கூடாது தான்,' எண்டு என்னோட எரிஞ்சு விழுந்தா, அம்மா இப்பிடித்தான். சில வேளை நானேதும் கேட்டால் பதில் சொல்லாமல் என்னைத்தான் பேசுவா.

பாலா மாஸ்டர் ஒரு 'ரைப்' எண்டு விஜிதாக்கா சொன் னவா. அவ எங்கட வீட்டுக்குப் பின் வீட்டில் தான் இருக்கிறவா. எட்டுக் கோடு விளையாடேக்க என்னையும் கூப்பிடுவா. எனக்கு கொக்கான் வெட்டிற விளையாட்டுத் தான் விருப்பம். ஆனா அம்மா வீட்டுக்குத் தரித்திரம் பிடிக்குமாம் எண்டு என்னை விளையாட விடுறதில்லை. கொக்கான் விளையாடேக்க நான் ஏந்தி இறக்கினன் எண்டால் ஒரு கொக்கானும் கீழ விழாது. அதால நான்தான் பழம் கூட எடுக்கிறனான். விஜிதாக்கா வீட்ட போற நேரம் நான் அங்க கொக்கான் வெட்டி விளையாடுறனான். அவையின்ர வீட்ட தரித்திரமும் பிடிக்கேல ஒண்டும் பிடிக்கேல. எங்கட அம்மா இப்பிடித்தான் சில நேரம் விசர்க் கதையள் கதைப்பா. அதவிடுங்கோ. உந்த பாலா மாஸ்டர் இருக்கிறா ரெல்லோ அவர் நல்லவரில்லையாம். அது எனக்கு எப்படித் தெரியமெண்டால்;

நான் பள்ளிக் கூடத்தால வரேக்க விஜிதாக்கான்ரை சைக்கிளிலதான் வாறனான். அவ பத்தாமாண்டு படிச்சுக் கொண்டிருந்தவா. அவவோட சேர்ந்து அவவின்ர சினேகிதப் பெட்டையளும் வருவினம். எனக்கு அவையளோடையெல்லாம் பெரிசாப் பழக்கமில்லை. நான் விஜிதாக்கான்ர சைக்கிள் பின் கரியரில இருந்து வாறனான். அப்பேக்க அவையள் பள்ளிக் கூடத்தில நடந்த கதையள் எல்லாம் கதைப்பினம்.

அண்டைக்கும் அப்பிடித்தான் பள்ளிக்கூடத்தால வரேக்க 'சுதன் அகிலாவுக்கு கடிதம் குடுத்தான். அவள் போய் கோமதி ரீச்சரிட்ட சொல்லிப் பெரிய பிரச்சினையாய் போச்சு. ரீச்சர் அதிபரிட்ட வேற சொல்லிப் போட்டா. பாவமடி சுதன், நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியெடி அவனுக்கு.' கூடவே சைக்கிளில் வந்த அக்கா சொன்னா.

"பாவமோ? அவன் பெட்டையளுக்கு கடிதம் குடுக்கத் தானடி பள்ளிக்கூடத்துக்கே வாறவன். அவனுக்கு இன்னும் வேணும். இதோட அவன் திருந்திடுவான்," எண்டா விஜிதாக்கா.

அவவின்ர சைக்கிளுக்குப் பின்னால இருந்து அவையின்ர கதையைக் கேட்டுக் கொண்டு வாறதில எனக்கொரு சந் தோஷம். பள்ளிக்கூடத்தில நடக்கிற விஷயமெல்லாம் எனக்கும் தெரிய வந்திடும். ஆனா நான் ஒருத்தருக்கும் ஒண்டும் சொல்ல மாட்டன். இப்பிடி இவையள் கதைக்கேக்க எனக்குச் சிலது விளங்காது. அதுமாதிரித்தான் அகிலாவுக்கு கடிதம் குடுத்த துக்கு சுதனுக்கு ஏன் அதிபர் அடிச்சவர் எண்டு எனக்கு விளங்கேல. கடிதம் குடுக்கிறது பிழையே? அப்பிடியெண்டால் எங்களுக்குக் கடிதம் கொண்டு வாற தபால்கார மாமாவுக்கும் அடிக்கவெல்லோவேணும். என்ன கதையோ எனக்கு ஒண்டுமா விளங்கேலை. திடீரெண்டு இன்னொரு அக்கா "உங்களுக்கு பாலா வாத்தியிண்ட விளையாட்டுத் தெரியுமேயெடி?" எண்டா.

பாலா வாத்தி எண்டதும் நான் கொஞ்சம் உசாராகி என்ன சொல்லப் போறா எண்டு அவவின்ர வாயையே பார்த்துக் கொண்டு வந்தன்.

"பாலா வாத்தியார் உடற்கல்வி படிப்பிக்கேக்க எல்லாரை யும் விளையாட்டு மைதானத்துக்கு வரச் சொல்லி உடற்பயிற்சி சொல்லிக் குடுத்தவராம்."

"உதில என்னடி விஷயமிருக்கு?"

"பொறனடி. சொல்லி முடிக்கவிடன். அவர் பெட்டையள் செய்யிறது பிழையெண்டிட்டு அவையின்ர கையக் காலப் பிடிச்சு அப்பிடிச் செய்யுங்கோ இப்பிடிச்செய்யுங்கோ எண்டு சொல்லிக் குடுத்தாராம். அவையளுக்கு என்ன செய்யிறதெண்டே தெரியா மல் போச்சுதாம். பதினொராம் ஆண்டு படிக்கிற சீலா தான் எனக்குச் சொன்னவள். பாத்தியே வாத்தியிண்ட வண்ட வாளத்தை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த வாத்தி அப்பிடித் தானடி. பெட்டையளக் கண்டால் வழியிறதும் தொட்டுத் தொட்டுக் கதைக்கிறதும். சுதனுக்குக் குடுத்தமாதிரி உவருக்கும் அதிபர் நல்லா சாத்த வேணுமடி...."

உவையள் பாலா மாஸ்டரப் பற்றி ஏதோ குறை கதைக்கிறது எனக்கு விளங்கிச்சுது. அப்ப மாஸ்டர் பொல்லா தவர் தான் எண்ட உண்மை எனக்கு உறுதியாய்ப் போச்சு.

"எடியே, இன்னும் படுக்காமல் என்னடி செய்யிறாய்?" அம்மா கத்தின கத்தில நான் சத்தியமா திடுக்கிட்டுப் போனன். இனியும் போய் படுக்காட்டி அடிதான் விழும் எண்டிட்டுப் போய் அம்மாவுக்குப் பக்கத்தில் படுத்திட்டன்.

காலமை எழும்பி முகம் கழுவிப் போட்டு வந்ததும் "அம்மா சீதாக்கா வீட்ட ஒருக்காப் போட்டு வாறன்", எண்டன். "இந்தா, தேத்தண்ணி போட்டுட்டன், குடிச்சிட்டுப் போ." தேத்தண்ணியை எடுத்து வாயில வைச்சா சரியாச் சுடுகுது. அதை ஆறுதலா இருந்து குடிக்க எனக்குப் பொறுமையில்லை. அதில எப்பனைக் குடிச்சிட்டு பொட்டுக்கால போய் சீதாக்கா வீட்ட எட்டிப்பார்க் கிறன். வீட்டுக்கு முன்னால பாலா மாஸ்ரரின்ட சைக்கிள் இல்லை. அதால நான் மளமள வெண்டு வீட்டுக்க போறன். சீதாக்காவும், சுஜியும் படுத்திருக்கினை. ஆனா ரெண்டு பேரும் முளிச்சபடி தான் இருந்திச்சினம்.

"சீதாக்கா ஏன் நேற்று சுஜிக்குட்டி அழுதவன்?"

என்ர கேள்விக்கு அவ பதில் சொல்லாமல் மெல்லிசா சிரிச்சுப் போட்டு இருக்கிறா. தலைமயிரெல்லாம் குழம்பிப்போய் கிடக்கு. சட்டையிண்ட ஒரு கை கிழிஞ்சு போய் தொங்கிக் கொண்டிருக்குது. குசினிச்சாமான் சிலது விறாந்தையிலை சிதறுப் பட்டுக் கிடக்குது.

நான் சுஜிக் குட்டியைத் தூக்கி மடியில வைச்சுக் கொண்டிருக்கிறன். அப்ப அம்மாவும் வாறா. அம்மாவக் கண்ட உடன சீதாக்காவுக்கு கண்கலங்குது.

"என்ன சீதா உன்ர மனிசன் நேற்று இரவும் உனக்கு அடிச்சு துலைச்சிட்டான் போல. பச்ச உடம்புக்காறி எண்ட எண்ணம் கூட அவனுக்கில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா அழுகின்றா. அம்மா பக்கத்திலிருந்து அவவின்ர முதுகைத் தடவிக் குடுக்கிறா.

"தண்ணி வென்னியேதும் குடிச்சிருக்க மாட்டாய். இந்தா தேத்தண்ணி கொண்டு வந்தனான் குடி."

"என்னால உங்களுக்கு எவ்வளவு கரைச்சல்."

"எங்களுக்கு என்ன கரைச்சல். உன்ன நினைச்சாத்தான் கவலையாய் கிடக்கு. அதுசரி. என்ன கழுத்தில ஒண்டையும் காணேல்ல."

"அந்த மனுசன் என்னத்தை விட்டு வைச்சிது? ஆறுமுகத் தார் வீட்டில தான் எந்த நேரமும் குடியும் கூத்துமாய் இருக்கி றார். ராத்திரி வந்ததும் வராததுமா என்னோட சண்டை பிடிச்சிட்டு கழுத்தில கிடந்த தாலியையும் அறுத்துக் கொண்டு போட்டார்."

மூக்கைச் சிந்திக் கொண்டு அழுகின்றா சீதாக்கா.

"அந்த அயோக்கியன் ஆறுமுகத்தோட சேந்திட்டால் உன்ர புருஷன் உருப்பட்ட மாதிரித்தான். பொம்பிளையள் இல்லாத வீட்டில அடிக்கடி பொம்பிளையள் தான் வந்து போய்க் கொண்டி ருக்கினையாம், நீயேன் இதில இருந்து வாய்பாத்துக் கொண்டி ருக்கிறாய். பள்ளிக்கூடம் போக நேரம் போகுதெல்லே போய் குளிச்சிட்டு வெளிக்கிடு."

அவை என்ன கதைக்கினம் எண்டத கேட்டுக் கொண்டி ருந்த என்னை திடீரென அம்மா அந்த இடத்தால கலைக்கிறா. எனக்கெண்டால் பள்ளிக்கூடம் போக விருப்பம் இல்லாமக் கிடக்கு.

நான் பள்ளிக்கூடம் போகப் பிந்திப் போச்சு. எனக்குப் பக்கத்தில இருக்கிற 'அழாப்பி' கவிதா "சீதாக்காவீட்ட நேற்றும் வாத்தியார் வந்து சண்டை போட்டவராம். என்ன நடந்தது?" எனக் கேட்கிறாள். அவளும் எங்கட வீட்டுக்குக் கிட்டத்தான் இருக்கிறவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாஸ்டர் அக்கான்ர தாலிக் கொடியப் பறிச்சுக்கொண்டு போட்டாராம். பாவம் சீதாக்காவும் சுஜிக்குட்டியும் அழுது கொண்டிருக்கினம். சீதாக்கா சுஜிக் குட்டியோடையும் என் னோடையும் விளையாட இன்னொரு தங்கச்சிக் குட்டியை பெத்துத் தாறன் எண்டு சொன்னவா. அதுக்கிடையில மாஸ்டர் வந்து அவவின்ர தாலியப் பறிச்சுக் கொண்டு போட்டார். தாலி இல்லாட்டி அவவுக்கு இனி தங்கச்சிப் பாப்பா பிறக்காதெல்லோ என்ன? ச்சு."

நான் சொல்லிக் கொண்டிருக்கக்கேயே ரீச்சரும் வகுப்புக் குள்ள வாறா. பிறகு கவிதாவோட கதைக்க நேரமும் கிடைக் கேல.

நான் பள்ளிக்கூடத்தால வரேக்க ஆறுமுகத்தாரின்ட படலேக்க அவரும் பாலா மாஸ்டரும் நிண்டு கதைச்சுக் கொண்டிருக்கினம். பாலா மாஸ்டர் இண்டைக்கு பள்ளிக்கூடம் வரேலை. எனக்கு ஆறுமுகத்தாரக் கண்டாலே பிடிக்காது. நான் முந்தி அவரை ஆறுமுகம் மாமா எண்டு தான் சொல்லுறனான். அவருக்கு பானை மாதிரி வயிறு. நடுவில மொட்டைவிழுந்த தலை. ஏறு நெத்தி, மூண்டு விபூதிக் குறி பூசியிருப்பார். வேட்டிதான் நெடுகக் கட்டுவார். அதுவும் வண்டிக்கிக் கீழ் கழண்டு விழுமாப் போலை கட்டுவர். ஆரும் அப்பிடிக்கட்டுறது எனக்குப் பிடிக்காது. தாயத்து மாதிரி ஒரு பென்ரன் போட்ட நீட்டு தங்கச்சங்கிலி ஒண்டு போட்டிருப்பார். அது அவற்றை பொக்குள் வரைக்கும் இருக்கும். அவற்றை பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டில. மனிசியும் செத்துப்போனா. தனிய இருக்க பொழுது போகேல எண்டிட்டு வீட்டில ரியூசன் சொல்லிக் குடுத்தவர். நான், அழாப்பி கவிதா, நீலா, கமலி, விஜயன், ராகுலன் எல்லாரும் அவரிட்ட ரியூசனுக்கு போனனாங்கள்.

அவர் பெரிசா ஒண்டும் படிப்பிக்க மாட்டார். எந்த நேரமும் பகிடிக்கதை விட்டுச் சிரிப்பார். அவருக்கு பொம்பிளப் பிள்ளையள் எண்டால் நல்ல விருப்பம். அதால அவையள மட்டும் கட்டிப்பிடிச்சு மூஞ்சையில கொஞ்சுவார். அவற்றை மீசை மூஞ்சிய குத்தும், வாயில ஒரே நாத்தம். 'உவாக்', அந்த மணம் வயித்தப் பிரட்டுற மாதிரி இருக்கும். அவர் கிட்ட வந்தாலே நான் விலத்திக் கொள்ளுவன். அதால அவருக்கு என்னைப் பிடிக்காது. தான் செல்லம் கொஞ்சிற பிள்ளையளுக்குத்தான் அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுக் கன்டோஸ் குடுப்பார். எனக்கும் நீலாவுக்கும் ஒருநாளும் கிடைக்கேல. கமலிக்குத் தான் அவர் நிறையக் குடுக்கிறவர். அவளிலதான் அவருக்கு நல்ல விருப்பம் போல.

ஆனா பாவம் கமலி, ஒருநாள் பள்ளிக்கூடம் வரேல்ல. வீட்ட வந்தாப் பிறகுதான் அவள் ஆசுப்பத்திரியில இருக்கிறது தெரிஞ்சிது. ஆறுமுகத்தார் கமலிக்கு அடிச்சுப் போட்டாராம் எண்டு நீலா சொன்னாள். அவரை பொலிஸ் வந்து பிடிச்சுக் கொண்டு போய் ஒரு கிழமை கழிச்சுத்தான் விட்டவங்கள். வாத்தியார் அடிச்சால் ஏன் பொலிஸ் வந்து பிடிக்குது? எங்கட பள்ளிக் கூடத்தில எத்தின வாத்திமார் எத்தின பிள்ளையளுக்கு அடிச்சிருப்பினை? அவயளை எல்லாம் பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போனதே? இல்லையே. எனக் கெண்டால் ஒண்டுமா விளங்கேல்லை. அதுக்குப் பிறகு ஒரு பிள்ளையளையும் அவரிட்ட படிக்கப் போக தாய் தகப்பன் விடுறதில்லை. ஊரில ஒருத்தருமே முந்தினமாதிரி அவரோட பழகுறதுமில்லை. அவரக் கண்டால் எங்கட அம்மாவில இருந்து ஒரு பொம்பிளையளுக்கும் பிடிக்காது.

ஒருநாள் நான் கமலியிட்ட "ஆறுமுகம் மாமா உனக்கு ஏன் அடிச்சவர்" எண்டு கேட்டனான்.

"அவர் எனக்கு அடிக்கேல" எண்டு சொன்னாள்.

"அப்ப ஏன் ஆசுப்பத்திரியில இருந்தனி?"

"எனக்குத் தெரியாது. ஆறுமுகம் மாமா உனக்கு என்ன செய்தவர் எண்டு அம்மா கேட்டா. நான் எல்லாத்தையும் சொன்னன். அம்மா அழத் தொடங்கீட்டா. பிறகு காச்சல் எண்டு ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டே விட்டா." என்றாள்.

எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை. என்னை எல்லாரும் சேர்ந்து குழப்பிற மாதிரிக் கிடந்தது. அதுக்குப் பிறகு நான் அவரை ஆறுமுகம் மாமா எண்டு சொல்லுறதை விட்டிட்டு ஆறுமுகத்தார் எண்டு எல்லாரும் சொல்லுமாப் போல சொல்லுறனான். இப்ப பாலா மாஸ்டர் ஒராள் தான் அவரோட திரியிறவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டைக்கு ஞாயிற்றுக் கிழமை, நான் சுஜிக்குட்டியோட விளையாடிப்போட்டு வீட்டைபோனன். பொழுது படுறநேரம். முகம் கழுவி சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கிறன். பாலா மாஸ்டரின்ட குரல் சத்தமா கேக்குது. எண்டைக்கும் இல்லாத அதிசயமா சீதாக்காவின்ர குரலும் சத்தமா கேக்குது. ஒருக்கா அங்க போய் பாப்பம் எண்டு வெளியில வாறன். அம்மா என்னப் பார்த்த பார்வையிலேயே பேசாமல் நிக்கிறன். ஆனால் கொஞ்ச நேரத்தில அங்க கனபேரின்ர குரல் கேக்குது. அம்மா சீதாக்கா வீட்ட போகவெளிக்கிட்டா. நானும் பின்னால போக, "போடி அங்க வரக்கூடாது" எண்டு சொல்லிப்போட்டுப் போனா. எனக் கெண்டால் இருப்புக் கொள்ளேல்ல. கொஞ்சத்தால அங்க போறன். அங்க போய் பாத்தா?

பக்கத்து வீட்டு பரிமளா அன்ரி, முன்வீட்டு முத்துமாமா, ஆறுமுகத்தார், சுப்புமாமா எண்டு ஊர்ச்சனம் முழுக்க சீதாக் காவையும் மாஸ்டரையும் சுத்தி நிக்கினை. நான் என்னை அம்மா காணாத மாதிரி சனத்துக்குள்ள ஒளிஞ்சு நிண்டு கொண்டு பாக்கிறன்.

சீதாக்கா சுஜிக் குட்டியை தூக்கி வைச்சபடி அழுது கொண்டு நிக்கிறா. தலைமயிர் எல்லாம் குலைஞ்சு போய்க் கிடக்கு. பாலா மாஸ்டர் சறத்தையும் மடிச்சுக் கட்டிக் கொண்டு கோபத்தோடை நிக்கிறார். அவருக்குப் பக்கத்தில ஆறுமுகத் தார்.

மாஸ்டர் ஆவேசமாக் கத்திறார்.

"போடி, எங்க வேணும் எண்டாலும் போய்த்துலை. பாருங்கோ, எல்லாரும் பாருங்கோ, ஒரு பொம்பிள ஆடிற ஆட்டத்தைப் பாருங்கோ. கட்டின புருஷன் என்னையே வேண்டாம் எண்டிட்டுப் போறாள். பாருங்கோ, நான் என்ன குறைவைச்சிட்டன் எண்டிட்டுப் போறாள். 'ராணி' மாதிரி வைச்சிருந்தன். என்னை வேண்டாம் எண்டிட்டு போறாள். எடியே எவனத் தேடி போறாய்? சொல்லிட்டுப் போடி."

சீதாக்கா நெருப்புக்கு மேலே நிக்குமாப் போல துடிக்கிறா. சுத்தி நிண்டவை எல்லோரும் வாயில கையவைச்சு பாத்துக் கொண்டு நிக்கினை. ஒருத்தரும் ஒண்டும் கதைக்கேல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைப் பாக்கிறன். அவ கண்கள் கலங்கிப் போய் இருக்கிறா.

ஆறுமுகத்தார் கொடுப்புக்க சிரிச்சுக் கொண்டு நிக்கிறார்.

பிறகும் கத்திறார் மாஸ்டர்.

"என்னடி முழிக்கிறாய்? நீ போடி. நான் ஆம்பிள்ளையடி, ஆம்பிள்ளை. நாளைக்கே ஒரு பொம்பிளையைக் கட்டி ராஜா மாதிரி வாழுவனடி. பெட்டைச்சி. உனக்கே இவ்வளவு கொழுப்பிருந்தால், ஆம்பிளை எனக்கு எவ்வளவு இருக்குமெடி? போடி. ஆனா நான் பெத்த மகன் அவன். அவனை விட்டுட்டுப் போடி. என்னையே வேண்டாம் எண்டிட்டு போற உனக்கு எதுக்கெடி என்ர பிள்ளை?"

கத்தியபடி சுஜிக் குட்டிய சீதாக்காட்ட இருந்து பறிக்கப் போகிறார்.

சீதாக்கா பயந்து போய் சுஜிக் குட்டிய இறுக்கி கட்டிப் பிடிச்சபடி கல்லுப் போல நிக்கிறா.

கூடத்தில நிண்ட சிவலிங்கம் தாத்தா;

"தம்பி. ஏன் அந்த அப்பாவிப் பிள்ளையைப் போட்டு இந்த வதை வதைக்கிறாய்? வீட்ட விட்டு வெளிக்கிடாத பிள்ளையைப் பாத்து இப்படியெல்லாம் பிழையாய் கதைக்கிறாய்? கடவுள் பொறுக்க மாட்டார் கண்டியோ. உனக்கு அவளோட வாழ விருப்பம் இல்லையெண்டால் அவளை விட்டுட்டு நீ ஆரையேனும் கட்டு. ஒண்டும் தெரியாத பிள்ளையை இப்பிடி வதைக் காதை." எண்டு சொல்லுறார்.

உடனே ஆறுமுகத்தார் குறுக்கிடுகிறார்.

"ஏய் கிழட்டு வயசில அறளை பேந்த கதையெல்லாம் கதைக்காத. கட்டின புருஷனே அவளத் தப்பா சொல்லுறா னெண்டால் அவள் தான் நடத்தை கெட்டவள். புருஷன்ர பேச்சையும் கேளாமல் இவள் போறதுக்கு ஒற்றைக் காலில நிக்கிறாள். நீ விழல் கதை கதைக்கிறாய். இது அவையின்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பவிஷயம். ஆரும் தலையிடக்கூடாது. உங்கட உங்கட வேலையை நீங்க பாத்துக்கொண்டிருங்கோ." எண்டு சொல்லிப் போட்டு மாஸ்டரப் பார்த்துச் சிரிக்கிறார். மாஸ்டரும் பதிலுக்குச் சிரிக்கிறார்.

சீதாக்கான்ர பக்கம் திரும்பி, "என்னடி பிள்ளையக் குடுக்கப் போறியோ, இல்லையோ" எண்டு கேக்கிறார்.

சீதாக்கா சுஜியை இறுக்கிப் பிடிக்கிறா.

"உயிர் போனாலும் தரமாட்டன்" எண்டா.

சுஜி பயத்தால் வீரிட்டு அழுது கொண்டிருக்கிறான்.

"ஓ அப்பிடியோ? அப்ப நான் சொல்லுறத செய்திட்டுப் போ."

சீதாக்காவையும் கூடி நிண்ட சனத்தையும் சுற்றிப் பார்க் கிறார் மாஸ்டர்.

எல்லோரும் அவர் என்ன சொல்லப் போறார் எண்டு மாஸ்டரிண்ட வாயையே பார்த்தபடி நிக்கினம்.

"இவன் என்ர பிள்ளையெண்டால் இவனை என்னட்டத் தந்திட்டுப்போ. இவன் எனக்குப் பிறக்கேல்லையெண்டால் இந்த கற்பூரத்தில சத்தியம் பண்ணிப்போட்டு, அவனை கொண்டு போ." சொல்லிப்போட்டு நிமிர்ந்து நிக்கிறார்.

பாவம் சீதாக்கா.

"கடவுளே இது என்ன கொடுமை" எண்டு தலை தலையா அடிச்சு நிலத்தில இருந்து அழுகிறா.

ஆறுமுகத்தார் ஒரு தட்டில கற்பூரத்தைக் கொழுத்தி வைக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி இவருக்கு உடன கற்பூரம் கிடைச்சதெண்டு எனக்கு ஆச்சரியமாய் இருக்கு.

சீதாக்காவுக்கு முன்னாலை தட்டிலை கற்பூரம் எரிஞ்சு கொண்டிருக்கு.

சீதாக்கா எரிஞ்சு கொண்டிருக்கிற கற்பூரத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறா!

கற்பூரம் எரிவது அவவின்ரை கண்ணுக்குள்ளையும் தெரியுது.

"கற்பூரம் நூரப்போகுது, கெதியிலை சத்தியம் பண்ணு. இல்லாட்டி பிள்ளையைக் குடு." ஆறுமுகத்தார் அவசரப்படுத்துகிறார்.

"இதைச் சொல்ல நீ ஆரடா."

ஆறுமுகத்தாரைப் பார்த்து ஆக்ரோஷமாய்க் கத்துகிறா சீதாக்கா.

ஆறுமுகத்தார் திகைத்துப்போய் நிக்கிறார்.

பாலா மாஸ்டரை வெறித்துப் பார்க்கிறா சீதாக்கா.

சீதாக்காவின் கண்களில் தீக்கனல். எரிஞ்சு கொண்டிருக்கின்ற கற்பூரத்தை சீதாக்காவின்ரை கை அணைக்கின்றது.

"சத்தியமாய் என்ரை பிள்ளைக்கு நீ அப்பனில்லை. உன்னாலை நல்ல அப்பனாய் இருக்கவும் முடியாது."

பாலா மாஸ்டரைச் சுட்டிக்காட்டி சீதாக்கா முழங்குகின்றா.

பாலா மாஸ்டர் மலைத்துப்போய் நிற்கின்றார்.

சீதாக்கா கண்ணகியாய் நிற்கின்றா. சுஜிக் குட்டியை தூக்கிக்கொண்டு திரும்பி நடக்கத் தொடங்கினா. மாஸ்டரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகத்தாரும் வாயடைச்சுப் போய் ஆளையாள் பார்த்துக் கொண்டு நிண்டிச்சினம். ஒருத்தரும் அவவை போய் மறிக்கேல. நான் சுஜிக்குட்டியைப் பாத்தன். இவ்வளவு நேரமா அழுது கொண்டிருந்தவன் இப்ப சீதாக்காவின்ர தோளுக்கு மேலால எட்டிப் பார்த்து சிரிச்சுக் கொண்டு போனான். நான் “சுஜிக்குட்டி,” எண்டு கூப்பிட்டபடி பின்னால ஓடிப்போக அம்மா என்ர கையப்பிடிச்சிழுத்து நிப்பாட்டிப் போட்டா. நான் சீதாக்கா மறையும் மட்டும் பாத்துக் கொண்டிருந்தன்.

அவ எங்க போவா எண்டு எனக்கு ஒரே யோசினை. அவ என்ர கண்ணில இருந்து மறஞ்சதும் திரும்பிப் பாத்தன். ஒருத்தரையும் காணேலே. கொஞ்சம் கொஞ்சமாய் இருளத் தொடங்கி இருந்தது. அண்ணாந்து வானத்தைப் பார்த்தேன். கருமுகிலுக்குள்ள மறைஞ்சிருந்த நிலவு வெளியே வந்து பிரகாசமாய் தனியே சென்று கொண்டிருந்தது. அதனை வரவேற்க நட்சத்திரங்கள் கண்சிமிட்டி காத்திருந்தன.

**- ஞானம் : நவம்பர் 2007**

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயம்

குழந்தைகளின் ஆரவாரத்தால் கலகலத்துக் கொண்டிருந்தது வீடு.

அங்கும் இங்கும் ஓடிவிளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் நித்தியா.

'இன்று எனக்கும் ஒரு குழந்தையிருந்திருந்தால் இவர்களுடன் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்குமல்லவா?' என்ற நினைவு நெஞ்சை இறுக்க கண்களில் நீர் முட்டி நின்றது.

மிகவும் பிரயத்தனப்பட்டு கண்களில் நிறைந்த நீரை வெளியில் சிந்தவிடாது கண்களுக்குள்ளேயே அடக்கிக் கொண்டாள்.

இது அவளுக்குப் பழகிப் போய்விட்ட ஒரு செயல்.

தனக்குக் குழந்தையில்லையே என்ற கவலையை முகத்திலும் செயலிலும் காட்டிக் கொள்ளாமல் இதயத்தின் ஓர் அறையில் போட்டு மூடிவிட்டு எந்த நேரமும் கலகலப்பாய் இருப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருப்பவளுக்கு கண்ணீரை அடக்குவதும் கைவந்த கலை. இல்லையில்லை கண் தந்த கலையாகி விட்டதில் வியப்பேதும் இல்லையே.

'இவளுக்குப் பிள்ளை இல்லை யெண்ட கவலை கொஞ்சமும் இருக்கிறமாதிரி தெரியவில்லை?' என்று சித்தி ராஜம் சொல்லும் போது மெல்லிதாகச் சிரித்துவிட்டுச் செல்வாள் நித்தியா. குழந்தைக்காக ஏங்கும் இவளின் ஏக்கத்தை கூடவே இருக்கும் கணவன் பார்த்திபன் மட்டுமே அறிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று நடந்த மாமாவின் மகனின் திருமண வீட்டிற்கு கணவன் பார்த்திபனுடன் வந்த நித்தியாவை 'நின்று நாளைக்குப் போகலாமே' என கட்டாயப்படுத்தி மறித்து விட்ட மாமியின் சொல்லை மீற முடியாமல் போய்விட்டது அவளால்.

இவர்களோடு இன்னும் சில உறவினர்களும் நின்றார்கள். அவர்களின் குழந்தைகள் அந்த மாலை நேரத்தில் முற்றத்தில் போடப்பட்டிருந்த மணப் பந்தலினுள் விளையாடிக் கொண்டிருந் தார்கள். அவர்களின் விளையாட்டை அங்கு அடுக்கி வைக்கப் பட்டிருந்த கதிரை ஒன்றில் இருந்து பார்த்து ரசித்துக் கொண்டி ருந்தாள் நித்தியா.

"நித்தி, இந்தா இவளக் கொஞ்சம் பிடி. அவர் தேத் தண்ணி கேட்டவர் போட்டுக் குடும்பம் எண்டால் விடுறாளில்லை" என்றவாறு குழந்தையை நீட்டினாள் வேணி.

குழந்தையை வாங்கி மடியிலிருத்தினாள் நித்தியா. தலையை நிமிர்த்தி இவளைப் பார்த்த குழந்தை கண்ணைச் சிமிட்டிச் சிரித்தது.

"நித்தி உனக்கும் தேத்தண்ணி போடவே...."

"இல்ல வேண்டாமக்கா...."

"பார்த்திபன் குடிப்பாரோ...."

"அவர் இஞ்ச இல்ல கடைக்குப் போட்டார்."

"அப்பசரி. நீ கொஞ்சநேரம் இவளப் பார்த்துக் கொள் நான் 'டக்' கெண்டு வந்திடுறன்."

சொல்லி விட்டு வேணி போனதும் குழந்தையிடம் பார்வை யைத் திருப்பினாள் நித்தியா. குழந்தை மீண்டும் அவளைப் பார்த்துச் சிரித்தது. 'என்னடா. எங்கட சாருக்குட்டி பாப்பா குடிச்சிட்டுதா.' எனக் குழந்தையிடம் கதை கேட்க அது அவளது வாயில் தன் கையை வைத்துச் சிரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தென்ற குழந்தையின் பிஞ்சுக்கையைப் பிடித்துத் தன் கன்னத்தில் வைத்து அக் குழந்தையின் அழகை ரசித்தபடி சிந்தனையில் ஆழ்ந்தாள் நித்தியா.

நித்தியாவுக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம். ஆனால் இப்பொழுதெல்லாம் குழந்தைகளை தூக்கி வைத்திருப் பதை அவள் தவிர்த்து விடுகிறாள். அதற்குக் காரணமும் இருக்கிறது.

குழந்தையை வைத்திருக்கும் போது தெரியாதவர்கள் என்றால் "உங்கள் குழந்தையா" எனக் கேட்பார்கள். "இல்லை" என்று பதில் சொன்னால் "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்" என அடுத்த கேள்வியைக் கேட்பார்கள்.

தெரிந்தவர்கள் என்றால் "உன்ர பிள்ளையை வைச்சுக் கொஞ்ச வேண்டிய நேரத்தில ஆற்றையன் பிள்ளையளை வைச்சுக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாய், ஆசைக்கு ஒரு பிள் ளையை எண்டாலும் பெத்துப்போடு." என்பார்கள்.

இவ்வாறான தேவையற்ற மனதுக்குப் பிடிக்காத பேச்சுக் களைத் தவிர்ப்பதற்காகவே அவள் குழந்தைகளை தூக்கு வதைக் குறைத்துக் கொண்டாள்.

இந்த மாதிரி தேவையற்ற மனக் கசப்புக்களை தவிர்ப்பதற் காகவே அவள் எந்த நல்லது கெட்டதுக்கும் போவதைத் தவிர்த்தாள். ஆனால், இத் திருமண நிகழ்வுக்கு வர வேண்டிய கட்டாயம், வந்துவிட்டாள். எது நடக்கக்கூடாது என அவள் நினைத்தாளோ அதுவும் நடந்துவிட்டது.

நேற்றும் இக் குழந்தையைத் தான் தூங்க வைத்துக் கொண்டிருந்தாள் நித்தியா. அப்போது அருகில் இருந்த ஒரு பெண்மணி;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது உங்கட பிள்ளையா? என்ன பெயர்" என்றாள்.

"சாருஷா.... அக்காவின் மகள்"

"உங்களுக்கு எத்தினை பிள்ளையள்...."

"பிள்ளைகள் இல்லை."

"கலியாணம் முடிச்சுக் கனகாலமோ?"

"ஐஞ்சு வருஷமாகுது."

"ஏன் வைத்தியம் ஏதும் செய்யேல்லையே."

"செய்து கொண்டு தான் இருக்கிறம்."

அதற்கு மேல் அங்கிருக்க மனமில்லாமல் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள்ளே சென்று விட்டாள் நித்தியா.

சிலர் பார்க்கும் பார்வையே 'இவளுக்கு இன்னும் பிள்ளையில்லையா' என்பதைப் போல் ஒரு மாதிரிப் பார்ப்பார்கள். அந்தப் பார்வைகள், பேச்சுக்களில் இருந்து தப்புவதே பெரும் பாடாய் இருந்தது அவளுக்கு. எப்போது வீட்டுக்குப் போவோம் எனக் காத்திருந்தவள் பார்த்திபன் வருவதைக் கண்டவுடன்.

"ஏனப்பா இவ்வளவு நேரமும் நிண்டனிங்கள்? ஆறு மணியாகப் போகுது. வாருங்கோவன் வீட்டுக்குப் போவம்."

ஆவலோடு கேட்டாள். அவன் பதில் சொல்வதற்கு முன்;

"என்ன அவசரம் ஆறுதலாப் போகலாம் தானே? பிள்ளையா? குட்டியா?" என்றாள் அயல் வீட்டுக்காரி ஒருத்தி. தீயைத் தொட்டது போல சட்டெனத் திரும்பி நித்தியாவைப் பார்த்தான் பார்த்திபன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைப் பிசைந்தபடி, நிமிர்ந்தால் கண்ணை நிறைத் திருக்கும் நீர் வெளிவந்துவிடுமோ என்ற பயத்தில் தலையைக் குனிந்தபடி நின்றாள் நித்தியா. மெல்லிதாக நடுங்கிக் கொண்டி ருக்கும் அவளது கைகள் கோபத்தைக் கட்டுப்படுத்த பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தன. அவளைப் பார்க்க பார்த்திபனுக்கு பாவமாக இருந்தது. 'சீ. எனக்கே இப்படி இருக்கிறது என்றால் பாவம் அவளுக்கு. இந்தச் சனங்களுக்கு வேற வேலை இல்லை? ச்சா.' மனதுள் புழுங்கினான் பார்த்திபன்.

"ஏன் பிள்ளை நீ கலியாணம் கட்டி ஐஞ்சாறு வரியம் இருக்குமே. கூனோ. குருடோ. பிள்ளை ஒண்டப் பெத்தால் தான் நாலு சனம் மதிக்கும். இல்லாட்டி மலடி எண்ட."

"ஐயோ கொஞ்சம் நிப்பாட்டுறீங்களா?"

அடக்கி வைத்த ஆதங்கம், ஆத்திரம் எல்லாவற்றையும் சேர்த்துக் கொட்டிய நித்தியாவின் வார்த்தைகளால் நிசப்தமானது வீடு. "பிள்ளையில்லை எண்டால் இந்த உலகத்தில் சந்தோஷமா வாழவே முடியாதா. பிள்ளையளப் பெத்தவை எல்லாரும் ஏதோ சந்தோஷமா இருக்கின்ம் எண்ட மாதிரி கதைக்கிறீங்கள். பிள்ளையளப் பெத்தாலும் ஏதோ ஒரு வகையில் அதுகளால கஸ்ரப்பட்டுத்தான் ஆக வேண்டும். ஏன்? நீங்கள் சந்தோஷமா இருக்கிறியளோ. 'நான் பத்துப் பிள்ளையளப் பெத்தன் ஒண்டு கூட என்னைத் திரும்பிப் பாக்கிறதில்லை' எண்டு ஊர் முழுக்கப் புலம்பிக் கொண்டு இருக்கிறீங்கள். இண்டைக்கு உங்கட பேத்திக்கு நடந்தது என்ன? ஒரே ஒரு பொம்பிளப் பிள்ளை எண்டு கண்ணுக்குள்ள வச்சு வளர்த்தா, உங்கட மகள் அவளுக்கு என்ன நடந்தது? காதலிச்சவன் ஏமாத்திப் போட்டான் எண்ட கவலையில விசராக்கி இன்னும் சுகமாக்க முடியாமல் ஒவ்வொரு நாளும் செத்துச் செத்து வாழ்ந்து கொண்டிருக்கிற உங்கட மகளின்ர நிலை உங்களுக்குத் தெரியாதா? சரஸ்வதி அக்காவுக்கு பிறந்த ஊனமான பிள்ளையால அவவுக்கு எவ்வளவு கவலை? தனக்கு பிறகு ஆர் அந்தப் பிள்ளையைப் பாப்பினம் எண்டு எல்லாரிட்டையும் சொல்லி கவலைப் படுறது தெரியாதே? சுனாமி வந்த நேரம் பெத்த பிள்ளையள் செத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக தாய்மார் விட்ட கண்ணீர் உங்களுக்குத் தெரியாதே. எல்லாம் தெரிஞ்சு கொண்டும் நீங்கள் இப்படிக் கதைக்கலாமே.' மூச்சு வாங்கப் பேசினாள் நித்தியா.

"நித்தியா சரி சரி விடும்.. வாரும் போவம்."

பார்த்திபன் சூழ்நிலை புரிந்து அவளைக் கூப்பிட்டான்.

"இந்தக் கலியாண வீட்டில எத்தினை பேர் என்னட்ட இந்தக் கேள்வியைக் கேட்டவை எண்டு தெரியுமே உங்களுக்கு? இதுக்குத் தான் நான் ஒரு இடமும் வெளிக்கிடுறதில்லை வாங்கோ போவம்."

அத்தை மறித்ததையும் கேளாமல் பார்த்திபனோடு அவள் புறப்பட்டு விட்டாள்.

வீட்டுக்குப் போனதும் கட்டிலில் விழுந்து அடக்கி வைத்த கண்ணீரைக் கொட்டித் தீர்த்தாள் நித்தியா.

பார்த்திபனுக்கு அவளைப் பார்க்கப் பாவமாகவும் வேதனை யாகவும் இருந்தது.

'இப்ப ஆறுதல் படுத்தப் போனால் இருக்கிற கோபத்தை எல்லாம் என்மேல் தான் காட்டுவாள்' என நினைத்தபடி மௌனமாக கதிரையில் சாய்ந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். குலுங்கிக் குலுங்கி அழுதவளின் உடல் மெல்ல மெல்ல வழமைக்கு வந்தது. அழுத களைப்புத் தீர அவள் அப்படியே படுத்திருந்தாள்.

"மியாவ். மியாவ். மியாவ். மியாவ்."

பூனை கத்தும் சத்தம் கேட்டு சட்டென எழுந்தாள் நித்தியா.

"என்னப்பா. பூனை குட்டி போட்டுட்டுது போல" அவளின் முகத்தில் ஓர் மலர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாண வீட்டுக்குப் புறப்படும் போதே பூனை நிறைமாத வயிற்றோடு படுப்பதற்கும் நடப்பதற்கும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. பூனையைப் பார்த்த நித்தியா நாம் இல்லாத நேரம் குட்டி போட கஷ்டப்படுமே என நினைத்து. ஒரு பெட்டியில் பழைய துணிகள் சிலவற்றைப் போட்டு பூனையைத் தூக்கி அதற்குள் விட்டு பக்கத்தில் சாப்பாடும் வைத்து விட்டுத்தான் சென்றாள். ஆனால் தன் கவலையில் பூனை பற்றிய நினைவை மறந்திருந்தவள் பூனையின் சத்தம் கேட்டதும் ஓடிச் சென்று அந்தப் பெட்டியைப் பார்த்தாள்.

நான்கு அழகான குட்டிகளுடன் பூனை படுத்திருந்தது. அப்படியே பெட்டிக்கு அருகிலேயே அமர்ந்தாள். பின்னால் வந்த பார்த்திபனும் அவளுக்கு அருகில் வந்து அமர்ந்து கொண்டு பெட்டிக்குள் இருந்த பூனையையும் குட்டிகளையும் பார்த்தான்.

நான்கு குட்டிகளையும் நித்தியா மெல்லத் தடவிப் பார்த்தாள். பஞ்சு போன்ற அதன் உடல் மென்மையிலும் மென்மையாக இருந்தது. ரோஸ் நிறத்தில் அதன் மூக்கும் பிஞ்சுக் கால்களும் மெத்தென்று இருந்தன. கண்களை மூடியபடி தாயின் உடலுக்குள் சுருண்டு கிடந்த அவற்றை அப்படியே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றிற்று.

பூனையின் தலையைத் தடவியபடி ஏதோ யோசனையில் இருந்த நித்தியா;

''இந்தப் பூனை செய்த புண்ணியம் கூட நான் செய்யேல்லப் போல'' என்றாள், பார்த்திபன் நிமிர்ந்து அவளைப் பார்த்தான் ''நித்தி ஏன் இப்படிக் கதைக்கிறீர். பாரும் எங்களுக்கும் பிள்ளை பிறக்கும் கவலைப்படாதையும்''. ''இல்லையப்பா. இண்டைக்கு நான் கோபத்திலை என்னென்னெல்லாமோ பேசிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டன். அவையள் என்ன நினைச்சினமோ தெரியாது. உண்மையில் எனக்கு அந்த நேரம் என்ன பேசுறன் ஏது பேசுறன் எண்டே தெரியேல்ல. ஏதேதோ பேசிப்போட்டன். நான் அப்பிடியெல்லாம் பேசியிருக்கக் கூடாது, ச்சா."

''சரி சரி விடும். பேசினதும் பேசியாச்சு. இனி அதைப் பற்றிக் கதைச்சு என்ன நடக்கப் போகுது."

''நான் உங்களத் தான் கலியாணம் கட்டுவன், எண்டு ஒற்றைக் காலிலை நிக்கேக்க அம்மா சொன்னது இப்பவும் எனக்கு நினைவிருக்கு."

''அப்பிடி என்ன சொன்னவா.?" ஆவலோடு கேட்டான் பார்த்திபன்.

''உன்ர விருப்பத்துக்குத் தான் கலியாணம் கட்டுவன் எண்டு பிடிவாதம் பிடிச்சு எங்கள கஸ்டப்படுத்திறாய். நாளைக்கு உன்ர பிள்ளை இப்படி நடக்கேக்க தான் எங்கட வேதனை உனக்கு விளங்கும், எண்டவா. அந்த வார்த்தை பலிக்க எனக்கு பிள்ளையே இல்லாமல் போச்சு."

"நித்தி இப்ப என்ன நடந்து போச்சு எண்டு இப்பிடிக் கதைக்கிறீர். டொக்டரிட்ட 'கொன்சல்ற்' பண்ணிக் கொண்டு தானே இருக்கிறம்.... அதெல்லாம் சரிவரும். இந்தக் காலத்தில பிள்ளையில்லையே எண்டு கவலைப்படத் தேவையே இல்லை. அந்தளவுக்கு வைத்தியத் துறை வளர்ந்துவிட்டது. ஆரும் என்னவும் சொல்லியினம் எண்டு அலட்டிக் கொள்ளாதையும்.... பாரும் இந்தப் பூனையை மாதிரி நீரும் நாலு பிள்ளைக்கு அம்மாவாகப் போறீர்" என்றான் புன்னகையுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ. நாலு பிள்ளையா. தாங்காதப்பா. ஒண்டு ரெண்டே போதும்" எனச் சொல்லிச் சிரித்த நித்தியாவுடன் கூடவே அவனும் சேர்ந்து சிரித்தான்.

''நித்தி இந்த நாலு பூனைக் குட்டிகளையும் பார்க்க எனக்கு பாரதியார் பாட்டுத் தான் நினைவில வருகிறது.''

"என்ன பாட்டு?"

"வெள்ளை நிறத்திலொரு பூனை.... எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்.
பிள்ளைகள் பெற்றதப் பூனை - அவை
பேருக் கொரு நிறமாகும்.

சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்
சாந்து நிறமொரு குட்டி -
பாம்பின் நிறமொரு குட்டி – வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி...."

எனப் பாடிய பார்த்திபனை இடைமறித்த நித்தியா "எனக்கும் தெரியும் இந்தப்பாட்டு. மிச்சத்த நான் பாடுறன் கேளுங்கோ.'' எனச் சொல்லி விட்டு பூனைக்குட்டி ஒன்றைத் தூக்கி அணைத்தபடி.

''வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமையில்லை.

எண்ணங்கள் செய்கைகளெல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்..."

என்று பாடிய நித்தியாவை இடைமறித்த பார்த்திபன் "சரி சரி. நீர் வாத்தியாரிண்ட மனிசி எண்டத நிருபிச்சுப் போட்டீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் ஒரே மாதிரி இருக்க மாட்டினம். ஆரும் என்னவும் சொல்லினம் எண்டு கவலைப்பட்டுக் கொண்டிருக்காதையும்.”

“இல்லையப்பா எனக்கு பிள்ளையில்லை எண்டதை விட எல்லாரும் இப்படிக் கதைக்கிறது தான் எரிச்சலாக் கிடக்கு.”

“சரி விடும். ஏன் தேவையில்லாத கதை கதைச்சுக் கொண்டிருக்கிறீர். நாளைக்கு கிளினிக் போக வேணும் மறக்காமல் எல்லா றிப்போட்டையும் எடுத்து வையும். அங்க தேத்தண்ணி கூட குடிக்க விடாமல் கூட்டிக் கொண்டு வந்திட்டீர். வயிறெல்லாம் புகையிற மாதிரிக் கிடக்கு. கொஞ்சம் தேத்தண்ணி போட்டுத்தாருமன்.”

“கொஞ்சம் பொறுங்கோ. மேல் கழுவிப் போட்டு வந்து போட்டுத்தாறன்.” என்றபடி துவாயையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் செல்ல நித்தியா புறப்பட்டபோது வாசலில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது.

வெளியே வந்த பார்த்திபனைத் தொடர்ந்து நித்தியாவும் வந்தாள்.

அங்கே மூர்த்தி நின்றிருந்தான்.

“அண்ணை.. எங்களுக்குத் தென்னங் குத்தி தேவைப் படுது. உங்கட அப்பாட்டக் கேட்டனாங்கள். உங்கட வீட்ட காய்க்காமல் சோடை பத்திப் போன ஒரு தென்னம்பிள்ளை நிக்கிதாம். அதை தறிக்கச் சொன்னவர். நாளைக்கு காலம்பிற வந்து தறிச்சுக் கொண்டு போகவே அண்ணை.”

‘‘வேண்டாம், வேண்டாம். அது காய்க்கும் நல்ல செழிப்பான தென்னை, அநியாயமா ஏன் அதைத் தறிப்பான்.”

“இல்லை அண்ண. அதோட வைச்ச தென்னையளே காய்க்க வெளிக்கிட்டு கனகாலமாச்சு. இனியும் அது காய்க்காதண்ணை.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலம் செண்டாலும் அது காய்க்கும். எனக்கு அதைத் தறிக்க விருப்பம் இல்ல. அப்பாட்ட நான் சொல்லுறன். நீங்கள் வேற எங்கேயேனும் விசாரிச்சுப் பாருங்கோ." என காட்டமாகச் சொல்லி விட்டு வீட்டுக்குள் வந்தவனை புன் சிரிப்புடன் உற்றுப் பார்த்தபடி நின்றாள் நித்தியா. அந்தப் பார்வை ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லிற்று.

கிளினிக் போய் வந்ததன் பிறகு நித்தியாவுக்கு மனதில் நம்பிக்கை பிறந்திருந்தது. அதன் எதிரொலி அவள் முகத்திலும் தெரிந்தது. "உங்கள் ரெண்டு பேருக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை. இந்த மருந்துகளை ஒழுங்கா எடுத்தீங்கள் எண்டால் ஒரு வருஷத்துக்குள்ள வயித்தில பிள்ளையோட என்ர கிளினிக்குக்கு வருவிங்கள் பாருங்கோ." என்று வைத்தியர் சொன்ன வார்த்தைகளே அவள் மனதை நிறைத்து விட்டது. அதனால் எப்படியும் தான் தாயாவேன் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

காலங்கள் ஓடின.

* * *

"ஆறு மணி ஆச்சுதப்பா. வேலைக்குப் போற எண்ணம் இல்லையே? எழும்புங்கோவன். நேரம் போகுதெல்லே?" நித்தியாவின் அதட்டலோடு கண்விழித்த பார்த்திபன் துவாயையும் சரத்தையும் எடுத்தபடி கிணற்றடிக்குப் போனான்.

வீட்டு வேலைகளில் மும்முரமானாள் நித்தியா. "நித்தீ நித்தீ இஞ்ச ஓடிவாரும்." கிணற்றடியில் இருந்து பார்த்திபன் கத்திய கத்தலில் என்னாச்சோ ஏதாச்சோ என கையிலிருந்த தும்புத் தடியையும் போட்டுவிட்டு கிணற்றடிக்கு ஓடினாள் நித்தியா. "என்னப்பா என்ன நடந்தது?"

"இஞ்ச வந்து பாருமன்" என அவள் கையைப் பிடித்து இழுத்து தன்னருகில் நிறுத்தி ஒரு கையால் அவள் தோளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்தபடி மறுகையால் அந்தத் தென்னை மரத்தின் உச்சியைக் காட்டினான் பார்த்திபன்.

இனிக் காய்க்காது எனச் சொல்லப்பட்ட தென்னையில் பாளை ஒன்று வெளித்தள்ளியிருந்தது. அந்தப் பாளைக்குள் இருந்து தென்னம் பூ மெதுவாக எட்டிப் பார்த்தது.

காய்க்காத மரம் இனிப் பூத்துக் காய்க்கப் போகிறது.

'அண்டைக்கு இந்த மரத்தை வெட்ட விட்டிருந்தால்.' அந்தப் பாளையையே பார்த்துக் கொண்டிருந்த நித்தியாவின் மனதில் என்னென்னமோ எண்ண ஓட்டங்கள்.

சாதனை ஒன்று நிகழ்ந்து விட்டதைப் போல இருவரும் சந்தோஷத்தில் திளைத்தனர். அந்தச் சந்தோஷம் அத் தென்னை மரத்தையும் தொற்றிக் கொண்டது போல அதுவும் தாய்மையின் பூரிப்பால் தன் ஓலைகளை சிலிர்த் தசைத்து அங்கும் இங்கும் அசைந்தாடிக் கொண்டிருந்தது. காற்றின் அசைவால் நாதம் எழுப்பிய தந்திக் கம்பிகளாய் அசைந்து கொண்டிருந்த கீற்றுக்க ளின் இடைவெளியில் கிழக்கில் உதயமான ஆதவன் கண் சிமிட்டிச் சிரித்தான். அந்தச் சிரிப்பின் ஒளியில் பாளையின் இடையே தெரிந்த பூக்கள் பொன்போல் தகதக்துக் கொண்டிருந் தன.

**- ஜீவநதி : 2007**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும்...

அவசர அவசரமாக வேலைக்குப் புறப்பட்ட சந்திர சேகரரின் நினைவில் பொறி தட்டிற்று.

'ச்சா, எப்படி மறந்தன்.'

'ரயிலைப் பிடிக்கிற அவசரத்தில மறந்திட்டன் போல..'

'என்ன அவசரமெண்டாலும் இதை மறந்திட்டுப் போகேலுமே. ஆவலோட என்னட்ட ஓடி வாறதுகளை வெறுங்கையோட போய் ஏமாத்தேலுமே.'

தன் ஞாபக மறதியைத் திட்டிக் கொண்டே வீட்டிற்குள் திரும்பிய போது, வாசலில் மனைவி அந்தச் சிறு'பாசல்' உடன் புன்னகையோடு காத்திருந்தாள்.

"என்னப்பா வயசு போக மறதியும் கூடுதுபோல." அவருக்கு 'வயசு போகுது எண்டதில' அவளுக்கொரு சந்தோஷம். அதைச் சொல்லிக் காட்டுகிறாள்.

அவளிடம் இருந்து அவசர அவசரமாக அந்தப் 'பாசலை' வாங்கியபடி விரைந்து நடந்தார்.

புகையிரத நிலையத்தை நெருங்கியதும் புளியமரத்தின் கீழ் 'அவையள்' இரண்டு பேரையும் தேடினார். 'அவையளைக் காணேல்லை.'

'எங்க போயிருப்பினம்' என்ற சிந்தனையோடு நடந்து வந்த அவரது கால்களை பின்னால் இருந்து கட்டிப்பிடித்து 'விளை யாட்டுக் காட்டிச்சினம் ரெண்டுபேரும்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால்களை ஆட்டியபடி அவரது கால்களை நக்கி அவர் மேலே பாய்ந்து பாசத்தைப் பொழிந்த இருவரின் தலைகளையும் மெல்லத் தடவிக் கொடுத்தார்.

மரத்தின் கீழே கொண்டு சென்ற 'பாசலை' அவிழ்த்து வைத்தார்.

புட்டுடன் சேர்த்துக் குழைத்த பழைய மீன் குழம்பு வாசனை மூக்கைத் துளைத்தது.

அவைகள் இரண்டும் நன்றியோடு அவரைப் பார்த்து விட்டுச் சாப்பிடத் தொடங்கின.

அவையிரண்டும் சந்தோஷத்துடன் வாலைப் பின்னுடலுடன் சேர்த்து ஆட்டி ஆட்டிச் சாப்பிடும் அழகை நின்று நிதானமாக ரசிக்க முடியாமல் கைக்கடிகாரத்தைப் பார்த்தார் சந்திரசேகரர். நேரம் எட்டுமணியைக் காட்ட, கூவியபடி புகைவண்டி வளைவில் திரும்பிக் கொண்டிருந்தது.

'என்னண்ணை இண்டைக்கு கொஞ்சம் நேரமாகிட்டுது போல' என்ற பக்கத்திலிருந்த கடைக்காரர் கேட்ட கேள்விக்கு அவசரமாய் பதில் சொல்லியபடி வந்து நின்ற ரயிலில் ஏறிக் கொண்டார் சந்திரசேகரர்.

யன்னலோர இருக்கையில் இருந்தபடி யன்னலூடாக அந்த நாய்களைப் பார்த்தார்.

கொஞ்சத்தைத் தான் சாப்பிட்டுவிட்டு மீதியைத் தன் சோடியை சாப்பிட விட்டு விட்டு அருகில் பார்த்துக்கொண்டிருந்தது அந்த ஆண் நாய்.

புகைவண்டி புறப்பட ஆயத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டு முடித்த இரு நாய்களும் யன்னலூடாக இவரைப் பார்த்து வாலாட்டியபடி ஓடி வந்தன.

ரயில் வேகமெடுக்கவும் அதன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவை நின்றபடி வாலாட்ட யன்னலால் கையை நீட்டி ஆட்டிக் காட்டிவிட்டு இருக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டார் சந்திரசேகரர்.

☆ ☆ ☆

இந்த ரயில் நிலையத்திற்கு எத்தனையோ பேர் வருகிறார்கள் போகிறார்கள், ஆனால் சந்திரசேகரரோடு மட்டும் அவை மிக நெருக்கம்.

குட்டியாய் இருக்கும் போதே அவற்றை யாரோ அங்கு கொண்டுவந்து விட்டு விட்டார்கள். பால் குடிக் குட்டிகளாய் உணவில்லாமல் அங்கும் இங்கும் அல்லாடித் திரிந்து கொண்டிருந்த குட்டிகளுக்கு வீட்டிலிருந்து பால் கொண்டுவந்து வைத்தார் சந்திரசேகரர். அவை சிறிது வளர்ந்ததும் வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வந்து வைப்பார் அல்லது பக்கத்திலிருந்த கடையில் ஏதாவது வாங்கிவைப்பார்.

இவரின் இந்தச் செயலை பரிகாசம் செய்யாதவர்களில்லை.

''எத்தின சனம் ஒரு நேரச் சாப்பாட்டுக்கே வழியில்லாமல் கிடக்குதுகள். இவர் இந்தத் தெரு நாயை ஊட்டி ஊட்டி வளக்கிறார். உந்தச் சாப்பாட்ட இல்லாத எளியதுகளுக்கு குடுத்தாலும் புண்ணியமாய்ப் போகும்.''

இப்படிச் சொல்லுபவர்கள் யாவரும் அந்த நன்றியுள்ள மிருகத்துக்கு கிஞ்சித்தும் கிள்ளிப்போடாத கஞ்சத் தனத்தார் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி கூட ஆரம்பத்தில் வேடிக்கையாகப் பேசினாலும் அவரின் குணவியல்பு அறிந்ததால் அவரும் விருப்புடனேயே அவைகளுக்கு சாப்பாடு கொடுத்தனுப்புவார்.

மாலையில் வீடு வந்ததும் அவைகளின் செய்கைகள் பற்றி அவர் ஆவலோடு மனைவியிடம் கூறுவார். அவரும் ஆவலோடு அவற்றைக் கேட்டு ரசிப்பார்.

வீட்டில் நாய், பூனை வளர்க்க வீட்டு உரிமையாளர் தடைபோட்டு விட்டார். பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இருந் தாலும் பொழுது போக கொஞ்சி விளையாடலாம். அதற்கும் வழியில்லை. அதனால் இந்த இரு நாய்களுமே இவர்களுக்கு குழந்தைகளாகிப் போனதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

வேலைக்குப் போகாத நாட்களில் கூட அவர் அங்கு போய் அவைகளுக்கு சாப்பாடு வைத்து விட்டுத்தான் வருவார். ஒரு நாளேனும் அவைகளைப் பார்க்காவிட்டால் அவருக்குத் தூக் கமே வராது.

அவைகள் மட்டும் இவரிடம் காட்டும் அன்பில் என்ன குறைச்சல்? பெற்ற பிள்ளைகள் கூட இத்தனை அன்பு காட்டுவார் களா? தம் காலில் நிற்க வெளிக்கிட்டதும் பெற்றவர்களைத் தள்ளி வைத்து விடுவார்களே!

தனக்குப் பேர் சொல்ல ஒரு பிள்ளை இல்லை என்ற குறை அவரிடம் இருந்தாலும் பிள்ளைகளைப் பெற்றவர்கள் படும் பாட்டைப் பார்த்து தன் மனதை அவர் தேற்றிக் கொண்டிருக் கிறார்.

அறுபது வயதைத் தாண்டினாலும் எந்தக் கவலை யுமின்றித் தான் இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாய் இருக்குமோ எனவும் அடிக்கடி அவர் நினைப்பதுண்டு.

இப்போது அவருக்கு எல்லாம் அந்த நாய்கள்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையிலும் இப்படித்தான். அவர் பயணித்த ரயில் மெல்ல மெல்ல நிலையத்தை நெருங்கும்போது சோடியாக நின்றபடி ஒவ்வொரு யன்னலாக அவைகளின் கண்கள் இவரைத் தேடும். கண்டு விட்டால் பின்னுடம்பாட வாலையாட்டி தம் சந்தோஷத் தைத் தெரிவிக்கும். இறங்கியதும் ஓடிவந்து அவர் மேல் பாய்ந்து, கால்களை நக்கி ஆர்ப்பாட்டமாய் இரண்டும் தம் அன்பைப் பகிர்ந்து கொள்ளும். புதியவர்கள் அவரை ஆச்சரியத் துடன் பார்த்துவிட்டுப் போவார்கள். பழையவர்கள் புன்னகை யுடன் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள்.

பக்கத்திலுள்ள கடையில் பணிஸ்சோ, பிஸ்கட்டோ ஏதா வது வாங்கி அவைகளுக்குப் போட்டுவிட்டு அவைகளுடன் சிறிது நேரம் பொழுதைக் கழித்துவிட்டுத்தான் வீட்டுக்கு போவார்.

அந்த நாய்களிடம் அவருக்குப் பிடித்ததே அவைகளுக் கிடையேயான அந்த அன்புதான். அவர் அவைகளை ஒரு சிறந்த காதல் ஜோடியாகவே காணுவார். அவற்றின் அன்பும் ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுக்கும் புரிந்துணர்வும் அவரை வெகு வாகப் பாதித்திருந்தது.

மனிதர்களில் கூட இப்படி ஒரு காதல் ஜோடியைக் காண முடிவதில்லை. எந்நேரமும் ஒன்றாகவே இருக்கும், ஒன்றாகவே தூங்கும், ஒன்றாகவே உண்ணும். ஆனால் அந்தப் பெண் நாய்க்காக ஆண் நாய் அதிகமாகவே விட்டுக் கொடுப்பதையும் அவர் அவதானித்திருக்கிறார்.

இதனைப் பார்க்கும்போது அவருக்கு இலக்கியத்தில் ஒரு குறுந்தொகைக் காட்சி ஞாபகத்தில் வருவதுண்டு.

காதல் மான் ஜோடி ஒன்று தாகத்துடன் அலைந்து கொண்டிருக்கும். அவைகளுக்கு குடிப்பதற்கு நீர் எங்கும் கிடைக்கவில்லை. ஓர் இடத்தில் நீர்ச்சுனையொன்றில் சிறிதளவு நீர் இருக்கிறது. ஆனாலும் அந்நீர் அவையிரண்டுக்கும் போதாது. இருந்தாலும் அவையிரண்டும் அந்நீரை அருந்துமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் மான் தாகம் தீர குடிக்கட்டும் என்று நினைத்து ஆண்மான் அந் நீர் மேல் வாயை வைத்து தானும் நீர் அருந்துவது போல் பாசாங்கு செய்யுமாம்.

அந்தக் காதல் மான்கள் தான் இந்த காதல் ஜோடிகளைப் பார்க்கும் போது அவருக்கு ஞாபகம் வரும்.

அன்றும் வழமை போல் வேலை முடிந்து வந்து ரயிலில் இருந்து இறங்கினார் சந்திரசேகரர். வழமையாக வரவேற்கும் அந்தக் காதல் ஜோடியைக் காணவில்லை.

சுற்றும் முற்றும் பார்த்தபடி கலக்கத்தோடு நடந்து சென் றார்.

தண்டவாளத்தின் மறுகரையில் சந்தோஷமாக அவை விளையாடிக் கொண்டிருந்தன.

அவரையும் அறியாமல் நிம்மதிப் பெருமூச்சொன்று வந்தது.

அவரைக் கண்டதும் பெண்நாய் துள்ளிக்குதித்து ஓடிவந் தது.

மறு பக்கத்தில் ரயில் ஒன்று நெருங்கி வந்து கொண்டி ருந்தது.

அதனையும் பொருட்படுத்தாமல் அந்தப் பெண் நாய் ஓடி வருவதைப் பார்த்து அவர் பதறிப் போனார்.

கடவுளே ரயிலில் அடிபடப் போகிறதே!

நல்லவேளை ஒரு நொடியில் தப்பிவிட்டது என்று ஆறுதல் படும் முன் எதிர்பாராமல் மற்றொரு அசம்பாவிதம் நடந்து விட்டது.

பெண் நாய் ஓடிப்போவதைக் கண்ட ஆண்நாய் ரயில் நெருங்கி வருவதையும் கவனிக்காமல் அதன் பின்னே ஓடிவந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கின்றது. பெண் நாய் தப்பிவிட ஆண் நாய் ரயிலின் சில்லுகளில் சிக்குண்டுவிட்டது.

ஒருவேளை பெண் நாய் ரயிலில் அடிபடப்போவதை உணர்ந்து அதைக் காப்பாற்ற அதன் பின்னே ஓடி வந்ததோ என்னவோ?

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த சம்பவத்தால் அப்படியே உறைந்து விட்டார் சந்திரசேகரர்.

ரயில் போய் முடிந்ததும் அந்த நாய் கிடந்த கோலம். ஐயகோ!

நாயின் தலையுடன் பாதி உடல் தண்டவாளத்தினுள்ளேயும் மீதி உடல் தண்டவாளத்தின் வெளியேயும் துண்டாடப்பட்டுக் கிடந்த கோலத்தை அவர் பார்க்க முடியாமல் தவித்தார்.

இவர் இப்படியென்றால் அந்தப் பெண்நாய் பட்டபாடு.

அதனருகே ஓடிச்சென்று அதன் உடலைச் சுற்றிச் சுற்றி வந்து குளறியது. அதன் முகத்தைத் தன் நாவினால் நக்கி கால்களால் தட்டி அதனை எழுப்ப முயற்சித்தது...

கையறு நிலையில் என்ன செய்வது எனத் தெரியாமல் அங்குமிங்குமாக ஓடி ஓடி ஊளையிட்டழுதது.

மண்ணைத் தன் கால்களால் பலம் கொண்ட மட்டும் விறாண்டி விறாண்டி வானம் பார்த்துக் குளறியது.

இந்தக் காட்சியைப் பார்த்து உருகாத நெஞ்சங்களே அங்கிருக்கவில்லை.

கையில் புத்தகங்களுடன் நின்ற இளந்தாரி வட்டங்களில் ஒன்று;

''டேய் பொம்பிளையளுக்குப் பின்னால போனால் கடைசியில எல்லாருக்கும் இதுதாண்டா கதி. இந்த நாய்க்கு நடந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கு உனக்கும் நடக்கலாமடா. கவனம் உன்ரை ஆளோட கொஞ்சம் பாத்து நடந்துகொள்'' என்று தன் சக கூட்டாளியின் தோளில் தட்டிச் சொல்லிக் கொண்டு போனது.

அந்தப் பெண் நாய் படும் பாட்டை சந்திரசேகரரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

சிலையாய் நின்றவர் மெல்ல மெல்ல உணர்வு பெற்றார்.

அந்த நாயின் அருகே சென்ற ஒருவர் தண்டவாளத்தில் கிடந்த நாயின் உடலை அப்புறப்படுத்த எத்தனித்தார்.

ஆனால் அந்தப் பெண் நாய் வெறி பிடித்தது போல அவர் மேல் பாய முற்பட்டது. அவர் விலகி நின்றார்.

நெஞ்சைக் கல்லாக்கியபடி மெல்ல அதன் அருகே சென் றார் சந்திரசேகரர்.

அவரைக் கண்ட அப் பெண்நாய் அவரை நெருங்கி வந்தது.

அருகில் நின்றவர்கள் ''கிட்டப் போக வேண்டாம்'' என அவரைத் தடுத்திழுத்தார்கள்.

அவர் அதனைப் பொருட்படுத்தாது நாயை நெருங்கினார். அது அவரின் நீள காற்ச் சட்டையை வாயினால் பிடித்திழுத்து இறந்த நாயின் அருகே கொண்டு சென்றுவிட்டது. அவரைப் பார்த்து ஊளையிட்டு அழுதது.

அவரின் நெஞ்சு கனத்தது.

கால்களை மடக்கி குந்தி அமர்ந்து பெண் நாயின் தலையை மிருதுவாகத் தடவி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த நாயின் தலையையும் மெதுவாகத் தடவி விட்டார்.

பெண் நாய் முனங்கி அழுதபடி அவரை நெருங்கி அமர்ந் தது.

சிறிது நேரம் அமர்ந்திருந்த பின் அதன் முன் பாதி உடலை மெதுவாகத் தூக்கினார்.

பெண்நாய் அமைதியாக இருந்தது.

அதன் மறு பாதியைத் தூக்க இன்னுமொருவர் உதவிக்கு வந்தார்.

அதனைப் புளிய மரத்தடிக்கு கொண்டு சென்றனர்.

அருகிலிருந்த கடைக்காரரின் உதவியோடு புளிய மரத்தின் கீழ் குழி ஒன்று வெட்டி நாயை குழியில் போட்டு உரப்பை ஒன்றினால் மூடித் தாட்டனர். சந்திரசேகரரோடு சேர்ந்து நாயும் அமைதியாக அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் எல்லோரும் போய்விட்டார்கள்.

சந்திரசேகரர் மரத்தின் கீழ் இருந்த குற்றி ஒன்றில் அமர்ந் திருந்தார்.

ஆண் நாயைப் புதைத்த இடத்தைச் சுற்றி வருவதும் குரைப்பதும், சிறிது நேரம் அதன் அருகே அமர்வதுமாக பெண் நாய் அந்தரித்துக்கொண்டிருந்தது.

நேரம் ஆறு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

மெல்ல எழுந்தார் சந்திரசேகரர், கடைக்குச் சென்று பணிஸ் ஒன்றை வாங்கி சிறுதுண்டுகளாய் பிய்த்து பெண் நாய்க்கருகில் வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் திரும்பிப் பார்க்காது அது தன் துணையின் புதைகுழியைப் பார்த்துப் பார்த்துக் குரைத்தது.

மெதுவாக அதன் தலையைத் தடவிக்கொடுத்து விட்டு திரும்பிப் பாராமல் விறுவிறு என வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

☆ ☆ ☆

**வீ**ட்டுக்கு வந்த சந்திரசேகரரின் கோலத்தைக் கண்டு பதறிவிட்டார் மனைவி.

‘‘என்னப்பா.... என்ன நடந்தது உங்களுக்கு?’’

‘‘எல்லாம் போச்சு. எல்லாம் முடிஞ்சு போச்சு சரசு.’’

‘‘என்னப்பா சொல்லுறிங்கள்?’’ எதுவும் புரியாதவராய் கேட்டார் மனைவி.

நடந்த சம்பவத்தைத் தட்டுத் தடுமாறிச் சொன்னார் சந்திரசேகரர்.

சம்பவத்தைக் கேட்டு அதிர்ந்து நின்ற மனைவி அவர் சத்தமிட்டு அழுததும் அவரருகே ஓடிச்சென்று அவரை ஆறுதல் படுத்தினார்.

‘‘இதுக்கு நான் தான் காரணம் சரசு... என்னக் கண்டிட்டுத் தான், விளையாடிக் கொண்டிருந்ததுகள் ஓடி வந்ததுகள். என்னாலதான் அது செத்துப்போச்சு...?’’ எனச் சொல்லிச் சொல்லி அழுதார்.

மனைவியின் தேற்றுதல் எதுவும் பயனின்றிப் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை மூடும் போதெல்லாம் அந்த நாய் கிடந்த கோலம் கண்முன் நிழலாடியது. இரவிரவாகத் தூக்கமின்றித் தவித்தார்.

☆ ☆ ☆

**கா**லையில் சந்திரசேகரருக்கு வேலைக்குப் போகவே மனமில்லை. வேலைக்கு விடுமுறை போட்டுவிட்டு இருந்தவர், வழமைபோல் மனைவி கொடுக்கும் 'பாசலை' வாங்கியபடி ரயில் நிலையம் நோக்கி நடந்தார்.

புளிய மரத்தின் கீழ் ஆண் நாயின் புதைகுழி அருகே படுத்திருந்தது பெண் நாய்.

அமைதியாக அதன் அருகே சென்றவர் காலை மடித்துக் குந்தி இருந்தார்.

நாய் சிறிதும் அரவம் இன்றிப் படுத்திருந்தது.

மெல்ல அதன் காலைத் தூக்கினார்.

அது விறைத்திருந்தது.

கையில் இருந்த 'பாசல்' கீழே விழ சந்திரசேகரரும் விறைத்துப்போனார்.

**- ஜீவ நதி : 2 ஆம் ஆண்டு மலர்.**

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய் மடி தேடி...

**ஆ**... அம்மா வந்திட்டா...!

இதோ... அம்மாவோட அப்பா, அக்கா, தம்பி எல்லாரும் வந்திட்டினம்.

எத்தனை நாள் இவையளைக் காணாமல் இந்த உடம்பு முழுக்க காயத்தோட நான் பட்ட வேதனை எல்லாம் அவையளக் கண்டவுடனைக்கு காற்றாய் கடந்து போயிட்டுது.

பாசத்தோட கிட்ட வந்த அம்மாவைக் கண்டவுடன். 'அம்மா' எண்டு கூப்பிட்டன்.

அம்மா கையை நீட்டியபடி கண்ணீரோடு ஓடி வந்து என்னைக் கட்டி அணைக்கின்றா.

அப்பா, அக்கா, தம்பி எல்லாரும் என்னைச் சுத்தி கட்டிலில் இருக்கினம்.

அம்மாவின்ர அணைப்பில எனக்கு அழுகை அழுகையாக வருகிறது. இத்தனை நாளும் அவையளப் பிரிஞ்ச ஏக்கம் என்னைப் பேசவிடாமல் தொண்டையை அடைக்கின்றது.

''அம்மா இவ்வளவு நாளும் என்னைத் தனிய விட்டிட்டு நீங்கள் எல்லாரும் எங்க போனனீங்கள் அம்மா.''

அம்மா ஒண்டும் பேசாமல் என்னைத் தன்ர நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டு அழுகிறா. அந்த அணைப்பு எனக்கு இதமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுக்காகத்தானே என்ர உடம்பில உள்ள காயங்களின் வலியோடு காத்திருந்தேன்.

இந்தக் காயங்களின்ர வலியை விட என்ர அம்மா, அப்பா, அக்கா, தம்பி எல்லாரையும் காணேல்லை எண்ட வலிதானே எனக்கு நிறைய இருந்திச்சி. இப்ப எல்லாரையும் கண்ட உடன என்ர உடம்பில இருந்த எல்லா வலியும் போயிட்டுது.

அம்மா என்ர தலையைத் தடவி விடுவது எனக்கு ஆறுதலாக இருந்தது.

அம்மாவை நிமிர்ந்து பார்த்தேன்.

என்ர பார்வையில எதைக் கண்டாவோ. அருவியாய் ஓடும் கண்ணீரோடு என்ர நெத்தியில இதமா ஒரு முத்தம் தந்தா.

அப்போது அம்மாவின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர்த் துளியொன்று என் கண்ணுக்குள் விழுந்ததும் என் இரண்டு கண்களையும் இறுக்கி மூடிக்கொண்டு சிறிது நேரம் இருந்தேன்.

என் கால் மாட்டில் இருந்த அப்பாவைப் பார்த்தேன்.

முழங்காலோடு மருந்து கட்டிய என்ர வலது காலை தன்ர மடியில வைத்து மெதுவாகத் தடவியபடி இருந்தார்.

''அப்பா'' எண்டு கூப்பிட்டன்.

அவர் என்னை நிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் தலை குனிந்தபடி அழுது கொண்டிருந்தார்.

அவரழுத கண்ணீர் என்ர முழங்காலில கட்டப்பட்ட பன்டேஜில் பட்டுத் தெறித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப் பார்த்தேன்.

அக்காவும் மணிக்கட்டோடு போன என் கையைத் தடவியபடி அழுது கொண்டிருந்தா.

தம்பி பெருவிரலை வாயில் வைத்துச் சூப்பியபடி என்னையே இமை வெட்டாது பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏன் எல்லாரும் என்னோட கதைக்காமல் அழுது கொண்டிருக்கிறியள்? என்னோட கதையுங்கோவன்.''

நான் குளறி அழுகின்றேன்.

குண்டுச் சத்தங்கள் பக்கத்தில் கேட்டுக் கொண்டிருக் கின்றன.

திடீரென எங்கேயோ இருந்து வந்த குண்டு ஒண்டு பெரிய சத்தத்தோட வெடிக்கிறது.

நாங்கள் இருந்த இடமெல்லாம் ஒரே புகை மண்டலம்.

நான் என்ர அப்பா, அம்மா, அக்கா, தம்பியைத் தேடினன். அந்தப் புகை மண்டலத்தோட அவையளும் மெல்ல மெல்ல மறைஞ்சு போய்க்கொண்டு இருக்கினம்.

நான் அவையள ''நில்லுங்கோ நில்லுங்கோ'' எண்டு கத்திக் கத்திக் கூப்பிடுகிறேன். அவையள் போயே விட்டினம்.

''அம்மா அம்மா!'' எண்டு கத்தியபடி நானும் அவை யளோட போகவேணும் எண்டு எழும்புறன் ஆனால் கட்டில விட்டு எழும்ப முடியேல்ல. என்ர உடம்பெல்லாம் என்னவோ செய்யிது. மூச்சு அடைக்குமாப் போல கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென யாரோ என்னை உலுக்குமாப் போல இருக்க கண்களைத் திறந்து பார்க்கிறன்.

அங்கே ‘நேஸ் அம்மா’ நிண்டு கொண்டிருந்தார்.

சுற்றும் முற்றும் பார்க்கிறேன். அந்த ஆஸ்பத்திரி வழமை போல இயங்கிக் கொண்டிருந்தது.

‘‘அம்மா, அம்மா’’ எண்டு என்ர வாய் முணுமுணுத்தபடி இருக்கிறது.

நான் கண்டது கனவு எண்டு விளங்கின பிறகு எனக்கு ஏமாற்றத்தில் அழுகையே வந்து விட்டது.

என்ர நிலமை அந்த நேஸம்மாவுக்கு விளங்கி விட்டது போல.

‘‘தம்பி என்னப்பன் செய்யுது? கனவு கண்டனிங்களோ? அப்பன் பயப்பட வேண்டாம். அம்மா அவை வருவினம் என்ன? பிள்ளைக்கு மாக் கரைச்சுத் தரவே குடிக்க?’’

என்ர தலையைத் தடவியபடி அன்போடு கேட்ட நேஸ் அம்மாவைப் பார்க்க எனக்கு அம்மா ஞாபகம் தான் வந்தது.

தொண்டை வரண்டது போல இருக்க மெல்ல தலையசைத்தேன்.

அவவும் மாவைக் கரைச்சு எனக்கு மெல்ல மெல்லப் பருக்கிவிட்டா.

‘‘தம்பிக்கு காருண்யன் தானே பேர்?’’

‘‘ம்... ம்.’’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எத்தினையாம் வகுப்புப் படிக்கிறியள்?''

''நான் இந்த வரிசம் ஆறாம் வகுப்புப் படிக்க வேணும். ஆனா சண்டையால பள்ளிக்கூடம் போகேலை. உங்களுக் கொண்டு தெரியுமே. நான் ஸ்கொலஸிப்பெல்லே பாஸ் பண்ணினனான். பெரிய பள்ளிக்கூடத்துக்குப் போக சப்பாத்து, பாக், புத்தகம் எல்லாம் புதுசா வாங்கி வைச்சுக் கொண்டி ருந்தனான். அதுக்குள்ள.''

''சரி, சரி. இனிக் காயம் மாற பள்ளிக்கூடம் போகலாம் தானே. நான் பிள்ளைக்கு அம்மா மாதிரி. என்ன வேணு மெண்டாலும் என்னட்ட கேளுங்கோ என்ன?''

''ம்''

''இந்தாங்கோ இது கந்தசஷ்டி கவசப் புத்தகம். முருகனை நினைச்சுக் கொண்டு இதைப் படிச்சீங்கள் எண்டால் உங்களுக்கு ஒரு பயமும் இருக்காது என்ன?'' சொன்னபடி அதை என்னட்டத் தந்திட்டு மெல்லமா தலையையும் தடவிப் போட்டுப் போய்விட்டா!

நான் இந்த வவுனியா ஆஸ்பத்திரிக்கு வந்ததில் இருந்து நேஸ்மாரும் டொக்டர்மாரும் என்னை மட்டுமில்ல எல்லாரையும் தான் அடிக்கடி வந்து பாத்து கதைச்சுப்போட்டுப் போவினம். என்னோட கன காயக்காரர் இந்த ஆஸ்பத்திரிக்கு வந்தவை. அதிலையும் என்னப்போல சின்னாக்கள் தான் கனக்க.

எங்களப் பாக்கிறதுக்கு எந்தச் சொந்தக்காரர்களையும் உள்ளுக்க விடாததாலை நேஸ்மார்தான் எங்கட எல்லா வேலையையும் பாக்கிறவை. கக்காக்கு, ஒண்டுக்குப் போனா லும், சத்தி எடுத்தாலும் அவையள் தான் கழுவித் துடைச்சு விடுவினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப என்னோட பேசின நேசுக்கு என்னில நல்ல விருப்பம். அவவில என்ர அம்மாவின்ர முகச்சாடை இருக்கிறதாலை எனக்கும் அவவில நல்ல விருப்பம். நான் அவவை 'நேஸம்மா' எண்டுதான் கூப்பிடுறனான்.

என்ர கையில அவ தந்திட்டுப் போன புத்தகத்தைப் பார்த்தன். 'ஆபத்து வேளையில் கைகொடுக்கும் கவசம்' என முருகன் படத்தோட அச்சிடப்பட்டிருந்தது.

'படிப்போர்க்குத் துன்பம் போம்.' என்று தொடங்கி 'சரணம் சரணம் சண்முகா சரணம்' என்ற இறுதி வரி வரை எனக்கு மனப்பாடம் ஆகி இருந்தது, அவவுக்குத் தெரியாது தானே.

மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சி, அங்க இருந்து புதுக்குடியிருப்பு என ஒவ்வொரு இடமா விமானக் குண்டு வீச்சுக்களாலேயும் பல்குழல் செல் வீச்சுக்களாலேயும் உயிரைப் பிடிச்சுக்கொண்டு ஓடிப்போகேக்கையும் நாள் கணக்காய் பதுங்கு குழிக்குள்ள இருக்கேக்கையும் இந்தக் கவசத்தைத்தானே வாயோயாமல் சொல்லிக் கொண்டிருந்தனாங்கள் எண்டது இவையளுக்கு எப்பிடித் தெரியும்?

இப்பிடி நாள் முழுக்க கவசத்தைச் சொல்லியும் என்ன பயன்? கடைசியிலை முருகன் கூட எல்லாரையும் கைவிட்டிட்டாரே!

அண்டைக்கும் அப்பிடித்தானே!

செல்லடி தொடங்கியதும் பதுங்கு குழிக்குள்ள ஓடுவம் எண்டு வெளிக்கிட மேல 'சுப்பசொனிக்' பெரிய இரைச்சலோட பறந்து வந்து குண்டு போட வீட்டுக்குள்ள இருக்க முடியாமலும் பதுங்கு குழிக்குள்ள போகமுடியாமலும் அந்திரிச்சுக் கொண்டு,

''காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்த சஷ்டி கவசத்தைச் சொல்லிக் கொண்டிருக்க அம்மா என்னையும் தம்பியையும் நிலத்தில் படுக்க வைத்து எம்மை அணைத்தபடி எமக்கு மேல அம்மாவும் படுத்துக்கொண்டா. அப்பாவும் அக்காவ அணைச்சபடி குப்புறப்படுத்தார்.

பெரிய சத்தத்தோடு பக்கத்தில விழுந்து வெடித்த குண் டால் உயிரே போனது போல இருந்தது. அதுக்குப் பிறகு என்ன நடந்ததெண்டு எனக்குத் தெரியேல்லை.

கண்ணை முழிச்சுப் பாக்கேக்க நிலத்தில விரிக்கப்பட்ட உரைப்பையில மரத்துக்குக் கீழ கிடந்தன்.

மரத்தின்ர கிளை ஒண்டில உயத்திக் கட்டப்பட்ட குளுக் கோஸ் என்ர இடக்கையில ஏறிக் கொண்டிருந்தது.

இப்போதைக்கு இதுதான் எங்கட ஆஸ்பத்திரி எண்டதை அறிஞ்சு கொண்டன்.

வலது கை மணிக்கட்டோட இல்லை, வலது கால் முழங்காலோட இல்லை எண்டதை அறிஞ்ச பிறகு இதுக்கு நான் செத்திருக்கலாம் எண்டுதான் நினைச்சன்.

அதைவிட தோள்மூட்டோட ஒரு பெரிய காயம், உடம் பெல்லாம் சரியான வலியாக இருந்தது. மருந்து கட்டேக்க செத்துச் செத்துப் பிழைக்க வேண்டி இருந்தது.

நான் மட்டுமல்ல என்னோட நூற்றுக்கணக்கான பேர் கால் கை இல்லாமலும் பெரிய பெரிய காயங்களோடையும் இருக் கினம். என்னவிட சின்னச் சின்னக் குழந்தையள், வயசு போனவை, பொம்பிளையள், ஆம்பிளையள் எண்டு அந்த இடமே காயக்காறரால நிறைஞ்சு வழிஞ்சுது.

சிலர் செத்துப் போனவையின்ர உடம்பை வைச்சு அழுது கொண்டிருந்திச்சினம். டாக்குத்தர், நேஸ்மார் ஓடி ஓடி காயக் காறரை கவனிச்சுக் கொண்டிருந்திச்சினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இந்த மரத்தடி ஆஸ்பத்திரிக்கு வந்ததில இருந்து என்னை ஒருத்தருமே வந்து பாக்கேல, அம்மாவையளுக்கு என்ன நடந்ததோ; எங்க இருக்கினமோ தெரியேல்ல. ஆளுக்காள் ஒவ்வொரு இடமா இடம்பெயர்ந்து போனதில பக்கத்தில சொந்தக்காரரும் இல்லை. ஆரும் தெரிஞ்சவையைக் கூடக் காணேல்லை.

எனக்கு அப்பா அம்மாவையப் பாக்கோணும் போல ஆசையா இருக்கு.

அண்டைக்கு திடீரெண்டு ஆரோ வந்தினம், என்னையும் இன்னும் காயக்காரரையும் வாகனத்தில ஏத்திக்கொண்டு வவுனியா ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்திச்சினம். அம்மா, அப்பா, சகோதரங்கள் எல்லாரையும் விட்டிட்டு நான் மட்டும் அநாதையா இஞ்ச இருக்கிறன்.

கையில இருந்த கந்த சஷ்டி கவச புத்தகம் கைதவறிக் கட்டிலுக்குக் கீழே விழுந்திட்டுது. அத அப்பிடியே விட்டிட்டன். எனக்கிப்ப கந்தசஷ்டி கவசமும் வேண்டாம் கடவுளும் வேண் டாம். அம்மாதான் வேணும்.

தோள் மூட்டுக்காயத்தால முள்ளந்தண்டு, முதுகெல்லாம் ஒரேவலி.

கால் கையில இருக்கிற காயத்தால கால் கையெல் லாம் வலிக்குது.

எனக்கு அம்மாவின்ர மடியில படுத்திருக்க வேணு மாப் போல இருக்கு. அம்மா இந்தக் காயங்கள தன்ர கையால தடவி விட்டாலே காணும் எல்லா வலியும் போய்விடும்.

இப்ப எல்லாரும் எங்க இருக்கினமோ எப்பிடி இருக்கினமோ தெரியாது? ஏன் என்னை ஒருத்தரும் வந்து பாக்கேல்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை கொள்ளேக்க எல்லாம் எல்லாரும் கன வில வருவினம். கனவு கலையேக்க எனக்கு கவலையாத்தான் வரும்.

ஆஸ்பத்திரியில இடைக்கிட ரி.வி. போட்டு விடுவினம். எனக்கு ரி.வி. பாக்கிற மன நிலையே இல்லை. இறுக்கக் கண்ணை மூடிக் கொண்டு நித்திரை கொள்ளப் பாப்பன். அப்பத்தானே கனவு வரும். கனவில அம்மா என்னைத் தன்ர மடியில வைச்சு தலையை கோதிவிடுவா.

வீட்ட அம்மாவோட படுக்கிறதுக்கு நாங்கள் மூண்டு பேரும் சண்டை பிடிப்போம். அம்மாக்குப் பக்கத்தில அவவுக்கு மேல கால்போட்டுக் கொண்டு படுத்தால் தான் எனக்கு நித்திரையே வரும்.

சுவரில் இருந்த மணிக்கூட்டைப் பார்த்தன். நேரம் ஏழு மணியைத் தாண்டி விட்டது. சிங்கள நிகழ்ச்சி ஒண்டு ரிவி யில் போய்க் கொண்டிருந்தது. சிறுவர்கள் விதவிதமாய் தங்களச் சோடிச்சுக் கொண்டு அந்த நடனப்போட்டி நிகழ்ச்சியில் ஆடிக் கொண்டிருந்திச்சினம். அவையள் கதைக்கிற மொழி எனக்கு ஒண்டும் விளங்கேல.

எனக்குப் பாட்டு, நடனம் எண்டால் நல்ல விருப்பம் எண்டதால அந்த நிகழ்ச்சியப் பாத்தன். அவர்கள் சந்தோஷமாக ஆடிப்பாடி கைதட்டி மகிழ்ந்திருந்திச்சினம். எல்லாரும் எங்கட வயசுப் பிள்ளையள் தானே! எங்களுக்கு மட்டுமேன் இந்தக் கஸ்டம்?

பள்ளிக்கூடத்தில கலைவிழா எண்டால் கட்டாயம் என்ர நடனமும் இருக்கும். விளையாட்டுப் போட்டியில எத்தின 'கப்' எடுத்தனான் தெரியுமே! தமிழ்த் தினப் போட்டியிலேயும் எத்தின பரிசு பெற்றனான். எங்கட கந்தசுவாமி கோயிலில அம்மா வைச்ச நேர்த்திக்காக ஒவ்வொரு திருவிழாவிலேயும் காவடி எடுக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனான். என்ர காவடியாட்டம் 'சுப்பரா' இருக்கெண்டு எல்லாரும் சொல்லுறவை.

அடுத்த முறை திருவிழாவுக்கு நான் செடில் குத்தி ஆடவேணும் எண்டு அம்மாவை ஆக்கினைப்படுத்தி ஓம்பட வைச்சன். பங்குனியில திருவிழா நடக்கிறது. நடக்கிற சண்டேக்க திருவிழாத்தான் நடக்குமோ? நடந்தாலும் என்னால தான் பழையபடி ஆடமுடியுமோ?

நடக்கவே ஆற்றையன் உதவி தேவைப்படேக்க, ம்! எல்லாம் கனவிலதான் முடியும்?

என்னைப் பாக்க ஆராவது வருவினம் எண்டு வாசலைப் பாத்துப் பாத்து ஏமாந்தது தான் மிச்சம். என்ர கைகால் புண் கொஞ்சம் கொஞ்சம் ஆறி வரேக்க எனக்கு ஒரு பொல் லொண்டத் தந்து மெல்ல மெல்ல நடக்கப் பழக்கிச்சினம். ஒற்றக் காலால தெத்தித் தெத்தி நடக்கப் பழகினன்.

இடது கையாலயும் மெல்ல மெல்ல எழுதப் பழகினன்.

திடீரெண்டு ஒருநாள் கொஞ்சப் பேர் வந்து என்னையும் என்னோட காயப்பட்டு சுகமடைஞ்சவையையும் வாகனத்தில ஏத்திக்கொண்டு போக வெளிக்கிட்டிச்சினம்.

என்னைப் பார்த்த நேஸம்மா என்னைக் கொஞ்சி என்ர தலையை தடவி விட்டா.

''எங்கள வீட்டுக்கே கூட்டிக் கொண்டு போகப்போகினம். அய்யா நான் என்ர அம்மா, அப்பா, அக்கா, தம்பி எல்லாரையும் பாக்கப் போறன். நான் போய் என்ர அம்மாட்ட கட்டாயம் உங்களப் பற்றிச் சொல்லுவன் நேஸம்மா. ஒரு நாளைக்கு நீங்களும் எங்கட வீட்ட வாங்கோ என்ன?"

அவ எதுவும் கதைக்காமல் என்னையே பாத்துக்கொண்டி ருந்தா. கண்ணால கண்ணீர் வடிஞ்சு கொண்டிருந்திச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் என்ர பிரிவை அவவால தாங்க முடியேல்லப் போல.

அவவோட கனநேரம் கதைக்கவிடாமல் என்னைத் தூக்கிக்கொண்டு போய் வாகனத்தில ஏத்திப் போட்டினம்.

நானும் அம்மாவைப் பாக்கப் போற சந்தோஷத்தில இருந்தன்.

புறப்பட்ட கொஞ்ச நேரத்திலேயே வாகனம் நிண்டுட்டுது. யன்னலால எட்டிப் பாத்தன். வரிசையா தகரத்தால அடிச்ச வீடுகள் வெய்யிலில பளபளத்துக் கொண்டிருந்திச்சு. அதச் சுத்தி கம்பி வேலி அடிச்சிருந்தது. உள்ளுக்க ஒரே சனம்.

எனக்கு ஒரே ஏமாற்றமாப் போச்சு. அதோடை அழுகையும் வந்திட்டுது.

எல்லாரையும் இறக்கி வாசலில நிண்டவேற்றை பேருகள் விபரங்கள் குடுத்த பிறகு உள்ளுக்க கொண்டுபோய் விட்டினம். என்னையும் இன்னும் நாலு பேரையும் ஒரு தகரக் கொட்டகைக் குள்ள கொண்டு போய்விட்டினம்.

எனக்குக் காயம் பட்ட கால் நிலத்தில் வைச்சபடி இருக்க கஸ்ரமா இருந்திச்சு. வசதியாய் இருக்க ஒரு கதிரை கூட இல்லை. உள்ளுக்க ஒரே வெக்கை. வாசல் பக்கமா இருந்தால் கொஞ்சம் காத்துவரும் எண்டு அரக்கி அரக்கி வாசலில போய் இருந்தன்.

ஆர் ஆரோ என்னைக் கடந்து போகினம், வருகினம் எல்லாற்ற முகத்தையும் உத்து உத்துப் பாத்தன். ஆரும் அறிஞ்சவை, தெரிஞ்சவை இருக்கினமோ எண்டு.

சிலவேளை என்ர அப்பா அம்மா கூட இஞ்ச இருக்கலா மெல்லோ?

ஆனால் அப்பிடி ஒருத்தரையம் காணேல்லை. எல்லாற்ற முகத்திலயும் ஒரே சோகம்தான். இவையளும் ஆராரைத் துலைச்சுப்போட்டு தேடித் திரியினமோ தெரியாது.

இடது கால நீட்டி ஒரு மரக்குத்தியோட சாஞ்சு இருந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோழியின் அலறல் சத்தம் என்னைத் திடுக்கிட வைச்சது. திரும்பிப் பாத்தன். அஞ்சாறு கோழிக் குஞ்சுகளுடன் தாய்க்கோழி மேல பாத்துக் கத்தியது.

அண்ணாந்து பாத்தன். பருந்து ஒண்டு கோழிக் குஞ்சு களை குறி பாத்து வட்டமடித்துக் கொண்டிருந்தது.

குஞ்சுகளுடன் பதுங்குவதற்கு இடமில்லாமல் கோழி அந்தரிச்சுக் கொண்டு நிண்டது.

ஓடிச்சென்று தன்ர குஞ்சுகளை தன் சிறகால அணைச்சுக் கொண்டது.

நானும் இப்பிடித்தானே அண்டைக்கு குண்டு விழேக்க அம்மாண்ட அணைப்பில இருந்தன். இப்ப என்ர அம்மா?

கோழியின் அகோரச் சத்தம்.

பருந்து கோழியைத் தள்ளிவிட்டு குஞ்சொன்றைக் கால்களில் தூக்கியபடி சுப்பர்சொனிக் குத்திக் குண்டு போட்டிட்டு எழும்புவதைப் போல சடாரென மேலெழுந்து பறந்தது.

தாய்க் கோழியும் குஞ்சுகளும் அவலக் குரலில் கத்திக் கொண்டிருந்தன.

பருந்தின் கால்களில் சிக்குண்ட குஞ்சின் அவலச் சத்தம் என்ர காதில விழுந்தது. எனக்கு என்னவோ செய்தது. மெல்ல மெல்ல அந்தக் குஞ்சின் சத்தம் நின்று போக எனக்கு மயக்கம் வருமாப் போல் இருந்தது.

மெல்ல அந்த மரக்குற்றியோட சாய்ந்து கண்களை இறுக்கி மூடிக் கொண்டேன்.

- ஞானம்: ஆகஸ்ட் 2009

☆ ☆ ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சில்

## 1978

"டேய் நாசமாய் போனவனே.... என்ன காரியம் செய்து விட்டாய். சீச்சீ.... அசிங்கம் அசிங்கம்... பாழாய்ப் போன எளிய சாதியே... என்ன துணிச்சல் உனக்கு உன்னை... உன்னை என்ன செய்யிறன் பார்.''

வேலாயுதத்தாரின் கோபாவேச கர்ச்சனையைக் கேட்டு அருகில் தென்னைமர உச்சியில் நின்ற கந்தன் திடுக்கிட்டுத் திரும்பிக் கீழே பார்த்தான்.

தேங்காய் பறிக்கும் போது திடீரென வேகமாக வீசும் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அங்குமிங்குமாய் மரம் சுழன்றடிக்கும் நேரத்தில் பதறிப்போகும் மனம் போல் பதறிய நெஞ்சத்துடன் கீழே சறுக்கியபடி வந்தான்.

நெருப்பில் நிற்பது போல் கோபத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தார் வேலாயுதத்தார். எதிரில் நிற்கும் சிறுவனை தன் கையால் அடித்தால் தீட்டாகிவிடுமே என்று அந்தக் கோபத்திலும் உணர்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தார். சற்றுத் தள்ளி நின்ற கொய்யா மரத்தை நோக்கி வேகமாக ஓடினார்.

அந்த ஆறு வயதுப் பாலகனோ பருந்தைக் கண்ட குஞ்சு போல பயத்தினால் கூனிக் குறுகி நடுங்கிக் கொண்டிருந்தான். எண்ணெய் வற்றிய செம்பட்டைத் தலை. உடல் முழுதும் செம்மண் புழுதி. காற்சட்டை மட்டும் அணிந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது வீட்டுக் கூரையின் ஓட்டைகள் போல் அவன் அணிந்திருந்த காற்சட்டையிலும் ஆயிரத்தெட்டு ஓட்டைகள். கால்களில் செருப்பும் இல்லை.

வேலாயுதத்தாரின் கடுங் கோபத்தால் மிரண்டுபோன அவன், அவர் இந்தளவுக்குக் கோபப்படும்படி தான் என்ன தவறு செய்தேன் என்று புரியாமலும் என்ன நடக்கப் போகிறதோ என்ற பயத்தினாலும் விழி பிதுங்கி உடல் நடுங்கி நின்றான்.

தன் கணவரின் கர்ச்சனை கேட்டு வீட்டினுள் சமையல் வேலையில் மும்மரமாக இருந்த தனவல்லியும் பதறியடித்து ஓடிவந்தார். அதற்குள் கொய்யாத் தடி ஒன்றினை முறித்துக் கொண்டு வந்த வேலாயுதத்தார் சிறுவனின் காலின் கீழே ஒரு போடும் போட்டு விட்டார்.

சிறுவன் துடித்துப்போனான்.

‘‘அப்பா'' என குளறியழுதபடி அப்போது தான் மரத்தால் இறங்கி வந்த கந்தனை ஓடிச் சென்று கட்டிக் கொண்டான்.

‘‘ஏனப்பா அந்தக் குழந்தைக்கு அடிச்சனீங்கள்....?'' ஓடி வந்த தனவல்லி மூச்சு வாங்கக் கேட்டாள்.

‘‘குழந்தையோடி உவன் என்ன காரியம் செய்தா னெண்டு உனக்குத் தெரியுமே? குழந்தையாம் குழந்தை மூதேவிக்கு இன்னும் நாலு போடவேணும்'' எனத் தடியை ஓங்கியபடி சிறுவன் முன் சென்ற வேலாயுதத்தாரை கந்தன் கையெடுத்துக் கும்பிட்டபடி மறித்தான்.

‘‘ஐயா. அவன் சின்னப் பிள்ளை அவனை அடியாதை யுங்கோ. உங்கட காலில வேணுமெண்டாலும் விழுறன்.''

‘‘உனக்கு எத்தினதரமெடா சொல்லுறனான் தேங்காய் புடுங்க வரேக்க உன்ர வாரிசுகளை கூட்டிக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராதையெண்டு. வந்தா சும்மா இருக்குதுகளே. அதையிதைத் தொட்டுத் தீட்டுப்படுத்திறாங்கள்."

சிறுவன் மேலிருந்த வேலாயுதத்தாரின் கோபம் இப்போது கந்தன் மேல் சீறிப் பாய்ந்தது.

''ஐயா இந்த ஒரு தடவை மன்னிச்சுக்கொள்ளுங்கோ. இனி இப்பிடி நடக்காது." என்ற கந்தன், மகனிடம் திரும்பி. ''என்னடா செய்தனி." எனக் கோபத்தோடு கேட்டான்.

விக்கி விக்கி அழுது கொண்டிருந்தவன். ''இல்லையப்பா. நான்... நான் ஒண்டும் செய்யேல்ல."

''டேய். றாஸ்கல். பொய் சொல்லாதை" என வேலாயுதத்தார் கையோங்க தந்தையின் இடுப்பைப் பிடித்தபடி அவர் பின் ஒளிந்து கொண்டான் சிறுவன்.

''விடுங்கப்பா. அவனை. சின்னப் பொடியனைப் போட்டு அடிக்கிறீங்கள். அப்பிடி என்ன தான் அவன் செய்து போட்டான். சொன்னால் தானே தெரியும்" ஆற்றாமையோடு கேட்டாள் தனவல்லி.

''என்ன செய்தவனோ. நீ எனக்குக் குடிக்க தண்ணி கொண்டு வந்த செம்பை இதில வைச்சிட்டு அங்கால போறதுக் கிடையில எந்தப் பக்கத்தால வந்தானோ தெரியாது. வந்து செம்பில தொட்டுட்டான். என்ன துணிச்சல் உவனுக்கு." மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கக் கத்தினார் வேலாயுதத்தார்.

''தண்ணி... விடாய்ச்சிது... அதுதானப்பா... குடிக்க." விம்மலுடன் சிறுவன் சொல்ல முன்;

''சிரட்டையில குடிக்கிற நாயளுக்கு. செம்பில தண்ணி கேக்குதோ." சீறிப் பாய்ந்தார் வேலாயுதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விடுங்கோ அப்பா அவன் சின்னப் பிள்ளை தெரியாமல் செய்திருப்பான். அதுக்காக அவனை இப்பிடியே அடிக்கிறது. இவனின்ர வயசில எங்களுக்கும் ஒரு பிள்ளை இருக்கெல்லே?''

''எங்கட பிள்ளையும் இவனும் சரி சமனோடி. இதில நிண்டு விசர்க்கதை கதையாமல் அங்கால போ. டேய் கந்தன் உன்ரை பிள்ளையக் கூட்டிக் கொண்டு நீயும் நடையைக் கட்டு. தனிய வந்து தேங்காய் புடுங்கிற தெண்டால் புடுங்கு. இல்ல வராதை.''

''ஐயா, மன்னிச்சுக் கொள்ளுங்கோ இனிமேல் இப்பிடி...''

''சரி சரி போ போ'' என்று அலட்சியமாய் சொன்னவர் திரும்பி இந்தப் பிரச்சனைக்கு காரணமான தொட்டிக்கட்டில் வைக்கப்பட்ட செம்பைப் பார்த்தார். அந்த 'சில்வர்' செம்பில் அவர் முகம் விகாரமாய்த் தெரிந்தது. நடந்தவற்றைப் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்த செம்பு தன்னைப் பார்த்து பழிப்பது போல் இருந்தது அவருக்கு.

''சீ இனி இந்தச் செம்பை யார் பாவிப்பது?''

கையில் இருந்த தடியை செம்பினுள் விட்டு செம்பைத் தூக்கினார். அந்தப் பிஞ்சின் தாகத்துக்கு உதவாத தண்ணீர் வீணே கொட்டியது. அதனை அப்படியே கொண்டு சென்று குப்பையினுள் தடியோடு சேர்த்து வீசி விட்டுச் சென்றார் வேலாயுதம்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1991

வெளியே போன வேலாயுதத்தார் விறுவிறு என வீட்டுக்கு வந்த கோலத்தைப் பார்த்ததுமே வெளியே அனலாக எரிக்கும் சூரியனின் சூடு அவரையும் தொற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது.

வந்த வேகத்தில் தோளில் இருந்த சால்வையைத் தூக்கி கதிரையில் போட்டவர் வேட்டியையும் மடித்துக் கட்டிக் கொண்டார்.

''எடியே தனவல்லீ. எங்கேயடி உன் பிள்ளை. கூப்பிடு அவனை.'' அடுப்படியில் வேலையாய் நின்றவள் ஓடி வந்தாள்.

''என்னப்பா என்ன நடந்தது?''

''இன்னும் என்ன நடக்க வேணும். ஊர் பள்ளிக் கூடத்தில சாதி கெட்டதுகளோட சேர்ந்து திரியிறான் எண்டு ரவுண் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி. அவர் கேட்ட தெல்லாம் வாங்கிக் குடுத்து படிக்கவைச்சு. 'கம்பஸ்' சுக்குப் போவா னெண்டு பாத்தால். கோட்டை விட்டிட்டு வந்து நிக்கிறான்.''

''மகன் பாஸ் பண்ணயில்லை எண்டது முந்தநாளே உங்களுக்குத் தெரியும் தானே. அப்ப பேசாமல் இருந்திட்டு இப்ப வந்து என்ன சமா வைக்கிறியள்?''

''இப்பதானே இன்னொரு விஷயம் கேள்விப்பட்டன்.''

''என்ன விஷயம்?''

''அந்த எளிய சாதி கந்தன்ர மகனுக்கு கம்பஸ் கிடைச்சிருக்காம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களுக்கு உங்கடை பிள்ளைக்கு கம்பஸ் கிடைக் கேலை எண்ட கவலை இல்லை. கந்தன்ரை பொடியனுக்கு கம்பஸ் கிடைச்சிட்டுது எண்டதுதான் கவலை.''

''ஏய் நீ வாயை மூடு தின்னக் குடிக்க வழியில்லாமல் திரிஞ்சதுகள் படிச்சுப் பாஸ் பண்ணீட்டுதுகள். இவனுக்கு கேட்டதெல்லாம் வாங்கிக் குடுத்தன். எங்கட மானத்தையே வாங்கிப் போட்டான். பள்ளிக்கூடத்துக்குப் போடச் சப்பாத்தில் லாமல் தேஞ்ச செருப்பும் கிளிஞ்ச உடுப்பும் போட்டுக் கொண்டு திரிஞ்ச கீழ் சாதிப்பயல் பாஸ் பண்ணீட்டான். என்ர பிள்ளை. என்ர பிள்ளை பெயிலாயிட்டான். எங்கட சாதிக்கே அவமானம். தாங்க முடியேல்ல. எல்லாம் உன்ர வளப்பு. கள்ளு வித்தெண்டா லும் கந்தன் மகனை கம்பஸ்சுக்கு அனுப்பிப் போட்டான் எண்டெல்லே சனம் பெருமையாய் பேசுது. ஊரில என்னால தலைகாட்ட முடியேல்ல. சீ. எங்கேயடி அவன்.''

''அவன் வீட்டில இல்ல. வெளியில எங்கேயோ போட் டான்.''

''எளியதுகளோட எங்கேயும் ஊர் சுத்திப்போட்டு வரு வான். வரட்டும் ரெண்டில ஒண்டு பாக்கிறன்.''

கந்தனின் மகனுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத் ததை பொறுத்துக் கொள்ள முடியாத வேலாயுதத்தார் தான் சமூகத்தின் முன் தரம் தாழ்ந்து விட்டதாய் உணர்ந்தார். அதனால் தனது ஒரே மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்து விட்டு தன் மகன் வெளிநாட்டுக்கு படிக்கப் போயிருக்கிறான் என மார்தட்டிக் கொண்டார்.

☆ ☆ ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009

தன்னையே நம்பமுடியவில்லை வேலாயுதத்தாருக்கு. கண்ணாடி முன் நின்று மீண்டும் மீண்டும் தன்னையே சுற்றிச் சுற்றிப் பார்த்தார். கழுத்தில் தொங்கிய 'ரையை' பலமுறை சரிசெய்து கொண்டார். அணிந்திருந்த ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் இரண்டு கைகளையும் வைத்தபடி சப்பாத்து சத்தம் எழுப்ப முன்னும் பின்னும் நடந்து பார்த்தார்.

''சா கோட் சூட்டில நான் சோக்காத்தான் இருக்கிறன்." கண்ணாடி காட்டிய விம்பத்தை அவரால் நம்பமுடிய வில்லை. ''தனவல்லி இருந்தாள் எண்டாள் வாயில கைவைத் திருப்பாள். பாவம் அற்ப ஆயுளில் போய்விட்டாள். என்ர இந்த ராஜாக் கோலத்தையும் இந்த லண்டனையும் பார்க்க அவளுக்குத் தான் கொடுப்பினை இல்லை."

''அப்பா நேரம் போகுதெல்லே. இவ்வளவு நேரமாய் கண்ணாடிக்கு முன்னால நிண்டு என்ன செய்யிறியள்?"

தன்னைத் தானே ரசித்துக் கொண்டிருந்தவர் மகனின் குரல் கேட்டதும் ''இந்தா வந்திட்டன் ஏன் இப்பிடி அவசரப் படுறாய்?" என்றபடி அறையை விட்டு வெளியே வந்தார்.

மனைவி இறந்த சில மாதங்களிலேயே வேலாயுதத்தார் லண்டனுக்கு மகனிடம் வந்துவிட்டார். வேட்டியும் சறமும் கட்டித் திரிஞ்ச மனுசனுக்கு வெள்ளைக்காரனின் உடுப்பு முதலில் சிரமத்தைத் தந்தாலும் தன்னை அறுபதிலும் அழகாயும் இளமை யாயும் காட்டுவதால் அதனையே விரும்பி அணிந்து பழக்கப் படுத்திக் கொண்டார். இப்போது மகனின் நெருங்கிய நண்பனின் திருமணத்திற்கு மகன் குடும்பத்தாருடன் புறப்பட்டு விட்டார்.

☆ ☆ ☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம் நிறைந்த சனம்.

வந்தவர்களின் அலங்காரத் தோற்றங்கள் அவர்களின் செல்வந்தத் தனத்தை வெளிக்காட்டியது.

எல்லோரும் தன் மகனுக்கு கைலாகு கொடுத்து ஆங்கிலத்தில் உரையாடியபோது வேலாயுதத்தாருக்கு பெருமை யாக இருந்தது.

'என்ரை மகன் கம்பஸ் போகாட்டி என்ன இத்தனை பெரிய பணக்காரர்களை நண்பர்களாகக் கொண்டிருக்கிறான். என்ன மாதிரி ஆங்கிலம் கதைக்கிறான். அந்த கந்தன்ர மகன் இப்ப நானேன் அதுகளை நினைக்கவேணும்? கம்பஸ் போனவன் இப்ப ஊரில எங்கேயேனும் மரமேறிக் கொண்டுதான் இருப்பான்.'

கெட்டி மேளம் கொட்ட தாலி கட்டி முடிந்தது.

வந்தவர்கள் அறுகரிசி போட்டு மணமக்களை வாழ்த்தத் தொடங்கினர். வேலாயுதத்தாருக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.

காலையிலும் வரும் அவசரத்தில் சாப்பிடாமல் விட்டதை இப்போது தான் உணர்ந்தார். சாப்பாடு இருக்கும் இடத்திற்குச் சென்றார். ஏற்கனவே ஒரு சிலர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அடுக்கி வைக்கப்பட்ட தட்டுக்களில் ஒன்றை எடுத்து விதம் விதமாக வைக்கப்பட்டிருந்த உணவுகளை எடுத்துக் கொண்டார். சாப்பிடத் தொடங்கிய போது தான் கவனித்தார். தான் இருக்கும் மேசையின் எதிரில் குழந்தையுடன் தன் மகனின் வயதை ஒத்த ஒருவன் இருப்பதை. குழந்தையை மேசையில் இருத்திவிட்டு தட்டில் இருந்த சோற்றை தானும் சாப்பிட்டு குழந்தைக்கும் ஊட்டிக் கொண்டிருந்தான் அவன். குழந்தை சாப்பிட அடம் பிடித்து சிணுங்கிச் சிணுங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென வேலாயுதத்தாரின் தட்டில் இருந்த சிவப்பு நிற இனிப்பு வகை ஒன்றைக் காட்டி அதைத் தரும்படி குழந்தை அழுதது.

''அது தாத்தா சாப்பிடுறது. உங்களுக்கு இஞ்ச இருக்கு.'' என்றபடி தனது தட்டில் இருந்த இனிப்பை குழந்தையிடம் கொடுத்தான் அவன். குழந்தையோ இவரின் தட்டில் இருக்கும் இனிப்புத் தான் வேண்டுமென அடம் பிடித்தது.

அதனைப் பார்த்துக் கொண்டு வேலாயுதத்தாரால் சும்மா இருக்க முடியவில்லை. அழுது கொண்டிருந்த குழந்தையிடம் தன் தட்டில் இருந்த இனிப்பைக் கொடுத்தார்.

''ஐயா, உங்களுக்கு.''

''பறவாயில்லைத் தம்பி குழந்தை தானே.''

''இந்தாங்கோ இதை நீங்கள் சாப்பிடுங்கோ.'' என தனது தட்டில் இருந்த இனிப்பை அவரது தட்டில் வைத்தான் அவன். அவரும் இனிப்பின் மேலுள்ள ஆசையில் அதனை எடுத்துச் சுவைத்துச் சாப்பிட்டார்.

☆ ☆ ☆

**வீ**ட்டில் அன்றைய இரவுச் சாப்பாட்டின் போது போய் வந்த திருமணம் பற்றிய பேச்சு வந்தது.

''உன்ர சினேகிதன் நல்ல பணக்காரன் போல'' தன் மனதில் பட்டதை மகனிடம் கேட்டார் வேலாயுதம்.

''பின்ன. நல்ல உத்தியோகத்தில் எல்லே இருக்கிறான். அது சரியப்பா. உங்கள ஒராளுக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டும் எண்டு நினைச்சனான் மறந்து போனன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆரது?''

''அதுதானப்பா, நீங்கள் சாப்பிடேக்க உங்களுக்கு முன்னால ஒரு குழந்தைப் பிள்ளையோட இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தானே.''

''ஓமோம் ஆர் அது ஆளப் பாக்கவே வசதியான இடத்தாள் மாதிரித் தான் தெரிஞ்சுது. மகளோடையே இங்கிலிசில தான் கதைச்சுக் கொண்டிருந்தவர்.''

''நான் ஆரெண்டு சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்.'' கொடுப்பிற்குள் சிரித்தபடி சொன்னான் மகன்.

''சரி ஆரெண்டு சொல்லன்''

''அது எங்கடை கந்தன்ர மகன்.''

''என்னது?''

சாப்பிட்டுக் கொண்டிருந்தவரின் தொண்டைக்குள் இறங்க மறுத்த உணவு அப்படியே நின்று விட்டது.

தந்தையின் அதிர்ச்சியை உணராத தனயன் தொடர்ந்தான்.

''கம்பஸ் முடிஞ்சதும் புலமைப்பரிசில் கிடைக்க லண்டனுக்கு வந்திட்டான். நல்ல உத்தியோகத்தில இருக்கிறான். அவனுக்குக் கீழ தான் நான் வேலை பாக்கிறன். கை நிறையச் சம்பாதிக்கிறதால சொந்த வீடு வாசல் எண்டு வசதியா வாழுறான். அவன் உங்களையும் அடையாளங் கண்டிருக்க மாட்டான்.''

மகன் சொல்லிக் கொண்டு போவதைக் கேட்கக் கேட்க அதிர்ச்சியில் உறைந்து போன அவருக்கு புரைக்கேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சந் தலையில் நாலு தட்டுத் தட்டி தண்ணீரை மடமடவெனக் குடித்தார். மேலும் சாப்பிடப் பிடிக்காதவராய் அவ்விடத்தை விட்டு அகன்றார்.

☆ ☆ ☆

நேரம் இரவு பதினொரு மணியையும் தாண்டி விட்டது.

வேலாயுதத்தாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. படுத்துப் பார்த்தார் நித்திரையும் வரவில்லை. எழும்பி அங்கும் இங்கும் அறைக்குள் நடந்தார். முதல் நாள் நல்ல விருந்துண்டு விட்டு மறுநாள் காலை, காலைக் கடனைக் கழிக்க ஒரு இடவசதி யில்லாமல் வயிற்றுள் பிசையும் வலியுடன் அவதிப்படுபவர் போல் அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார்.

சீச்சீ, இன்னாரென்று தெரியாமல் போய்விட்டதே!

சே, என்ன காரியம் செய்து விட்டேன்?

ஒரு ஒரு எளிய சாதியின்ரை எச்சில் தட்டில இருந்து, ச்சா ஒரு அற்ப இனிப்பால இத்தனை நாள் கட்டிக் காத்த ஆச்சாரம் போய்விட்டதே. நினைக்கவே வயிற்றைப் புரட்டியது. சத்தி வருமாப் போல இருக்கக் குளியலறைக்குள் ஓடினார், ஓங்காளித் தார்.

இந்நேரத்திற்கு சாப்பிட்டதெல்லாம் செமித்துப் போயிருக் குமே!

'ச்சா, போயும் போயும் ஒரு எளிய சாதியின்ர எச்சிலச் சாப்பிட்டிட்டன். அதை வேற ஆரார் பாத்தினமோ. கடவுளே! நானென்ன செய்வன்.' மீண்டும் மீண்டும் அதே நினைவு இருக்கவும் முடியாமல், நிக்கவும் முடியாமல் படுக்கவும் முடியாமல் அந்தரப்பட்டார் வேலாயுதத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வருடங்களுக்கு முன் செம்பில் தெரிந்த அவரது விகார முகம் மீண்டும் மீண்டும் ஞாபகத்திற்கு வந்து எரிச்சலை ஏற்படுத்தியது. கடிகார முள் மூன்று மணியைக் கடந்து சென்று கொண்டிருந்தது. இவரின் மனமுள் மட்டும் நேற்றைய கல்யாணச் சாப்பாட்டிலேயே நிலைத்து நின்றது.

பொழுது விடிந்தும் மனம் விடியவில்லை.

☆ ☆ ☆

**வே**லைக்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த மகன் தன் அறையில் இருந்து வந்த தந்தையின் முகத்தைப் பார்த்ததும் ‘‘என்னப்பா உடம்பேதும் சரியில்லையா?’’ என அக்கறையோடு விசாரித்தான்.

அவனின் விசாரிப்பை உணராதவர் போல் ‘‘நீ சரியாத் தான் ஆளைப் பாத்தனியோ?’’ என்றார், யோசனையோடு.

‘‘ஆரையப்பா என்னப்பா சொல்லுறியள் எனக்கு விளங் கேல?’’

‘‘இல்ல நேற்றைக்குக் கலியாண வீட்டில எனக்கு முன்னால இருந்து சாப்பிட்டது கந்தன்ர மகனெண்டு சொன்னனி யல்லோ. ஆளைச்சரியாப் பாத்துத்தான் சொன்னனியோ.’’

நம்ப மாட்டாமல் கேட்டார் வேலாயுதத்தார்.

“அவனுக்கு கீழே தான் நான் வேலை செய்யுறன் எண்டுறன். அப்பிடி ஆள் தெரியாமல் சொல்லுறனே. அதுக்கிப்ப என்னப்பா?’’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘இல்லையடாப்பா நேற்று அவன்ர அவன்ர தட்டில இருந்த இனிப்பை வாங்கிக் திண்டிட்டன். அவன்ர எச்சில் தட்டில சீ என்ரை உடம்பே தீட்டாகிப் போச்சு.’’

தந்தையின் மனப் போக்கை அறிந்து கொண்ட மகன்.

‘‘என்ன கதை கதைக்கிறியள்? இன்னும் நீங்கள் மாறேலேயே? கந்தனும் வேலாயுதமும் ஒண்டென்பதை எப்பதான் புரியப் போறியளோ? உங்களத் திருத்தவே ஏலாது. சரியப்பா. அந்த தீட்ட என்னத்தைப் போட்டு கழுவப்போறீங்கள். அப்ப செம்பைத் தூக்கி எறிஞ்சீங்கள் இப்ப?” என்று கேட்டபடி அருகில் நின்ற தந்தையை மேலிருந்து கீழாக ஒரு பார்வை பார்த்துவிட்டு தன் கைப்பையையும் கார்ச் சாவியையும் எடுத்துக்கொண்டு விருட்டெனச் சென்றுவிட்டான்.

மகன் கேட்ட கேள்வியாலும் தன்னைப் பார்த்த பார்வை யாலும் சிலையாகி நின்றார் வேலாயுதத்தார்.

☆ ☆ ☆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. Bhuvanendharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"காா்த்திகாயினியின் சிறுகதைகளில் அவரது மனிதநேயம் மிளிர்கின்றது. அவர் தனது கதைகளில் சமூக அக்கறையை வெளிப்படுத்தியுள்ளதுடன், போரினால் மக்களுக்கு ஏற்பட்ட அவமானங்கள், பாதிப்புக்கள், இழப்புகள், துன்பதுயரங்கள் போன்றவற்றை துல்லியமாக இலாவகமாக வெளிக்கொணர்ந்துள்ளார். அதேவேளை குடும்ப உறவுகள் பந்தபாசங்கள் தனி மனித உணர்வுகள் சமூக அக்கறை ஆகியவற்றை கார்த்திகாயினி கலைத்துவத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்."

- நீர்வை பொன்னையன்

"பாத்திரங்களின் உள்ளக் குமுறல்களை, அவலங்களை, ஏக்கங்களை, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் அதுவும் இளஞ் சிறார்களின் உளப்பாங்கினை எழுத்தில் வடிப்பதில் கார்த்திகாயினி வல்லவராய் விளங்குகிறார்."

- புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

"கார்த்திகாயினி ஒரு எழுத்தாளராக மட்டும் இல்லாமல் ஒரு பத்திரிகையாளராகவும் இருப்பதால் சமூகத்தின் பிரச்சினைகளை உள்ளார்ந்தமாகப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு அதிகமாகவே கிடைத்திருக்கலாம். தனது கதைக்கான பாத்திரங்களைத் தேடி அவர் வெகு தொலைவுக்குச் சென்றிருக்கவில்லை. அவரைச் சுற்றியுள்ள மக்கள் தான் அவரது கதைக்கான பாத்திரங்களாக அமைந்திருப்பது யதார்த்தமாகக் கதையைச் சொல்ல உதவியிருக்கின்றது."

- பாரதி இராஜநாயகம்

ISBN:978-955-53158-0-7

மீரா பதிப்பக வெளியீடு - 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org